விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது —— Valampurii ——

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 20 வெள்ளிக்கிழமை (03.06.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 166

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# மனித உரிமைகளைப் பேணும் எம் மீது மீறல் குற்றச்சாட்டா?

## கேள்வி எழுப்புகிறார் பிரதமர்



(கொழும்பு)

மனிதவுரிமை மீறல்களில் ஈடுபடுகின்ற வளர்ச்சி அடைந்த சில நாடுகள், மனிதவுரிமைகளைப் பாதுகாத்து வருகின்ற எம்மைப் போன்ற மூன்றாம் மண்டல நாடுகளிலேயே மனிதவுரிமை மீறல்கள் இடம்பெறுவதாக கூறுவது ஆச்சரியமான விடயம் என்று பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## தனித் தமிழீழம் அமைவதற்கு உலக நாடுகள் உதவவேண்டும்

### ஐரோப்பாவில் வைகோ உரை



(பிரசெல்ஸ்)

ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இடதுசாரி பசுமைக் கட்சிகள், தமிழீழ மக்கள் அவைகளின் அனைத்துலகச் செயலகம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்திருந்த ஈழத் தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினை குறித்த கருத்தரங்கில் ஈழத் தமிழ்மக்களுக்கு வசந்தம் விடிய உலகின் ஜனநாயக நாடுகள் வழிகாட்ட வேண்டும் என மதிமுக (20ஆம் பக்கம் பார்க்க)



யுத்த வெற்றி அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் சர்வதேசக் கருத்தரங்கின் இறுதி நாளான நேற்றைய நிகழ்வுகளில் கலந்துகொண்ட யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் இராணுவத் தளபதியுடன் உரையாடுவதை படத்தில் காணலாம்.

## பதில் பொலிஸ்மா அதிபராக இலங்ககோன் நியமனம்

(கொழும்பு)

சிரேஷ்ட பொலிஸ்மா அதிபராகப் பணியாற்றிய என்.கே.இலங்ககோன் பதில் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க வர்த்தக வலயத் தொழிலாளர்கள் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய தனது இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளார். இதனையடுத்தே இந்த வெற்றிடத்திற்கு பதில் பொலிஸ்மா அதிபராக இலங்ககோன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் எதிர்வரும் 18ஆம் திகதி பொலிஸ்மா அதிபராக நியமிக்கப் படவுள்ளதாக நம்பப்படுகிறது. இதன் மூலம் (20ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்திற்கு அனுதாபம் திரட்ட கருத்தரங்கு நடத்தப்படவில்லை

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்த வெற்றியின் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் சர்வதேச கருத்தரங்கினை நடத்துவதன் மூலம் இலங்கை இராணுவத்தினருக்கான அனுதாபத்தைத் திரட்ட நாம் முயற்சிக்கவில்லை. மாறாக எமது வெற்றிக்கான காரணங்களை உலக நாடுகளின் இராணுவத்தினருடன் அனுபவங்களாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதே இந்தக் கருத்தரங்கினை நடத்துவதற்கான நோக்கமாகும் என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜெயசூரிய தெரிவித்தார்.

கொழும்பில் நடத்தப்பட்ட இந்த மூன்று நாள் கருத்தரங்கு வெற்றியளித்தது. இந்த வெற்றியின் உற்சாகத்துடனும் அனைவரது வேண்டுகோளுக்கு இணங்கவும் எதிர்வரும் காலங்களிலும் இவ்வாறான கருத்தரங்குகளை நடத்தி யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமைகளை (20ஆம் பக்கம் பார்க்க)

## தலைமைத்துவப் பயிற்சிக்கு எதிரான மனு தள்ளுபடி

(கொழும்பு)

பல்கலைக்கழகம் செல்ல தகுதி பெற்ற மாணவர்களுக்கு இராணுவ முகாம்களில் வைத்து கட்டாயமாக, வதிவிடப் பயிற்சி வழங்க உயர்கல்வியமைச்சு தீர்மானித்ததை எதிர்த்து தாக்கல்செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை நேற்று வியாழக்கிழமை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

நீதிபதிகள் குழாமில் பிரதம நீதிபதி ஷிராணி ஏ.பண்டாரநாயக்கா, நீதிபதிகள் என்.ஜி.அமரதுங்க, கே. ஸ்ரீபவன் ஆகியோர் இருந்தனர். பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி தற்போது நடைபெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# அரசியல் தீர்வு கிடைக்கும்போது முஸ்லிம்களும் பங்காளிகளாவர்!

## தமிழ்க் கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துடன் இடம்பெற்று வரும் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த பேச்சுவார்த்தைகள் தொடர்பில் தீர்க்கமான தீர்வுகள் கிடைக்கும்போது முஸ்லிம் மக்களையும் இணைத்துக்கொண்டதாகவே இருக்கும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

கல்முனைக்கு விஜயம் செய்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், அதன் ஆதரவாளர்களுக்கும் இடையிலான சந்திப்பின்போது உரையாற்றிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வில்லியம் தோமஸ் தலைமையில் கல்முனை வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், பா.அரியநேத்திரன், பொன். செல்வராசா உள்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் பலரும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் அரியநேத்திரன் உரையாற்றியபோது மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் அரசாங்கத்திற்கும் இடையில் இடம்பெற்றுவந்த பேச்சுவார்த்தைகளில் ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் முடிபடைந்துள்ளபோதிலும் தமிழ் மக்கள் இவற்றை அதிர்ச்சி கலந்த ஒரு எதிர்பார்ப்புடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் பேச்சுவார்த்தையில் தங்களை இணைத்துக்கொள்ளாமை குறித்து முஸ்லிம் மக்களிடம் இருந்தும் சில கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. உண்மையில் அது நியமான கோரிக்கை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் இணக்கம் காணப்பட்ட விடயங்களையே அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ள போதிலும் அதனை நடைமுறைப்படுத்த முன்வரவில்லை.

முஸ்லிம்கள் புறக்கணிக்கப் படவில்லை. இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தையின்போது அவர்களின் அபிலாசைகளும் பிரதிபலிக்கப்பட்டே அரசியல் தீர்வு தயாரிக்கப்படும். வட கிழக்கில் தமிழ் மக்கள் தமது ஏக பிரதிநிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தெரிவுசெய்தார்களோ அதேபோன்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசை முஸ்லிம் மக்கள் தெரிவுசெய்துள்ளனர்.

இதன் காரணமாக சிறிலங்கா முஸ்லிம் காங் (20ஆம் பக்கம் பார்க்க)

**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)


# அலங்கார உற்சவம்

(சாவகச்சேரி)


ஏழாலை அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தான (தேவி கோயில்) அலங்கார உற்சவம் நேற்றைய தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை சங்காபிஷேகத்துடன் விழாநிறைவு பெறும் என்றும் இந்நாட்களில் பிற்பகல் 6 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை விழா நடை பெற்று அம்பாள் வீதியுலா வருவார். (எ-29)


**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290


# மரண அறிவித்தல்

## நாகமணி சாந்தகுமார்



குப்பிளானைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி சாந்தகுமார் 01.06.2011 அன்று காலமானார்.

அன்னார் நாகமணி இராஜேஸ்வரி தம்பதிகளின் அன்பு புதல்வனும், உதயராணியின் அன்புக் கணவரும், ரஞ்சித், அபிசாலினி, மதுசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இன்பநாதன், பாக்கியநாதன், சிவநாதன், சவுந்தரராஜன், ராசமலர், தங்கமலர், சிவனேசன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலச்சந்திரன், நீலாதேவி, கமலாதேவி, விஜயலட்சுமி, புஸ்பராணி, செல்வராணி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக குப்பிளான் ஆடாகரம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்புலம் வீதி, உரும்பிராய், கிழக்கு,
உரும்பிராய். (5087)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

# காதலித்து ஏமாற்றியதாக சீமான் மீது நடிகை புகார்

(சென்னை)

காதலித்து திருமணம் செய்வதாக ஏமாற்றிவிட்டதாக நடிகை விஜயலட்சுமி கொடுத்த புகாருக்கு நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் மறுப்பு தெரிவித்துள்ளார்.

அரசியலில் எனக்குள்ள புகழை கெடுப்பதற்காக திட்டமிட்டு சதி செய்து இந்தப் பொய்ப்புகார் கொடுக்கப்பட்டுள்ளதுஎன்றுஅவர்தெரிவித்துள்ளார்.

பிரண்ட்ஸ் படத்தில் நடிகர் சூரியாவுக்கு ஜோடியாக நடித்தவர் விஜயலட்சுமி. இவர் பாஸ் என்கிற பாஸ்கரன் படத்திலும் நடித்துள்ளார்.

அதோடு தெலுங்கு படங்களிலும்நடித்திருக்கிறார். இவர்சென்னை சாலி கிராமத்தில் குடும்பத்தோடு வசித்துவருகிறார். நேற்று முன்தினம் மாலையில் விஜயலட்சுமி பொலிஸ் கமிசனர் திரிபாதியை சந்தித்து பரபரப்பான புகார் மனுவொன்றை கொடுத்தார்.

அந்தப்புகார் மனுவில் நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் மீது பரபரப்பான குற்றச்சாட்டை கூறியுள்ளார்.

இந்த புகார் மனு பற்றி முதலில் பொலிஸ் தரப்பில் உறுதிசெய்ய மறுத்துவிட்டனர்.

நேற்று முன்தினம் இரவு புகார் கொடுத்தது உண்மைதான் என்று தென்சென்னை இணை கமிஷனர் சண்முகராஜேஸ்வரன் கூறினார்.

சீமான்3ஆண்டுகளாக தன்னை காதலித்ததாகவும் திருமணம் செய்வதாக சொல்லி நெருங்கி பழகியதாகவும் தற்போது தன்னை திருமணம் செய்ய மறுப்பதாகவும், இது தொடர்பாக சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும்,

இதுபற்றி வளசரவாக்கம்பொலிஸ் இன்ஸ்பெக்டர்ஜீவானந்தத்தை விசாரணை நடத்தும்படி உத்தரவிட்டுள்ளதாகவும் இணை கமிஷனர் சண்முகராஜேஸ்வரன்மேலும் கூறினார்.

இந்த புகார் தொடர்பாக சீமானிடம் கருத்து கேட்க செல்போனில் நிருபர்கள் தொடர்பு கொண்டபோது அவர் செல்போனை எடுத்து பேசவில்லை. ஆனால் அவர் சார்பாக அவரது சட்டத்தரணி சந்திரசேகரன் நிருபர்களிடம் பேசினார். சட்டத்தரணி சந்திரசேகரன் கூறியதாவது,நடிகைவிஜயலட்சுமிபுகார்கொடுத்தது பற்றி எங்களுக்கு எந்த தகவலும் இல்லை.

விஜயலட்சுமி அவரது அக்காள் விவாகரத்து வழக்கு தொடர்பாக உதவி கேட்டு சீமானை ஒருமுறை சந்தித்து பேசினார். அதுதொடர்பாகஉதவி செய்யும்படிசீமான்என்னிடம்கூறினார்.

அந்த ஒருமுறை மட்டுமே விஜயலட்சுமி சீமானை சந்தித்துப் பேசினார். அதன்பிறகு அவர் சீமானை பார்க்கவே இல்லை. சீமான் இலங்கைப் போரில் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் பெண் ஒருவரை விரைவில் திருமணம் செய்யவுள்ளார் அவரது பெற்றோரும் இதற்கு சம்மதம் தெரிவித்து விட்டனர்.

இதைக் கெடுக்கவும் அரசியலில் சீமானுக்குள்ள புகழை அழிக்கவும் திட்டமிட்டு சதிசெய்து, இது போன்ற தவறான தகவல்கள் பரப்பப்பட்டுள்ளது. புகார் கொடுத்தது உண்மையாக இருக்கும் பட்சத்தில் அதை சீமான் சட்டபூர்வமாக சந்திப்பார். இவ்வாறு வக்கீல் சந்திரசேகரன் தெரிவித்தார். (ச-5)


**தேவை**

மருத்துவமனையில் உதவியாளராகக் கடமையாற்றுவதற்கு பெண் தேவை. 50 வயதுக்கு உட்பட்டவர்கள். தங்குமிட வசதி, உணவு வழங்கப்படும். சம்பளம் நேரில் தீர்மானிக்கப்படும்.
கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும்.
No.64, மெடிக்கல் வைத்தியசாலை
பொற்பதி றோட்,
கொக்குவில் கிழக்கு.
(5084)
முடிவுத் திகதி :25.06.2011


**மாபெரும் மாட்டு வண்டி சவாரிப் போட்டி**

வட்டுக்கோட்டை விவசாயிகளினால் நடத்தப்படும் மாபெரும் மாட்டு வண்டி சவாரிப் போட்டி.
இடம்: கொத்துத்துறை சவாரித் திடல்.
காலம்: 05.06.2011 ஞாயிற்றுக் கிழமை
நேரம்: பி.ப ஒரு மணி
வட்டுக்கோட்டை விவசாயிகள்
(ச-3359)

# கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 13 | 01 |
| 09 | 06 |
| 1965 | 2011 |

குப்பிழான் சமாதி கோவிலடியை பிறப்பிடமாகவும்
உரும்பிராய் வடக்கு, உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் நாகமணி சாந்தகுமார்

அன்புடனே எம்மை அரவணைத்து
வாழ்வில் என்றும் வளமுடன் வாழவைத்து
ஆதரவாய் நம் குடும்ப நாயகனாய்
எங்கள் நல் உயர்வுக்கே வாழ்ந்திட்ட சாந்தனே
நாளெல்லாம் நினைந்து நாங்கள் புலம்புகின்றோம்
கண்ணீரால் உன்னை அர்ச்சித்து வணங்குகின்றோம்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நாதன் பல்பொருள் வாணிபம் (வவுனியா)
துவாரகா யுவல்லர்ஸ்
(5067)

**28 செப்ரெம்பர் 2011 சர்வதேச விலங்கு / விசர்நாய்க்கடி தினத்தையொட்டிய பாடசாலை மட்டத்திலான போட்டிகள்-2011**

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினரின் ஏற்பாட்டில் நடத்தப்படுகிறது.

(அ)கட்டுரைப் போட்டி,
(ஆ) ஓவியப் போட்டி

நிபந்தனைகள்

[அ] கட்டுரைப் போட்டி தலைப்பு:
1. விலங்கு / விசர்நாய்க்கடி நோயிலிருந்து எதிர்கால சமூகத்தைப் பாதுகாப்போம்.
2. 500 சொற்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

[ஆ] ஓவியப் போட்டி:
1. ஓவியமானது, பொதுமக்களுக்கு விலங்கு /விசர் நாய்க்கடி நோயிலிருந்து பாதுகாக்கும் வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதாகவும், அவற்றை கடைப்பிடிக்கத் தூண்டுவனவாகவும் அமைதல் வேண்டும்.
2. A2 (Size) அளவுப் பிரமாணங் கொண்டதாக அமைதல் வேண்டும்.

பொது நிபந்தனைகள்

போட்டிகள் (அ), (ஆ) என இரு பிரிவுகளாக நடத்தப்படும்.

பரிசுகள்: 1-ம் பரிசு - ரூபா 7,500.00
2-ம் பரிசு - ரூபா 5,000.00
3-ம் பரிசு - ரூபா 3,000.00

ஆறுதல் பரிசுகள்[ஐந்து] தலா ஒவ்வொன்றும் ரூபா 2,000.00

நிபந்தனைகள்

1. தரம் 7 உம் அதற்கு மேற்பட்ட மாணவர்கள் மாத்திரம் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் பங்குபற்றலாம்.
2. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ' சர்வதேச விலங்கு /விசர்நாய்க்கடி தினத்தையொட்டிய கட்டுரைப் போட்டி - 2011' அல்லது ' சர்வதேச விலங்கு / விசர் நாய்க்கடி தினத்தையொட்டிய ஓவியப் போட்டி' -2011 எனக் குறிப்பிடவும்.

பொது நிபந்தனைகள்

1. பரிசு பெறும் முதல் மூன்று கட்டுரைகளும் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.
2. பரிசு பெறும் முதல் மூன்று ஓவியங்களும் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

முடிவுத் திகதி :30.06.2011

ஆக்கங்கள் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை
572/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.
(C-3358)

# இன்று ஒரு தகவல்

## அறிவும் செல்வமும்

இந்த உலகத்தில் நாம் நன்றாக வாழ வேண்டுமானால் அதற்கு முக்கியமாக இரண்டு தேவைப்படுகிறது. ஒன்று செல்வம் மற்றொன்று அறிவு.

சரி...''இந்த இரண்டில் எது சிறந்தது?'' என்று ஒரு கேள்வியைக் கேட்டால் அதற்கு என்ன பதில் சொல்வது?

இதே கேள்வியை ஹஸ்ரத் அலியிடம் பத்துபேர் கேட்டிருக்கிறார்கள். ஹஸ்ரத் அலி ஒரு பெரிய அறிஞர். கேள்வியைக் கேட்டவர்களும் சாதாரண ஆட்கள் இல்லை... அவர்களும் அறிஞர்கள்தான்.

ஒரு நாள் ஹஸ்ரத் அலியிடம் பத்து அறிஞர்கள் வந்து, "ஐயா, நாங்கள் பத்து பேரும் உங்களிடம் ஒரே கேள்வியைக் கேட்க வந்துள்ளோம். ஆனால், எங்கள் பத்து பேருக்கும் நீங்கள் தனித்தனியாகப் பதில் சொல்ல முடியுமா?'' என்று கேட்டார்கள்.

அதவாது, அவர்கள் ஒரே கேள்விக்கு இவரிடமிருந்து பத்து விதமான பதில்களை எதிர்பார்த்தார்கள்.

"சரி, கேளுங்கள். என்ன கேள்வி?'' என்றார் ஹஸ்ரத் அலி. அதற்கு அவர்கள், ''செல்வம்,அறிவு ஆகிய இந்த இரண்டிலும் எது சிறந்தது?'' என்ற கேள்வியை அவரிடம் எழுப்பினார்கள்.

ஹஸ்ரத் அலி அவர்களை ஒவ்வொருவராகக் சுப்பிட்டு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பதிலைக் சுறி அனுப்பினார்.

முதலில் ஒருவரிடம், ''அறிவு என்பது தீர்க்கதரிசிகள், மகான்கள், பெரியோர்கள், சான்றோர்கள் போன்றவர்களது பரம்பரைச் சொத்து. ஆனால், செல்வமோ கொடுங்கோலர் களின் ஆயுதம். அதனால் அறிவுதான் சிறந்தது'' என்றார்.

இரண்டாமவரிடம், '' உங்களிடம் செல்வம் இருந்தால் நீங்கள்தான் அதைக் காப்பாற்ற வேண்டும். ஆனால், அறிவு உங்களை எப்போதும் காப்பாற்றும். ஆகவே, அறிவுதான் மேலானது'' என்றார்.

மூன்றாவது ஆளிடம், '' செல்வம் இருப்பவனுக்கு எப்போதும் விரோதிகள் அதிகம். ஆனால், அறிஞனுக்கு நண்பர் கள் அதிகம். அதனால் அறிவுதான் உயர்வானது'' என்று விளக்கினார்.

அடுத்தவரிடம், "செல்வம் அடுத்தவர்களுக்கு கொடுக்கக் கொடுக்க குறையும். ஆனால், கல்வியோ மற்றவர்களுக்குக் கொடுக்கக் கொடுக்க அதிகரித்துக் கொண்டேயிருக்கும். எனவே, அறிவுதான் சிறந்தது'' என்றார்.

இன்னொருவரிடம், "அறிவுள்ளவன் அதை எப்போதும் அடுத்தவர்களுக்கு வாரி வழங்கிக் கொண்டேயிருப்பான். அதனால் அவரிடம் தாராளத் தன்மையிருக்கும். பணக்காரனிடமோ கஞ்சத்தன்மைதான் இருக்கும். எனவே, அறிவுதான் சிறந்தது'' என்றார்.

ஆறாவது நபரிடம் ''செல்வத்தை கள்வர்கள் திருடிக் கொண்டு செல்ல முடியும். ஆனால், அறிவை கவர முடியாது'' என்றார்.

ஏழாவது நபரிடம் "செல்வம் காலவோட்டத்தில் அழிந்து விடும். ஆனால், அறிவை காலவோட்டம் ஒன்றும் செய்ய முடியாது என்றார்.

எட்டாவது நபரிடம், ''செல்வத்துக்கு எப்போதும் எல்லையுண்டு, நிறையுண்டு, கணக்குண்டு. ஆனால் அறிவுக்கோ அப்படிப்பட்ட எல்லை எதுவும் கிடையாது. அதனால் அறிவுதான் உயர்ந்தது'' என்றார்.

அடுத்தவரிடம், '' செல்வம் உள்ளத்தில் பிரகாசிக்கும் ஒளியைப் போக்கிவிடும். இருட்டை உண்டாக்கி விடும்; விரிந்த மனப்பான்மையைக் குறுகலாக்கி விடும். ஆனால், அறிவு அப்படியில்லை. அது இருண்ட உள்ளத்தில் ஒளியைப் பாய்ச்சி அதை விலாசப்படுத்தும். ஆதலால் அறிவுதான் சிறந்தது'' என்றார்.

கடைசியாகப் பாத்தாவது நபரிடம், "செல்வம் மனத்தில் கர்வத்தை உண்டாக்குகிறது; ஆணவத்தை ஏற்படுத்துகிறது; அதனால் அது, 'நானே கடவுள்' என்று நினைக்கும் அளவுக்கு மனிதனைத் தாழ்த்தி விடுகிறது. ஆனால், அறிவு பணிவையும் பண்பாட்டையும் வளர்க்கிறது. ஆதலால் அறிவுதான் உயர்ந்தது'' என்றார்.

ஆக, இப்படி பத்துப்பேருக்கும் பத்துவிதமான பதில்களைச் சொன்னதன் மூலம் ஹஸ்ரத் அலி, அறிவுதான் செல்வத்தை விட உயர்ந்தது என்பதற்குப் பத்து காரணங்களைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மனித உரிமைகள் தொடர்பாக கிராமப்புற மக்களுக்கு விழிப்புணர்வூட்ட வேண்டும்

## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கிராமப்புற மக்களிடையே மனிதவுரிமைகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியமானது என சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எழிலரசி அன்ரன் யோகநாதன் தெரிவித்துள்ளார்.

இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழுவின் உள்ளக இடப்பெயர்வுக்கான தேசிய பாதுகாப்புக்கும் நிரந்தர தீர்வுக்குமான செயற்றிட்டத்தின் கீழ் 2010 ஆம் ஆண்டு பயிற்சியளிக்கப்பட்ட மனிதவுரிமை பாதுகாவலர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணப் பட்டப்படிப்புக் கல்லூரியில் இடம்பெற்றது.

இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், மனிதவுரிமை பாதுகாவலர்கள் எமது பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பகுதியில் கடமையில் ஈடுபடுவது வரவேற்கத்தக்கவொரு விடயம்.

எமது சமூகத்திற்கு தேவையானவொரு பிரிவினராகவே இந்த மனிதவுரிமை பாதுகாவலர்கள் விளங்குகின்றனர்.

போரினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு மனிதவுரிமை தொடர்பான விளக்கம் போதுமானதாக இல்லை.

இதுதவிர கிராமப்புறங்களில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள மக்களிடையே மனிதவுரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இவை உங்களுடைய முக்கியமான கடமையாகும்.

போரினால் பாதிக்கப்பட்டு உரிமைகளை இழந்து வாழும் மக்களை நீங்கள் இனங்கண்டு அவர்களுக்கு பணி புரியவேண்டும்.

எமது பிரதேச செயலகங்களிலும் இவ்வாறான பணிகளை மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர்கள் இருக்கின்றனர். குறிப்பாக நன்னடத்தை உத்தியோகத்தர்கள், முதியோர் உரிமைமேம்பாட்டுஉத்தி யோகத்தர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள் எனப் பலர் உள்ளனர்.

மக்களுக்காக சேவையாற்ற இத்துறையை நீங்கள் தேர்ந்தெடுத்துள்ளீர்கள். எங்களோடு இணைந்து செயற்படுமிடத்து சிறப்பானதொரு சேவையை மக்களுக்கு வழங்க முடியும்.

எனவே, மக்களுக்கு சேவையாற்ற முன்வந்துள்ள நீங்கள் விசுவாசமாக சேவையாற்ற வேண்டும். அதன் மூலம் மக்கள் பயனடைய வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

(ஶ்ரீ-6)

# ஆங்கிலதின போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையில் கடந்த முதலாம் திகதி நடைபெறவிருந்த ஆங்கிலதினப் போட்டிகள் எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக யாழ். கோட்டக்கல்விப்பணிப்பாளர் திருமதி சிவபாலன் அறிவித்துள்ளார்.

இதில் வாய்மொழி மூலமான தனிநிகழ்வுகள் முதலில் நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஶ்ரீ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 30 | 50 |
| உருளைக்கிழங்கு | 75 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 60-70 | 60 | 60 |
| தக்காளி | 60 | 50 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 70 | 80 | 60 |
| கரட் | 60 | 70 | 70 |
| பூசணி | 25 | 30 | 30 |
| புடோல் | 40 | 30 | 40 |
| வாழைக்காய் | 25 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 130 |
| பெரிய வெங்காயம் | 50 | 50 | 60 |
| பாகற்காய் | 80 | 100 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | - | 80 | - |
| பயற்றங்காய் | 85-90 | 80 | 60 |
| லீக்ஸ் | 70 | 60 | 70 |
| பீற்றூட் | - | 80 | 80 |
| கறிமிளகாய் | 90 | 60 | 70 |
| முருங்கைக்காய் | 400 | 350 | 300 |
| போஞ்சி | - | 80 | 100 |
| கத்தரிதம்புள்ள | - | 20 | 30 |
| கீரை - 1 பிடி | 8-10 | 30 | 30 |
| தேசிக்காய் | 150 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 50 |

# இராசி பலன்

*03.06.2011*
*(வைகாசி 20,வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.54மணிக்கு*
*துதியை பின்னிரவு 3.04மணிவரை*
*மிருகசீரிடம் பிற்பகல் 3.45மணிவரை*
*இராகுகாலம் 10.22-11.52மணிவரை,*
*சுபநேரம் 5.52-7.22 மணிவரை*

**மேடம்** விருந்து விழாக்களில் கலந்து சிறப்பிக்கும் நாள்,தொழில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், சகோதார ஒற்றுமை மெலோங்கும், செலவுகளில் சிக்கனத்தை கடைப்பிடிப்பீர்கள்.

**இடபம்** உறவினர் மத்தியில் மதிப்பும்-மரியாதையும் உயரும், உத்தியோக உயர்வுண்டு, அலங்காரப் பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

**மிதுனம்** பெண் தெய்வ வழிபாட்டால் பெருமை சேர வேண்டிய நாள், திட்டமிட்ட காரியங்களில் சில மாற்றம் செய்ய வேண்டிவரலாம், திடீர் பயணமொன்று உருவாகலாம்.

**கடகம்** எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், தூரத்து நண்பர்களின் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், அம்பிகை வழிபாடு இன்பம் தரும், தொழில் நலன் கருதி பயணங்கள் ஏற்படலாம்.

**சிங்கம்** பொன்னான நாள், பயண வாய்ப்புக்கள் கைகூடுவதற்கான அறிகுறி தோன்றும்,பணவரவுகள் திருப்தி தரும், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**கன்னி** செல்வாக்கு மேலோங்கும் நாள், உதிரி வருமானங்கள் கைக்குக் கிடைக்கும், வீடு கட்டும் பணியைத் தொடர நினைப்பீர்கள், சுபசெய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்** கனிவான பேச்சுக்களால் காரியங்கள் சாதிக்க வேண்டிய நாள், தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருப்பவர்கள் விலகுவர், கட்டுப்பாடான நாள்.

**விருச்சிகம்** இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு அக்கறை காட்டுவீர்கள், பயணத்தில் கூடிய கவனம் தேவை.

**தனுசு** தாராளமாகச் செலவிட்டு மகிழும் நாள், உறவினர் சிலரை தேடிச் சென்று சந்திப்பீர்கள், தொழில் வியாபாரத்தில் பதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும்.

**மகரம்** உற்சாகத்துடன் பணிபுரியும் நாள், மாற்றினத்தவர்கள் மகிழ்ச்சிக்குரிய செய்திகளைக் கொண்டு வந்து சேர்ப்பர், உடல் நலம் சீராகும்.

**கும்பம்** இனிமையான நாள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், முன்னோர் சொத்தில் இருந்த மனஸ்தாபங்கள் விலகும்.

**மீனம்** தொழில் ரீதியாக வரவேண்டிய பணவரவு கைக்குக் கிடைக்கலாம், தாயின் உடல் நலம் சீராகும், தொலைதூரச் செய்திகள் வந்து சேரலாம்.

வளவன்

# பூநகரி கோட்டத்தில் 5 பாடசாலைகள் புனரமைக்கப்பட்டு திறந்து வைப்பு

(பூநகரி)

பூநகரி கோட்டத்தில் போர் நடவடிக்கையினால் முற்றாக அழிக்கப்பட்ட 5 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு யுனிசெப் நிறுவனத்தால் நிரந்தர கட்டடங்கள் அமைக்கப்பட்டு கடந்த 30 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி வலய பிரதி கல்விப் பணிப்பாளர் கி.சின்னராசா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கட்டடங்களை திறந்து வைத்தார்.

இவருடன் சகல திறப்பு விழா நிகழ்வுகளிலும் பிரதிக்கல்விப் பணிப்பாளர் இரத்தினகுமார், பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.தருமரத்தினம், பூநகரி பிரதேச சபை செயலாளர் திருமதி ம.சிவகுமார், பூநகரி பிரதேச கட்டளைத் தளபதி பொன்னம் பெருமா உட்பட கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்தனர்.

கிளி/செம்மன் குண்டு அ.த.க.பா., கிளி/சுண்ணாவில் அ.த.க.பா., கிளி/வேரவில் ம.வி, கிளி/குமுழமுனை அ.த.க.பா, கிளி/வினாசியோடை அ.த.க.பா.சேர்ந்த கட்டடங்களே திறந்து வைக்கப்பட்டது. இப்புதிய கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டதன் மூலம் இங்கு படிக்கும் பிள்ளைகளின் நீண்ட கால பிரச்சினைக்கு தீர்வு கிடைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

(ஸ்ரீ-84)

# கிளி.மகா வித்தியாலய அணி மூன்று விக்கெட்டுக்களால் வெற்றி

(கிளிநொச்சி)

யாழ்ப்பாண நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்துக்கும் கிளிநொச்சி மகாவித்தியாலத்துக்குமிடையிலான 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியில் கிளிநொச்சி மகாவித்தியாலய அணி 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் காலை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் 15 வயதுப் பிரிவினர் கலந்து கொண்டனர். நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற நெல்லியடி மத்திய கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

30 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 166 ஓட்டங்களை எடுத்துக் கொண்டது. இதில் இ.தனுசன் 34 ஓட்டத்தையும் அ.டிலக்ஷன் 20 ஓட்டத்தையும் அ.டினோஜன் 18 ஓட்டத்தையும் கூடுதலாகப் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் மகாவித்தியாலயத்தின் சார்பாக நா. தனுசன் மற்றும் த.றஜீவன் தலா 2 விக்கெட்டுக்களையும் இ. மதுசனன், ஜெ.விதுஷன், ஜெ. நிதர்ஷன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்கனளயும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிளி.மகா வித்தியாலய அணி 29 ஆவது ஓவர் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 168 ஓட்டத்தை பெற்று 3 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

அ.தனுஜன் 49 ஓட்டத்தையும் ச.பிரகாஷ் 20 ஓட்டத்தையும் நா. தனுஷன் 13 ஓட்டத்தையும் இ.மதுசனன் ஆட்டமிழக்காமல் 12 ஓட்டத்தையும் பெற்று வெற்றிக்கு வழி சமைத்தார்.

பந்து வீச்சில் நெல்லியடி மகாவித்தியாலத்தை சேர்ந்த இ.தனுஷன் 2 விக்கெட்டுக்களையும் இ.டினோஜன் 2 விக்கெட்டுக்களையும் அ.ஜெனின், வ.நிரோஜன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

(ஸ்ரீ-2)

# கட்டுநாயக்க சம்பவத்தின் பின்னணியில் பிற்போக்குச் சக்திகள்

## அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க சம்பவத்தின் பின்னணியில் பிற்போக்குச் சக்திகள் செயற்பட்டனவா? என்ற சந்தேகம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளதாக தகவல் ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்க வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது,

ஓய்வூதிய சட்டமூலத்தில் முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் தருணத்தில் சில குழுக்கள் தான் தோன்றித்தனமாக நடந்து உழைக்கும் வர்க்கத்தினரை தூண்டியுள்ளனர். சுதந்திர வர்த்தக வலயத்தில் பணியாற்றும் பெண்கள் பொதுவாக 5 அல்லது 6 வருடங்களில் சேவையிலிருந்து விலக்கப்படுகின்றனர்.

எனவே சுதந்திரவர்த்தக வலய ஊழியர்கள் தனியார் ஓய்வுதியத் திட்டத்தில் இருந்து நீக்க முடிவெடுக்கப்பட்டிருந்தது.

இதுபற்றி அறிவிக்கப்பட்ட பின்னரே ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இவ்வாறான ஆர்ப்பாட்டங்களை அனுமதிக்க முடியாது என்றும் அமைச்சர் கூறினார். (ஸ்ரீ-2)

# மேல்மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் டெங்கு நுளம்புகள் பரவும் அபாயம்

(கொழும்பு)

மேல்மாகாணத்திலுள்ள பல மாகாணங்களில் 75 வீதமான பாடசாலைகள் டெங்கு நுளம்புகள் பரவும் இடங்களாக காணப்படுவதாக பூச்சியியல் ஆய்வு மூலம் தெரிய வந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.


சுகாதார அமைச்சும் மருத்துவ ஆராய்ச்சி நிலையமும் இணைந்து மேற்கு, சப்ரகமுவ, வடமேல், மத்திய மற்றும் தென் மாகாண பாடசாலைகளில் ஆய்வுகளை மேற்கொண்டன.

ஏனைய மாகாணங்களிலும் 65 முதல் 75 வரையான பாடசாலைகள் டெங்கு நுளம்பு பரவும் இடங்களாகக் காணப்படுகின்றன என சுகாதார அமைச்சின் பேச்சாளர் டபிள்யூ. எம்.டி. வன்னிநாயக்க கூறியுள்ளார்.

டெங்கு நுளம்புகள் பரவுவதை தடுக்கும் முகமாக பாடசாலை வளாகங்களில் ஒவ்வொரு வாரமும் கட்டாயமாக சுத்திகரிப்பு பணி மேற்கொள்வது குறித்து பாடசாலைகளுக்கு சுற்றுநிருபம் அனுப்புவது தொடர்பில் கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தனவும் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவும் கலந்துரையாடலொன்றில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (ஸ்ரீ-2)

# உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி 2011 வினா-விடைப் போட்டி பரிசளிப்பு விழா







உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி - 2011 ஐ முன்னிட்டு வலம்புரி நடத்திய வினாவிடைப் போட்டியில் தினமொரு பரிசான MCS நிறுவனம் வழங்கிய கூப்பனை வென்ற வெற்றியாளர்கள் விருந்தினர்களுடன் காணப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

## அச்சுவேலி - நாவலம்பதி

# காட்டுமலைக் கந்தசுவாமி கோவில்

## திரிதள இராஜகோபுர மகா கும்பாபிஷேக சிறப்புமலர் - 03.06.2011

### நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



முருகன் அடியார்களுக்கு:-

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலை பிரதேசத்தில் எழுந்தருளி இருந்து அருள் ஆட்சிபுரியும் முருகப்பெருமானிற்கு புதிளதாக அமைக்கப்பட்ட இராஜகோபுரம் இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. வேண்டுவார்,வேண்டுவதை ஈகின்ற முருகப்பெருமான் அன்பின் அடையாளமாக வீற்றிருந்து இவ்வாலயத்தில் அரசரப்பட்டறை செயற்படுத்துகின்றார். மௌனமாக நடைபெறும் பூஜை வழிபாடு இவ் ஆலயத்தின் தனியான சிறப்பைக் கொண்டது. இவ்வாலயம், இவ் ஊர் மக்களுக்கு மட்டுமன்றி, அயற்கிராம மக்களிற்கும் தனிச்சிறப்பாகும். முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகப் பெருமானுக்கு இங்கு அமையப்பெற்றிருக்கும் இராஜகோ புரம் இவ்வாலயத்தின் தனித்துவத்தைக் கொண்டுள்ளது. இராஜ கோபுரம் என்பது தூலலிங்க தரிசனம் ஆகும். இதனை "கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என கூறுவர்" இப் புண்ணிய செயலை ஆற்றியிருக்கும் சிற்பக் கலைஞர்களையும், ஆலய பரிபாலன சபையினரையும் வாழ்த்திப் பாராட்டுகின்றேன். இக்கும்பாபிஷேகத்தை அனைவரும் தரிசனம் செய்து மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக.

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,
இரண்டாவது குருமஹாசந்நிதானம்.

### வாழ்த்துச் செய்தி




அச்சுவேலி , நாவலம்பதி காட்டுமலைக் கந்தசுவாமி கோயிலின் புதிய இராஜகோபுரக் கும்பாபிஷேகம் 2011.06.03 ஆம் திகதி நிகழ்வது குறித்துச் செய்தியறிந்து மட்டற்ற மகிழ்வெய்துகிறேன். விசேடமாக கும்பாபிஷேக மலர் ஒன்றை வெளியிடும் செய்தி இரட்டிப்பு மன நிறைவைத் தருகின்றது.

அச்சுவேலி,நாவலம்பதி காட்டுமலைக் கந்தசுவாமி கோயில் 1929 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. தமிழிலே பூசை செய்யும் மரபு பேணப்படுகிறது. 25 தினங் கள் உயர் திருவிழா நடைபெறுகிறது. ஆலயத்திலே சிவலிங்கப் பெருமான் உறைகிறார். பராக்கிரமும் அருட்பொலிவும் கொண்ட கருணைகூர் முகங்களாறுடைய ஆறுமுக சுவாமிக்குத்தான் மஹோற்சவம் இடம்பெறும்.

இத்தகு மேன்மைகள் பொருந்திய திருப்பதியிலே சிற்பம் நிறைந்த கம்பீரமானதோர் புதிய இராஜகோபுரம் நிர்மாணிக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகம் காணும் சிறப்பு மிகவும் அருமையானது. அச்சுவேலி, கல்வி, கலை, பண்பாடு,சமயம்,பக்தி என்பவற்றினால் பெருமைபெற்ற கிராமம். மிகவும் சிந்தனை யுடன் எம்பெருமான் முருகனுக்கும் ,அம்பாளுக்கும் இராஜகோபுரம் கண்ட பெருமக்கள், அதற்குத் தமது பங்களிப்புக்களைச் செய்த பரோபகாரிகள், பக்தர்கள் அனைவருக்கும் திருவருள் நீண்டாயுளையும்,சுகானந்த வாழ்வையும் அருள வேண்டும் என்று என் குலதெய்வம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மனது திருவருளைச் சிந்தித்து வந்தித்து வாழ்த்துகின்றேன்.

சைவாலயங்கள் அருள் நிலையங்களும்
கலாநிலையங்களுமாகும்
அன்பன், கலாநிதி க.நாகேஸ்வரன்,எம்.ஏ.பி.எச்.டி,
சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளர்.

### வலிகாமம் கிழக்கு பிரதேச செயலரின் வாழ்த்துரை




அச்சுவேலி பதியில் குடி கொண்டு தன் கூர் விழியால் ஊர் முழுவதையும் அருட் பார்வைக்கு உட்படுத்தி அருளாட்சி செய்து கொண்டிருக்கும் கந்தக்கடவுளின் இராஜ கோபுர குடமுழுக்கு நிகழ்வினை யொட்டி இம்மலர் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியதாகும். தீர்த்தம்,தலம்,விருட்சம் ஆகிய மகிமைக்குரிய பல்வேறு அம்சங்களுடன் திகழும் இவ் ஆலய சிறப்புக்கள் தொன்மை வாய்ந் தவை.

கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற அருள் மொழியின் அடிப்படையில் இவ் ஆலயத்தை அண்டிய மக்களின் வாழ்க்கையில் சைவாசார விழுமியங்களின் தாக்கம் காத்திரமானதாகும். இந்த வகையில் எல்லோரும் ஒன்றுகூடி இராஜ கோபுர திருப்பணிசெய்து குடமுழுக்காட்ட எடுத்த நற்காரியம் இனிதே நிறைவேறுகின்றது. கும்பாபிஷேகம் தெய்வ சாந்தியத்தை வலுப்படுத்தி அருட்சக்தியை அதிகரிக்கச் செய்கின்றது.

கும்பாபிஷேக மலர் சிறக்கவும் அதனை வெளிக் கொணரும் அடியவர்கள் அருள் பெறவும் காட்டுமலை முருகன் அருள் வேண்டி வாழ்த்துகின்றேன்

ம.பிரதீபன்,
பிரதேசசெயலர், வலிகாமம் கிழக்கு, கோப்பாய்.



### ஆலய வரலாறு

தமிழுக்கு அணிகலனாய் சைவத்திற்கு உறைவிடமாய் விளங்கும் யாழ்ப்பாணத்திலே அச்சுவேலிப் பதியிலே உள்ள நாவலம்பதியில் எழுந்தருளி அருள் பாலிக்கும் முருகப் பெருமான் கோவில் கொண்டருளிய வரலாறு புதுமையானது.

நாவலம்பதியிலே வாழ்ந்த சீனியர் என்னும் அருளாளர் தமக்குஏற்பட்ட தீராத நோயைத் தீர்க்கும் முகமாக 1928 ஆம் ஆண்டு கதிர்காமத் திருத்தலத்திற்கான யாத்திரையை மேற்கொண்டார். அக்காலம் இந்த யாத்திரை அச்சம் தருவதும், அருமையுடையதும், புனிதமானதுமான பேறேயாகும். காடும் மலையும் கடந்து அருளாளர் சீனியர் கதிர்காமத்தையடைந்து, கந்தனை தோத்தரித்து கற்பூர தீபமேற்றி முருகனை வழிபட்டபின் விபூதி பிரசாதமும் பெற்று கதிர்காமக் கந்தனது அருளையும் பெற்றுக் கொண்டு ஊர்திரும்பும் போது பண்டாரம் போல் வழவம்தாங்கிய ஆணும் பெண்ணுமாக இரு அடியவர்கள் இருவருடன் இணைந்து கொண்டனர்.

கதிர்காம யாத்திரையை நிறைவு செய்து கொண்டு தம்முடனே கூட வரும் அடி யார்களுடன் நாவலம்பதிக்கு வந்த அருளாளர் சீனியர் அவர்கள் தாம் வதியும் மனைக்குச் சென்று கதிர்காமத்திலிருந்து தம்முடனே கொண்டு வந்த முருகனது விபூதிப் பிரசாதத்தை மனையில் வைத்து விட்டு வெளியே வந்ததும் தம்முடன் கூடவே வந்த அடியவர்கள் இருவரையும் காணாது அருகிலுள்ள கொன்றை மலர்ச்சோலையிலே தேடிப்பார்த்தார். அவர்களைக் காண முடியவில்லை. கந்தனையே வேண்டிய வண்ணம் தம் மனை புகுந்த அருளாளர் சீனியர் அவர்கள் பயணக் களைப்பு மிகுதியால் ஆழமாக உறங்கிக் கொள்கின்ற வேளை அவர்தம் கனவிலே முருகப் பெருமான் தோன்றி அன்பரே உனது பிணிதீர வேண்டுமாயில் நின்மனையில் (இடம் குறித்துக் காட்டி) நித்தமும் பூசை வழிபாடு இயற்றுவாயாக என வேண்டிக் கொண்டார்.

தாம் கண்ட கனவின்படியே 1929ஆம் ஆண்டு ஆனித் திங்கள் 25 ஆம் நாள் கதிரமலைக் கந்தனின் அனுக்கிரகத்துடன் கதிர்காம வழிகாட்டுமலைக் கந்தனது ஆலயத்தை நிறுவினார். கோவிலை நிறுவி சுவாமியை பிரதிஷ்டை செய்ததோடு தாமே பூசகராய் அமர்ந்து நித்திய பூசைகளையும் செய்து வந்தார். தமிழ்வேதமாகிய தேவார திருவாசகத்தினை மந்திரமாகக் கொண்டு அவர் அன்போடு செய்த பூசை வழிபாடானது வெகுவிரைவில் பெரும் பலன் அளித்தது. காட்டு மலைக் கந்தனது புகழ் யாழ்ப்பாணம் எங்கும் பரவலாயிற்று.

வைத்தியர்களால் கைவிடப்பட்ட நோயாளிகள் பலர் நீயே தஞ்சமென காட்டு மலைக் கந்தனிடம் அடைக்கலம் புகுந்தனர். அருளாளர் சீனியர் அவர்கள் அப்பனை வணங்கி வெந்துயர் தீர்க்கும் விபூதியைக் கொடுத்து தீராத பிணிகளைக் குணமாக்கினார். இக்கோவிலின் மூலமூர்த்திக்கு சிவனாக இருக்கவும் முருகப் பெருமா னிற்கு சிறப்பிடம் கொடுத்து உற்சவங்கள் நடைபெறுவதுடன் பரிவார மூர்த்திகளான விநாயகப் பெருமான், உருத்திரநாயகி அம்மை, உருத்திர வைரவர், பத்திரகாளி என பல்வேறு பரிவார மூர்த்தங்களுக்கு அவ்வப்போது சிறப்புற்சவங்கள் நடைபெறுகின்றன.

ஆலயம் ஸ்தாபித்த காலத்தில் ஆனி மாதத்து அமாவாசை முதல் ஆனி மாதப் பூரணை வரையான 15 நாட்கள் வருடாந்த மஹோற்சவம் நடைபெறுகின்றது. இக்காலப் பகுதியில் நாவலம்பதி புனிதம் நிறைந்து காணப்படும். உற்சவ ஆரம்ப நாளன்று நீரெடுத்தல் எனும் நிகழ்வு நடைபெறுவது வழமை. அதாவது முருகனது அருளாலே குறித்த தீர்த்தக் கிணற்றிலிருந்து நீரெடுத்து அதனையே எண்ணெயாக திரி தோய்த்து விளக்கேற்றி உற்சவகால முழுவதும் தீர்த்தத்தில் தீபம் எரிவது வழக்கம்.(15 நாட்கள்) அருளாளர் சீனியர் அவர்களால் பாடப்பெற்ற திருவூஞ்சல் பதிகமும் உள்ளது.

அருளாளர் குறையையும் தீர்த்து தம்மை நாடிவரும் அடியவர்கள் குறைகளையும் களைகின்ற திருத்தலமாக திகழ்கின்ற காட்டுமலைக் கந்தனது பெருமை பெருக்கெடுத்துப் பாய்கின்ற வேளை 1939 ஆம் ஆண்டு அருளாளர் சீனியர் அவர்கள் சிவப்பேறு பெற்றுவிட்டார். பின் அவரது குமாரர்களான சிவகுரு, குமரகுரு ஆகியோர் நாவலம்பதி சைவப் பெருமக்கள் உதவியுடன் நன்கு பரிபாலித்து வேண்டிய திருத்தங்களையும் செய்து அழகும், புனிதமும் பேணி நித்திய பூசைகளில் கவனம் செலுத்தி வந்தனர்.

1972 ஆம் ஆண்டு முதல் ஆனிமாதத்து அமாவாசையை தீர்த்த உற்சவமாகக் கொண்டு நிகழும் வண்ணம் 25 தினங்கள் பெரும் திருவிழா நடைபெறுகின்றது. இவ்வாலயத்தின் தீர்த்தத் திருவிழா புதுமையானது. செல்வச்சந்நிதி குமாரவேல் ஆலயத்தினின்றும் பெருகிவரும் தொண்டைமானாறு வல்லைப் பெரும்பாலத்திற்கூடாக அச்சுவேலிப் பகுதிக்குப் புகுந்து நாவலம்பதியை அடைந்து அப்பாலும் பாய்கிறது. காட்டுமலைக் கந்தன் ஆலயத்திலிருந்து அரைமயில் தூரமுள்ள ஆற்றுப்படுக்கையின் புனிதமான ஒரு குன்று எப்போதும் கடும் வறட்சியுள்ள கோடைகாலத்திலும்கூட சுரந்து கொண்டிருக்கிறது. அதிகம் ஆழமில்லாத இக்குன்று சிறுகிணறு போலக் காட்சியளிக்கின்றது. இவ்விடத்திலேதான் காட்டுமலைக்கந்தன் தீர்த்தமாடித் திரும்புகிறான். அருளாளர் சீனியர் அவர்களால் கட்டிமுடிக்கப்படாமல் இருந்த திருப்பணி வேலைகள் பலவற்றைச் சிவகுருஐயா அவர்கள் செய்து முடித்தார். 1971 ஆம் ஆண்டு புதிய சித்திரத்தேரையும் 1986 ஆம் ஆண்டு புதிய திருமஞ்சத்தினையும் செய்து முடித்ததோடு 1992ஆம் ஆண்டில் பழனி ஆண்டவர் கோவிலை அமைத்தார். 1997ஆம் ஆண்டு தற்போது பொலிவுற்றுக் காட்சிதரும் அழகிய திருக்கோவிலை அமைக்கும் திருத்தொண்டு மேற்கொள்ளப்பெற்று 2000 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இவ்வாறு ஆலயம் புதுப்பொலிவு பெற்றுவரும் காலத்தில் 2004.06.15 ஆம் திகதி சிவகுரு ஐயா அவர்கள் சிவப்பேறு பெற்றார். அவர் விட்டுச் சென்ற தெய்வீகப் பணியை அவரது புத்திரர்களாகிய சிவசுப்பிரமணிய ஐயா அவர்களுடன் திரு.சிவ.பாலசுப்பிரமணியம் ஐயா அவர்களுமாகச் சேர்ந்து ஆலயத் திருப்பணிகளையும் நித்திய, நைமித்திய கிரியைகளையும் சிறப்புற நடாத்தி வருகின்றனர். 2008.01.22 ஆம் திகதி இராஜகோபுர திருப்பணிக்கான திருக்கல் நாட்டப்பெற்றது. இப்பணிவேகமாக நடைபெற்று நிறைவடைந்துள்ளது. இராஜகோபுர கும்பாபிஷேகம் 03.06.2011 இன்று வெள்ளிக்கிழமை நடைபெறுவது முருகன் திருவருளேயாகும்.

சுபம்.

### பிரதம குருவின் அருளாசிச் செய்தி



எம்பெருமான் திருவருளால் 2008/01/22 தைப்பூச நன்னாளில் ஆரம்பிக்கப் பெற்ற இராஜகோபுரத்திருப்பணி இவ்வருடம் நிறைவு பெற்று கும்பாபிஷேகம் நிகழ்கின்றது. தூலலிங்கம் என அழைக்கப்படும் கோபுரத்தின் பேரழிலைக் கண்டு, இறைசிந்தனையை இதயத்தில் கொள்வதே இப்பிறவியின் பெரும் பயன்.

அச்சுவேலிக்கிராமத்தில் கோபுரம் இல்லாத குறையை காட்டு மலை வேலன் நீக்கியுள்ளார். கோபுரத்திருப்பணியை சிறப்பாக நிறைவேற்றுவதற்கு தோன்றாத்துணையாக நின்று எம்மை வழி நடத்தியவர்கள் எம் முன்னோர்கள். அவர்கள் விட்டுச் சென்ற பெரும் திருப்பணியாகிய இராஜகோபுரத் திருப்பணியை முருகனது மெய்யடியார்களின் உதவியுடன், எம்பெருமானுடைய அருளால் மிகவிரைவாக செய்து முடிக்கப் பெற்றோம்.

"கோபுரதரிசனம் கோடிபுண்ணியம்" என்ற சான்றோர் கூற்றுக்கு அமைய காட்டு மலையில் வேற்பெருமானுக்கும் உருத்திர நாயகி அம்பாளுக்கும் இராஜகோபுரம் கட்டிமுடிக்கப் பெற்றது எம் பெருமானுடைய திருவருள் சிறப்பே எனலாம். கோபுர கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு மெய்யடியார்கள் மற்றும் அவனருள் வேண்டிநிற்கும் மெய்யடியார்கள் அனைவரது வாழ்வும் சர்வமங்களம் பெற்று வளம் பெறவும், மலர்ந்து வருகின்ற புதுவருடத்திலே காட்டு மலையானது திருவருள் விளங்கப்பெற்று நிறைந்து விளங்கும் பிரார்த்தித்து ஆசி வழங்கி மகிழ்கின்றேன்.

சிவ.சிவசுப்பிரமணிய ஐயர்,
பிரதம குரு,
காட்டுமலைக் கந்தசுவாமி கோவில்.


### ஆலய பூசகரின் அருளாசிச் செய்தி



ஆலயம் தொழுவது சாலவும் நன்று- என்று சைவப் பெருமக்கள் கூறிய கூற்றுக்கமைய ஆலயம் உள்ள ஊர்களில் குடியிருத்தல் சிறப்பானது. மனித வாழ்வியலுக்கும், சிறந்த பண்பாட்டு, ஒழுக்க நெறிகளைப் பேணிக்கொள்வதற்கும் மக்கள் ஆலயங்களிற்கு அருகில் வாழ்வது நல்லது. எமது கிராமத்தின் மக்களின் ஆன்மீக வழிபாட்டிற்குரிய இருப்பிடமாகவும், பண்பாட்டு ஆதாரிடமாகவும், சமூக உறவாக்கத்தின் இடமாகவும் காட்டுமலைக் கந்தசுவாமி தேவஸ்தானம் விளங்குகின்றது. கோபுர தரிசனம் கோடி பாவவிமோசனம். இதனைத் தரிசித்து கோபுரக்கணக்கான புண்ணியத்தைப் பெற்றுக் கொள்ளலாம். தமிழ்த் தெய்வமாகிய வடிவேலனின் கோபுரத் திருப்பணி வேலைகளை சிறப்பாக குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்றியுள்ளனர். எம்முன்னோரின் அருணா சியாமும் வேலவனின் கோபுரத் திருப்பணி வேலைகளை சிறப்பாகக் குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்றியுள்ளனர். எம்முன்னோரின் அருணா சியாமும் வேலவனின் அருளாசியாலும் இவ் வருடம் கோபுரகும்பா பிஷேகம் சிறப்பாக நடைபெறுகின்றது.

சிவ.பாலசுப்பிரமணியம்,
பூசகர்,காட்டுமலைக் கந்தசுவாமி கோவில்.


### ஸ்தபதி கலியப்பெருமாள் புருசோத்தமன்



தமிழ்நாடு கொள்ளிடம் பெரிய குண்டக்கரை சீகாழியைச் சேர்ந்த கலியப்பெருமாள் என்பவர் மிகச்சிறந்த உயர் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவராயினும் சிறுவயதிலேயே கலையாற்றலம் மிக்கவராக விளங்கினார். தம் கலைவாரிசு வத்தை மேலும் வளர்த்துக் கொள்ளக்கூடிய வகையில் கல்வியைப் பெறமுடியவில்லை. ஆயினும் கலைத்தெய்வத்தின் அருளாட்சியின் சிற்பக்கலை வல்லுனர்களின் தொடர்புகள் கிடைத்தமையால் அவர்களிடம் இக்கலை பற்றிய அறிவை அனுபவபூர்வமாகக் கற்றுத் தேர்ந்தார். கோயில் வேலைகள், கோபுரம் அமைத்தல் முதலிய பணிகளில் கைதேர்ந்த ஸ்தபதியாக விளங்கும் புருசோத்தமன் இந்தியாவில் 50இற்கு மேற்பட்ட ஆலயங்களில் திருப்பணிகளைச் செய்திருப்பதாக தெரியவருகிறது. தற்சமயம் இந்தியாவிலும், இலங்கையிலும் நூற்று ஐம்பதுக்கு (150) மேற்பட்ட ஆலயங்களில் இவர் தம் கைவண்ணம் மிளிர்கின்றது.

இலங்கையில் 10 இராஜகோபுரங்களைச் சிறப்புற அமைத்த பெருமை இவருக்குரியது. நயினாதீவு இராஜகோபுரம், வண்ணை வீரமாகாளி அம்மன் கோவில், நல்லூர் சிவன்கோயில் இராஜ கோபுரம் மற்றும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் வேலைகள் உட்பட புகழ்மிக்க தலங்களில் திருப்பணி வேலைகளைச் செம்மையாகச் செய்து அனைவரது பாராட்டுக்குரியரானார்.

அச்சுவேலி- நாவலம்பதி காட்டுமலைக் கந்தசுவாமி கோவிலில் இரு கோபுரங்களை ஒரே காலத்தில் அமைக்கும் பணியைப் பொறுப்பேற்று சிறப்பான முறையில் அழகும், கலையும், நயமும் மிக்கதாக வடிவமைத்துத்தந்துள்ளார். எம்பெருமானின் அருட்கடாட்சத்திற்கு உட்பட்டு காட்டுமலைக் கந்தனின் தொண்டரானார். நாவலம்பதி மக்களின் பேரன்புக்கும், பெருமதிப்பிற்கும் உரியவராக விளங்கும் கலியப்பெருமாள் புருசோத்தமன் அவர்கள் ஆலய தர்மகர்த்தாவுடன் இணைந்து மிகத்துரிதமாக இராஜகோபுர வேலைகளை நிறைவுசெய்து தந்தமை பாராட்டுக்குரியது. ஸ்தபதி கலியப்பெருமாள் புருசோத்தமன் அவர்கள் இன்னும் பற்பல தலங்களில் அற்புதப் படைப்புக்களை தமது கைவண்ணத்தால் உருவாக்க எல்லாம்வல்ல காட்டுமலை வேலை வேண்டி நிற்கின்றோம்.







LB பினாஸ் PLC நிறுவனத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மரக்கன்று நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சுன்னாகக் கிளையினரால் சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் கிளை முகாமையாளர் கே.கஜனால் மரக்கன்று நாட்டப்பட்டிருப்பதையும் அருகில் அதிபர், LB நிறுவன உத்தியோகத்தர் நிற்பதையும் மானிப்பாய் கிளையினரால் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபர் மரக்கன்றை நாட்டி வைப்பதையும் அருகில் LB நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரியர்கள் நிற்பதையும் நெல்லியடி கிளையினரால் நெல்லியடி மகா வித்தியாலயத்தில் நிறுவன உத்தியோகத்தர் மரக்கன்று நடுவதையும், அருகில்LB நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## சுதந்திர வர்த்தக வலய சம்பவம் குறித்து சர்வதேச தொழிலாளர் அமைப்பில் முறையிடப்படும்

### ஐ.தே.க. அறிவிப்பு

(கொழும்பு)

சுதந்திர வர்த்தக வலய சம்பவம் குறித்து சர்வதேச தொழிலாளர் அமைப்பிடம் முறைப்பாடு செய்ய நேரிடும் என ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

அண்மையில் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய பணியாளர் மீது பொலிஸார் தாக்குதல் நடத்திய சம்பவம் குறித்து முறைப்பாடு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் இணைப்பிரதித்தலைவர் கரு ஜயசூரிய கோரிக்கை விடுத்துள்ளார்.

பொலிஸார் மனிதாபிமானமற்ற முறையில் குறித்த பணியாளர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் பணியாளர்களை பார்வையிட்டதன் பின்னர் அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## பல்கலை. விரிவுரையாளர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும்

### மல்வத்து பீடாதிபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டுமென மல்வத்து பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களைப் போன்று விரிவுரையாளர்கள் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படக் கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு உரிய மரியாதை வழங்கப்பட வேண்டியது அவசியமானது எனவும் தேவை ஏற்பட்டால் வேறு நாடொன்றில் சென்று பணியாற்றக் கூடிய ஆற்றல் பல்கலைக்கழக விரிவுரை யாளர்களிடம் காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

சம்பள உயர்வினை வழங்குவதாக உயர்கல்வி அமைச்சரே முதலில் வாக்குறுதி அளித்ததாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பளச் பிரச்சினை தொடர்பில் பல்கலைக்கழக விரிவ்ுரையாளர்கள் மல்வத்து பீடாதிபதியை சந்தித்த போது இந்தக் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)

## விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

பூநகரி பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட ஆறு கிராமங்களில் இன்று தொடக்கம் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய இன்று காலை 9 மணி வலைப்பாடு கிராமத்திலும் எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு செம்பன் குண்டு மற்றும் பல்வாய் கிராமத்திலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

எனவே, இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (ஸ்ரீ-84)

## சிவநெறி இறுவட்டு வெளியீட்டு விழா

(அல்வாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சைவ ஆலோசனை சபையின் சிவநெறி இறுவட்டு வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கரவெட்டி சைவ ஆலோசனை சபைத் தலைவர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபரும் உலக வங்கி ஆலோசகருமான வே.விசுவலிங்கம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

வெளியீட்டு உரையை சிவபூமி அறக்கட்டளை நிலையத் தலைவரும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபருமான செஞ்சொற்செல்வர் ஆறு திருமுகன் நிகழ்த்தவுள்ளார்.

முதற்பிரதியை யாழ்.பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் பெற்றுக் கொள்வார்.

இவ் இறுவட்டில் திருக்கேதீஸ்வர ஆலயம், உடுப்பிட்டி வீரபத்திர சுவாமி கோவில், கரணவாய் மூத்த விநா யகர் ஆலயம், வதிரி உள்ளியனொல்லை கண்ணகி அம்மன் ஆலயம், பொலிகண்டி கந்தவன கல்யாண வேலவ சுவாமி ஆலயம் ஆகியவற்றின் பக்திப் பாடல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ஸ்ரீ-19)

## கும்பாபிஷேகம்

பூநகரி கறுக்காய்த்தீவு அருள் மிகு கல்வெட்டுத்திடல் கந்தசாமி கோவில் மஹாகும்பாபிஷேக பெருவிழா எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 6.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

திருகோண மலையைச் சேர்ந்த சிவஸ்ரீ கிரியாரத்தினம் பொன் ஆறுமுகசுவா மிக்குருக்கள் கும்பாபிஷேகத்தை நடத்திவைப்பார்.

எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு 5 ஆம் திகதி காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 4 மணி வரை நடைபெறும் என ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-84)

## சுதந்திர வர்த்தக வலய போராட்டத்தில் காயமடைந்த ஊழியர் உயிரிழப்பு

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் அண்மையில் நடைபெற்ற போராட்டத்தின் போது காயமடைந்த ஊழியர் உயிரிழந்துள்ளார். ரொசான் சானக்க என்ற 21 வயது இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பொலிஸார் நடத்திய துப்பாக்கி பிரயோகத்தில் இந்த இளைஞர் காயமடைந்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது. குறித்த ஊழியர் ராகம போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

காலில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் சிறுநீரகங்கள் செயழிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரொசானுக்கு உச்ச அளவிலான மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டதாக அவரது குடும்பத்தார் தெரிவித்துள்ளனர்.

எனினும் காயமடைந்து இரண்டு மணித்தியாலங்களின் பின்னரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக குற்றம் சுமத்தியுள்ளனர். பொலிஸார் உரிய நேரத்தில் சிகிச்சைக்காக அனுமதிக்கவில்லை என குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்த ரொஷான் சானக மினுவாங்கொட கல்லொழுவ பிரதேசத்தை வசிப்பிமாகக் கொண்டவர். 5 சகோதர சகோதரிகளைக் கொண்ட குடும்பத்தில் 4 ஆவதாக பிறந்த அவர் 4 மாதங்களுக்கு முன்பே கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்திற்கு வேலைக்கு சென்றுள்ளார். (ஸ்ரீ-2)

## முக்கிய அறிவித்தல்

### கட்டைவேலி- நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

### கிளைப் பொதுக்கூட்டம்

05.06.2011 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறவிருந்த கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தவிர்க்க முடியாத காரணத்தால் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என்பதை வாக்களிக்கத் தகுதியுடைய சகல அங்கத்தவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திகதி:- 02.06.2011 செயலாளர்

(சீ-3356)

## துயர் பகிர்கின்றோம்



எமது அன்பிற்குரிய ஆசான் திரு.க.அம்பலவாணர் (இளைப்பாறிய கோட்டக் கல்விப் பணிப்பாளர்) அவர்களின் அன்புத் தாயார் திருமதி கந்தர் வள்ளியம்மை அவர்கள் அமரத்துவம் அடைந்தமை அறிந்து ஆறாத் துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் ஆறுதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அமரர் கந்தர் வள்ளியம்மை

திரு.சி.கந்தசாமி
திரு.கா.வல்லிபுரநாதன்
திரு.சு.கணபதிப்பிள்ளை
திரு.வே.பாலசுப்பிரமணியம்
திரு.க.சின்னராஜா குடும்பம்
(நோர்வே)

# வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை

# 2011 (ஆகஸ்ட்) மாதிரி வினாத்தாள் - 06

## பகுதி - II

01) பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

சங்கரும், பூங்கொடியும் உடன் பிறந்தவர்கள். அவர்களின் வீட்டைச் சுற்றிலும் எண்ணற்ற கொய்யா மரங்கள் இருந்தன. இனிய கொய்யாப்பழங்களை உண்பதற்காக அம் மரங்களைத் தேடி தினந்தோறும் ஏராளமான பறவைகள் வந்த வண்ணம் இருந்தன. ஒரு நாள், கொண்டைக் குருவியைத் தொட்டுப் பார்க்க ஆசைப்பட்ட சங்கர் தானியங்களைத் தூவி ஒரு சிறிய வலையை விரித்தான். அவன் எதிர் பார்த்தபடி வலையில் ஒரு கொண்டைக் குருவி சிக்கிக் கொண்டது. வலையில் சிக்கிக் கொண்ட அக் குருவி தனது சிறகுகளை பட பட வென அடித்தது. அக்குருவியை ஆசையுடன் தொட்டுப்பார்த்த அண்ணன், தங்கை இருவரும் அந்தக் குருவியைப் பார்த்து "ஐயோ பாவம்... செல்லக்குருவி நீ பறந்து போம்மா..." என்று வானில் பறக்க விட்டனர். உடனே அந்தக் குருவி தேவதையாக மாறி "உயிர்களிடத்திலே அன்பு கொண்ட குழந்தைகளே, உங்களுக்கு என்ன வேண்டுமோ கேளுங்கள்... தருகிறேன்..." என்றது. "பறவைகள் போல பறந்து செல்ல எங்களுக்கு இறக்கைகள் வேண்டும்" என்றனர் குழந்தைகள்.

01) இப் பந்தியில் இருந்து நீர் விளங்கிக் கொண்டதை கொண்டு தலைப்பு ஒன்றை எழுதுக?

.................................................................

02) பந்தியில் வந்துள்ள பெயரடை மொழிச்சொல் யாது?

.................................................................

03) இரட்டைக்கிளவி ஒன்றை எழுதுக.

.................................................................

04) பந்தியில் உள்ள உவமைத் தொடரை எழுதுக.

.................................................................

05) பழங்களை என்பதன் ஒருமைச் சொல் யாது?

.................................................................

06) உயர்திணைப் படர்க்கை ஒருமை இறந்தகால வினைமுற்று சொல் ஒன்று தருக?

.................................................................

07) உடன் பிறந்தவர்கள் என்பதைக் குறிக்கும் வேறு ஒரு பொதுவான சொல்லை எழுதுக.

.................................................................

08) உயர்திணைப் படர்க்கை பன்மைப் பெயர்ச் சொல் ஒன்று தருக?

.................................................................

09) பறவைக் கூட்டம் பறந்து சென்றது என்பதை பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.

.................................................................

10) அன்பு என்பதன் எதிர்ச் சொல் யாது?

.................................................................

02) பின்வரும் பழமொழியின் கருத்தை எழுதுக.

01) மின்னுவ தெல்லாம் பொன்னல்ல

.................................................................

03) மரபுத் தொடரின் கருத்தை எழுதுக.

01) கண் திறத்தல்

.................................................................

04) ஆண் பால் வாக்கியத்தை பெண்பால் வாக்கியமாக மாற்றி எழுதுக.

01) எனது எசமான் நல்லவன்

.................................................................

05) பின்வரும் விடுகதைகளுக்கான விடையைத் தருக.

01) சின்ன வாயில் ஊட்டி விடும் உணவை ஜீரணம் செய்யாமல் வைத்திருப்பான்?

.................................................................

02) குண்டுச் செம்பில் தண்ணீர் இருந்தும் குருவி குடிக்க வழியில்லை அது என்ன?

.................................................................

06) இடைவெளியை நிரப்புக.

01) நோயற்ற வாழ்வுக்கு ம ..... க்க ..... உணவே சிறந்தது

07) நிறுத்தற் குறியீடுகளை இடுக.

01) அறஞ்செய விரும்பு என்றார் ஔவைப்பாட்டி

08) பின்வரும் தமிழ்ச் சொல்லின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

01) வைத்தியசாலை - ..................................

02) அதிபர் - ..................................

09) பின்வரும் தமிழ்ச் சொற்களுக்கான சிங்கள உச்சரிப்பை தமிழில் எழுதுக.

01) ருப்பியல் நபயய் - ..................................

02) பஸ் எ(க்)க ஆவா - ..................................

03) சருங்கலய - ..................................

10) பின்வரும் கணினி கலைச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

01) Web Site - ..................................

02) E-mail - ..................................

11) சரியான விடையைத் தெரிவு செய்க

01) இலங்கையிலுள்ள மிக நீளமான நதி எது?
1) களனிநதி 2) பம்பரகந்த 3) மகாவலி கங்கை

02) கிரிக்கெட் விளையாட்டின் பிறப்பிடம் எது?
1) இங்கிலாந்து 2) அவுஸ்ரேலியா 3) பிரான்ஸ்

03) உலக புத்தக தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
1) ஏப்ரல் 23 2) ஏப்ரல் 22 3) மார்ச் 8

04) பூமிக்கு மிக அண்மையிலுள்ள கோள் எது?
1) புதன் 2) சுக்கிரன் 3) வியாழன்

05) தேசியக் கொடியைப் பூரணப்படுத்துவதற்கும், நாட்டு மக்களின் ஒற்றுமையைக் காட்டுவதற்கும் தேசியக் கொடியில் பயன்படுத் தப்பட்டுள்ள நிறம் எது?
1) செம்மஞ்சள் 2) சிவப்பு 3) மஞ்சள் 4) பச்சை

06) எல்லே விளையாட்டில் ஒரு குழுவில் விளையாடும் வீரர்களின் ஆகக் கூடிய எண்ணிக்கை.
1) 18 2) 12 3) 16 4) 11

(14ஆம் பக்கம் பார்க்க)

## யெகோவாவின் சாட்சிகளின் மாநாடு

(யாழ்ப்பாணம்)

யெகோவாவின் சாட்சிகளின் நீங்கள் உலகத்தின் பாகமல்ல என்ற தொனிப் பொருளிலான மாநாடு நாளையும் நாளை மறுதினமும் காலை 9.40 மணி தொடக்கம் பிற்பகல் 3.50 வரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

அத்துடன் கிறிஸ்துவின் அரசாங்கம் இந்த உலகத்தின் பாகமல்ல என்ற பொதுப் பேச்சு, காவிற்கோபுரச்சுருக்கம், முழுக்காட்டுதல் பேச்சு என்பன இடம்பெறவுள்ளன.

(ஸ்ரீ-2)

## வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் தரம் ஒன்றை ஆரம்பிக்கக் கோரிக்கை

(அல்வாய்)

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் மீண்டும் தரம் ஒன்றுக்கு மாணவர்களை சேர்ப்பதற்கு அனுமதியை பெற்றுத் தருமாறு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவை இப்பகுதி பெற்றோர்களும் நலன்விரும்பிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் அளித்த மகஜரில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி 1000 பாடசாலை அபிவிருத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டமையால் மாகாணக்கல்வித் திணைக்களத்தின் அழுத்தத்தினால் இக் கல்லூரியின் தரமொன்றை இவ்வருடம் மூட வேண்டிய சூழ்நிலை கல்லூரி நிர்வாகத்திற்கு ஏற்பட்டது. அதேநேரம் யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஏனைய பாடசாலைகள் ஆரம்பப் பிரிவை மூடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கல்லூரி நிர் வாகம் செய்தமையால் நூற்றுக்கணக்கான ஏழைச்சிறுவர்கள் இக்கல்லூரியில் கல்வியை தொடர முடியாமல் சுமார் 2 கிலோ மீற்றர் தூரஇடங்களில் உள்ள பாடசாலைகளில் அனுமதி பெற்றுள்ளார்கள்.

இக்கல்லூரியை (66) அறுபத்தாறு வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்த ஸ்தாபகர்கள் தம்பசிட்டி வீதியின் வடக்குப் பகுதியிலுள்ள தனியான காணியிலேயே ஆரம்பப் பிரிவை ஸ்தாபித்து நடாத்தி வந்தார்கள்.

அவ்வாறே அன்று தொட்டு இன்று வரை ஆரம்பப் பிரிவு நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இக்கல்லூரியில் கட்டட வசதி , தளபாட வசதி , ஆசிரிய வளம் என்பன போதியளவு உண்டு. தற்போது தரம் ஒன்றிற்கு விண்ணப்பித்த மாணவர்கள் இட நெருக்கடியான தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை , பரு/சித்தி விநாயகர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இம் மாணவர்களின் பெற்றோர்கள் அன்றாடம் உழைக்கும் வர்க்கத்தினர். தினமும் காலையில் மாணவர்களை பாடசாலைக்குக் கூட்டிச் சென்று மதியம் வீட்டிற்கு அழைத்து வருவதனால் மிகவும் சிரமம் அடைகின்றார்கள்.

அது மட்டுமல்லாமல் இவ்விரு பாடசாலைகளில் இடநெருக்கடியும் போதிய தளபாட வசதிகளும் ஆசிரிய வளமும் இல்லாமல் உள்ளது.

இதனை கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கு பல முறை சுட்டிக் காட்டியும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

மேற்சொன்ன காரணங்களுக்காக வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் மீண்டும் தரம் ஒன்றை ஆரம்பிக்க உதவுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-19)

## வைகாசி விசாக பொங்கல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கற்குழி சிறிமுத்துமாரி அம்மன் ஆலய வைகாசி விசாக பொங்கல் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு விசேட ஆராதனையுடன் ஆரம்பமாகி 10 மணிக்கு கொடியேற்றம் நடைபெறும். அதனை தொடர்ந்து இரவு 12 மணிக்கு முத்துமாரி அம்பாள் தமது புதல்வன் காத்தவராயன் சகிதம் மடைப்பண்டம் ஏற்கும் நிகழ்வில் பங்கு பற்றி அதிகாலை நடைபெறும் பொங்கல் விழாவுக்கு ஆரோகணிப்பார்.

எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 8ஆம் மடை நடைபெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

(ஸ்ரீ-29)

## ஞானச்சுடர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் வெளியிடப்படும் ஞானச்சுடர் வைகாசி மாத இதழ் வெளிவந்துள்ளது.

சிவபுராணம் ஓதுதல், கந்தனே கலியுகத் தெய்வம், சந்தோஷத்தை பணயம் வைக்கலாமா?, சைவ சித்தாந்தம் கூறும் ஆணவம், துன்பம் வினை துடைக்கும் வழி உள்ளிட்ட பல்வேறு அம்சங்களுடன் இவ்விதழ் வெளிவந்துள்ளது.

(ஸ்ரீ)

## மெய்வல்லுநர் போட்டி

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவிலுள்ள இளைஞர் கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

(ஸ்ரீ-19)

## நிர்வாக சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சந்தை வீதியில் அமைந்துள்ள உதய சூரியன் சனசமூக நிலையத்தின் இவ்வாண்டுக்கான நிர்வாகக் குழு தெரிவு அண்மையில் இடம்பெற்றது. இதில் தலைவராக வ.முருகேசு ,உபதலைவராக க.கந்தசாமி ,செயலாளராக கோ.குணரத்தினம் ,உபசெயலாளர் வ.பாஸ்கரன் ,பொருளாளராக ஆ.ஜெயதாசன் ,கணக்காய்வாளராக மு.சொர்ணலிங்கம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

அத்துடன் நிர்வாக உறுப்பினர்களாக செ.குணபாலசிங்கம் ,செ.மகேந்திரராசா ,சி.சவுந்தரராசா ,கி.சிவப்பிரகாசம் ,கே.பரமசாமி ,ஆ.கனகரத்தினம் ஆகியோர் தெரிவாகினர்.

(ஸ்ரீ-2)




## பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் சண்டிலிப்பாய் மத்தி இ.கழகம் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளத்தினால் பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட இளைஞர் விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் சண்டிலிப்பாய் மத்தி இளைஞர் கழகம் வெற்றி பெற்று சம்பியனானது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் வடக்கு இளைஞர் கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் மத்தி இளைஞர் கழக அணி மோதிக்கொண்டது.

3 செற்களைக் கொண்ட இவ்வாட்டத்தில் சம பலம் கொண்ட சிறந்த இரு அணிகள் மோதியதால் ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இருந்தது.

இறுதியில் சண்டிலிப்பாய் மத்தி அணியானது 25:22, 25:18 என்ற நேர் செற்களில் சண்டிலிப்பாய் வடக்கு அணியை வென்று பிரதேச சம்பியனானது.

(ஸ்ரீ-2)

## வடமராட்சி கடற்பரப்பில் மீண்டும் இந்திய மீனவர்கள் ஊடுருவல்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கடற்பகுதியில் நீண்ட நாட்களுக்கு பின்னர் நூற்றுக்கும் மேற்பட்ட இந்திய இழுவைப்படகு மீனவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு முதல் கண்ணுக்குத் தெரியும் தூரத்தில் கூட்டமாகத் தரித்து நிற்பதாக வடமராட்சி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்திய மீனவர்களின் இழுவைப்படகின் நடவடிக்கையினால் பல மீனவர்களின் வலைகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் திரும்பி வந்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(ஸ்ரீ-10)

## வீதியை புனரமைத்து தருமாறு கோரிக்கை

(பருத்தித்துறை)

கரவெட்டி இராச கிராமத்தில் ஸ்ரீநாதர் பாடசாலை வீதி கடந்த 50 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் பெரும் சேதத்திற்கு உள்ளாகி இருப்பதனால் அப்பகுதி வாழ் மக்கள் பெரும் கஷ்ட நிலமையை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

இது விடயமாக பல தடவைகள் சுட்டிக்காட்டியும் இதுவரை எவ்வித பயனும் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதி விக்னேஸ்வரா கல்லூரி, ஸ்ரீநாதர் பாடசாலை மற்றும் நெல்லியடி நகரப் பகுதி ஆகிய இடங்களுக்கு செல்லும் முக்கிய வீதியாகவுள்ளது.எனவே, இவ்வீதியை விரைவாக புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் அவசரக் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.(ஸ்ரீ-10)

## கைத்தொலைபேசியில் உரையாடியவாறு பயணித்த நால்வருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

கைத்தொலைபேசியில் உரையாடியவாறு வாகனத்தை செலுத்திய நான்கு பேருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸாரால் மேற்படி நபர்கள் பிடிக்கப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

குறித்த வழக்கை விசாரித்த நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா இருவருக்கு தலா 3 ஆயிரம் ரூபாவும் மற்றைய இருவருக்கு தலா இரண்டாயிரம் ரூபாவும் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

(ச-6)








பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் மற்றும் பாடசாலை அதிபர் ந.தெய்வேந்திரராஜா, பிரதி அதிபர் மா.இராஜஸ்காந்தன், ஏனைய முக்கிய விருந்தினர்களை பாடசாலை வாத்தியக் குழுவினர் அழைத்து வருவதையும் பிரதம விருந்தினர் செ. உதயகுமார் உரையாற்றுவதையும் பரிசில்களை திருமதி நந்தினி உதயகுமார் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- அல்வாய் செய்தியாளர்)

# இலங்கையை உலுப்பிவரும்
# ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை

### அ. தோதான சர்வதேச தரங்கள் மற்றும் ஒப்பீட்டளவிலான அனுபவங்கள்

262. யுத்தத்தில் இருந்து மீண்ட பல நாடுகள், போர்க்குற்றங்கள் மற்றும் மனித இனத்திற்கு எதிரான குற்றங்கள் என்பதான நிலைச் சக்தியைக் கொண்ட, இலங்கைக்கு ஒத்த மீறல்களை அனுபவித்துள்ளன. மிகவும் தீவிரமான வேறுபாடு



களைக் கொண்ட நாடுகளின் அவ்வனுபவங்கள், அத்தகைய் குற்றச்சாட்டுக் களுக்கு பதிலளிக்கத் தேவையான சர்வதேச தரங்களை வெளியிடும் மற்றும் அத்தகைய குற்றங்கள் பற்றிய நடவடிக்கை எடுப்பதற்கான பல வகையான செயற்படுத்தக் கூடிய அணுகுமுறைகளையும் கொண்ட அத்தரங்களுக்கு ஏற்ற பூலோக எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளன.

263. இலங்கைத் தரப்பினராக உள்ள, பல மனித உரிமைகள் ஒப்பந் தங்கள், புலனாய்வு தொடர்பான கடப்பாடுகளைக் கொண்டுள்ளன. ஐ.சி.சி.பி.ஆர். இன் உறுப்புரை2(3) மனித உரிமை மீறல்களினால் பாதிக் கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் பயனுறு் பரிகாரத்தை வழங்குவதைத் தேவைப்படுத்துகிறது. ஐ.நா மனித உரிமைகள் குழுவின் விளக்கத்திற் கேற்ப உடன்படிக்கையின் சகல மீறல்களையும் நாடுகள் புலனாய்வு செய்வதைத் தேவைப்படுத்துவதோடு பாரிய மீறல்கள் அல்லது சர்வதேச குற்றங்கள் சம்பந்தப்பட்டரை அதில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப் பட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்பதையும்

## தமிழாக்கம் தொடர் 33

தேவைப்படுத்துகிறது.

(91) மேலும், இலங்கை தரப்பினராகவுள்ள சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமான, மனிதாபிமான மற்ற அல்லது இழிவாக நடாத்துதல் அல்லது தண்டனைக்கு எதிரான உடன் படிக்கையின் 12ஆம் உறுப்புரை சித்திரவதையாகிய சர்வதேச குற்றத் தைப் புரிந்த சகலரையும் புலனாய்வு செய்து அவர்கள்மீது வழக்குத் தொடர (அல்லது வழக்குத் தொடரு வதற்காகத் தேடிவரும் இன்னொரு நாட்டுக்கு நாடு கடத்துவதற்கு) நாடுகளைத் தேவைப்படுத்துகிறது.

264. பிராந்திய மனித உரிமைகள் உடன்படிக்கைகள் மற்றும் ஐ.சி.சி. சி.பி.ஆர். இற்கு ஐ.நா மனித உரிமைகள் குழு அளித்துள்ள விளக் கத்தின் கீழ் பிராந்திய மனித உரிமை கள் நீதி மன்றங்களின் தீர்ப்புக்களை அடிப்படையாகக் கொண்டு மனித உரி மைகள் சபைக்கு சுயாதீன நிபுணர்கள் அண்மையில் வழங்கிய அறிக்கை புல னாய்வுக்கான பிரயோசனம்மிக்க சட்டத் தரங்களை முன்வைக் கிறது. சுயாதீனம், பக்கச்சார்பற்றதன்மை, முழுநிறைவான பய னுறு மற்றும் உடனடி யான என்பவற்றை இக் கட்டளைகள் உள்ளடக்குகின்றன.

265. இவ்வுடன் படிக்கைகளின் கட் டுப்பாடுகளுக்குப் புறம் பாக, புலனாய்வு செய் வதற்கான கடமை வேறுபல சர்வதேச அமைப் புக்கள் மற்றும் தீர்மானங்கள் மூலம் பெறப்பட்டுள்ளது. பொதுச் சபையும், புலனாய்வு செய்வதற்கான கடமையை மனித உரிமைகள் சட்டம் உள்ளடக்கு வதாக அதன் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதா பிமானச் சட்ட மீறல்களினால் பாதிக் கப்பட்டவர்களுக்கு பரிகாரம் மற்றும் நஷ்டஈடு பெறுவதற்கான உரிமை பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் வழிகாட்டல்கள் என்ற அதன் 2006ஆம் ஆண்டின் 60/147 தீர்மானத் தில் விளக்கியுள்ளது. பாதுகாப்புச் சபையும் போர்க் குற்றங்களுக்கு மற்றும் மனித இனத்து க்கு எதிரான குற்றங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தலை உள்ளிட்ட மனித கௌரவத்திற்கு எதிரான பாரிய துஷ்பிரயோகங்களுக்கு தண்டனை யிலிருந்து விலக்கீட்டுரிமையை அப் புறப்படுத்துவதன் முக்கியத்துவத்தை யுத்தத்தின்போது பொதுமக்களின் பாதுகாப்பு பற்றிய அதன் 1674 (2006) தீர்மானத்தை உள்ளிட்டவாறு பலரை வலியுறுத்தியுள்ளது. உள்நாட்டு யுத்தம்ஒன்று சம்பந்தப்பட்ட நாட்டு நிலைமைகளில் பொதுமக்களைப் பாதுகாப்பது மற்றும் தண்டனை யிலிருந்து விலக்கீட்டுரிமையை அப் புறப்படுத்தும் விடயத்தில் அதே அணுகுமுறையை அது கடைப் பிடித்துள்ளது. இலங்கை உள்ளிட்ட நாட்டின் மற்றும் அரசாங்கத்தின் தலைவர்கள் பங்குபற்றிய வேர்ல்ட் சம்மிட் அவுட்கம் மாநாட்டில் 2005 இல் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் 60/1 யுத்தம், இனப் படுகொலை, போர்க்குற்றங்கள் இனத்துவச் சுத்திகரிப்பு மற்றும் மனித இனத்துக்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றிலிருந்து தமது மக்களைப் பாதுகாப்பதற்கான நாடுகளின் பொறுப்பை மீண்டும் வலியுறுத்தியுள்ளனர்.

266. மேலும், பொறுப்புக்கூறல் பற்றி முக்கியமான தரங்களையும் சட்டங்களையும் ஐக்கியநாடுகள் செயற்பாடுகள் தொகுத்துள்ளன. 2005 இன் தண்டனையிலிருந்து விலக்கீட்டு ரிமையை எதிர்பார்ப்பதற்கான செயற் பாடு மூலம் மனிதஉரிமைகளின் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுக்கான கோட்பாட்டுத் தொகுதி குறிப்பான முக்கியத்துவத்தைப் பெறுகிறது. ஐ.நா மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கட்டளைப்பிரகாரம் நிபுணர்களால் தொகுக்கப்பட்ட இந்த ஆவணம் சர்வதேச சட்டத்தின் கீழான குற்றங் களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மூன்று அடிப்படை உரிமைகள் உண்டு என்ற உள்ளார்ந்த அறிவினை வழங்கு கிறது: உண்மையை அறிவதற்கான உரிமை, நீதியைப் பெறுவதற்கான உரிமை, மற்றும் மீண்டும் ஏற்படாது என்ற நிறுவக ரீதியிலான உத்தர வாதத்தை உள்ளிட்ட நஷ்டஈட்டுக் கான உரிமை.

(92) 267. ஐக்கிய நாடுகளின் உறுப்பினர்களின் இந்நடவடிக்கை களுக்கு அப்பால், இனப்படுகொலை, போர்க் குற்றங்கள் மற்றும் மனித இனத்திற்கு எதிரான போர்க்குற்றங் களுக்கு எதிரான தண்டணையிலிருந்து விலக்கீடு அளிப்பதை விட்டும் அநேகமான நாடுகள் தவிர்ந்து கொண்டுள்ளன. அல்லது முன்னர் வழங்கப்பட்ட விலக்கீடுகளை இரத்து செய்வதற்கு நீதி அல்லது சட்டவாக்க ரீதியிலான நடவடிக்கைகளைப் பயன்படுத்தியுள்ளன. சர்வ தேச நீதிமன்றங்கள் அத்தகைய குற்றங் களுக்கான மன்னிப்புக்கள் வழங்க முடியாதவை என அதே போன்று தீர்ப்புவழங்கியுள்ளன. இதுவே ஐக் கியநாடுக ளின் கொள்கை நிலையாகவும் உள்ளது. இலங்கை அரசாங்கம் கூட, "மன்னிப்புக்கள் உள்ளார்ந்தவாறு விலக்கீட் டுக்கலாசார மொன்றை ஊக்குவிக் கிறது என் பது எமது நன்காய்ந்த கருத்தாகும் என்பதோடு ணவே அவை உகந் ததல்ல" எனக் குறிப் பிட்டுள்ளது.




268. உள் நாட்டு ஆயு தம் தரித்த மோதல் ஒன்றில் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் மீறல்கள் தொடர்பாக, பாரிய மீறல்களைப் புலனாய்வு செய்து ஆதாரம் இருப் பின், அவற்றுக் கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதை உறுதியாக ஆதரிப்பதற்கான சர்வதேச வழக்கம் அரசாங்கங்கள் மீது சட்டப்படியிலான கடமையொன்றுக்கான நீதித்துறை யிலான எடுத்துக்காட்டான முன்னோடி நிகழ்வும் தற்போதுள்ளன. குறிப்பாக அத்தகைய மீறல்களை சர்வதேச யுத்தங்களில் புலனாய்வு செய்வதற் கான கடமையினை ஏற்று, ஆனால் உள்நாட்டு ஆயுதந்தாங்கிய மோதலில் அப்படியில்லை என்ற விளக்கம் தொடர்ந்தும் வழக்கிலில்லை.

ஐ.சி.வை. இன் கூற்றுப்படி "எந்தவொரு யுத்த நடவடிக்கையிலும் கட்டாயக் குறைந்த பட்சமாக பொதுவாக இனங்காணப்பட்டுள்ள மனிதா பிமானத்தின் அடிப்படைக் கூற்றின் ஆய்வுகளை மனிதாபி மானச் சட்டத்தின் கோட்பாடுகளும் விதிகளும் பிரதிபலிக்கின்றன. சம்பந்தப்பட்ட செயல்களின் பார தூரமான தன்மையையோ அவற் றைத் தடை செய்வதில் சர்வதேச சமூகத்தின் அக்கறையையோ ஒரு வரும் சந்தேகிக்கமுடியாது" உள் நாட்டு யுத்தத்தில் பாரிய மீறல் களை புலனாய்வு செய்வதற்கான கடப் பாட்டினை பொதுச்சபையின் ஏக மனதான தீர்மானம் 60/147 இல் உறுதிப் படுத்தியுள்ளது. சர்வதேச மனிதபி மான சட்டவிளக்கத்தில் விசேட இடத்தை வகிக்கும் ஐ.சி. ஆர்.சி. நாடுகளின் பழக்கங்கள் பற்றிய விரிவான மீளாய்வின் அடிப் படை யில் உள்நாட்டு யுத்தத்தின் போதான போர்க்குற்றங்களை புலனாய்வு செய்து சட்ட நடவ டிக்கை எடுப்பதை மரபு வழக்கான சர்வதேச சட்டம் அரசாங்கங்கள் மீது கடமையாக்குகிறது எனக் கண் டுள்ளது.

269. சர்வதேச மனிதாபிமான அல்லது மனித உரிமைகள் சட்டத் தின் பாரிய மீறல்கள் தொடர்பாக பொறுப்புக் கூறலை மேம்படுத்தும் குறிப்பான பொறித்தொகுதிகளை ஏற்படுத்தும் தற்போதுள்ள அரச வழக்கம் மேலே விளக்கப்பட்ட சட்ட கடப்பாடுகளையும் தரங்களையும் ஊக்குவிப்பதாகவுள்ளது. பாரிய அளவிலான மீறல்களில் இருந்து மீண்டு நிலைத்தகவுள்ள சமாதானத் தையும் சிறந்ததொரு எதிர்காலத் தையும் கட்டியெழுப்ப முனையும் நாடுகள் கடந்த காலத்துக்குப் புறமுதுகு காட்டாமல் அதனை எதிர்கொள்ளவேண்டும் என்பதை அத்தகைய வழக்கம் குறிக்கிறது.

மோதலுக்குப் பிந்திய அல்லது மாற்றமடைந்து வரும் நிலைமை களில் "பொறுப்புக்கூறலை உறுதிப் படுத்தி நீதியை வழங்கி மீளிணக் கப்பாட்டை அடைவதற்காக சமூகத் தின் கடந்த கால பாரிய துஷ் பிரயோகங்கள் பற்றி உடன்பாட்டுக்கு வருவது தொடர்பான முழுமையான செயற்பாடுகளையும் பொறித் தொகுதிகளையும்" அமைப்பதில் நாடுகள் ஈடுபட்டுள்ளன. இச் செயற்பாடுகளும் பொறித்தொகு திகளும் கூட்டாக இடைக்காலத் துக்குரிய நீதி என அழைக்கப் படுகிறது.

(தொடரும்)






யாழ். கல்வி வலய நலன்புரிச் சங்கத்தினால் யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயத்திற்கான பிரிவுபசார நிகழ்வு நேற்று முன்தினம் வலயக் கல்வி பணிமனை மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் ஓய்வு பெற்றுச் செல்லும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அ. வேதநாயகம் மலர் மாலையிட்டு வரவேற்கப்படுவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் வடமாகாண கல்வியமைச்சின் பிரதிச் செயலாளர் வே.தி. செல்வரட்ணம் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-அலுவலகச் செய்தியாளர்)

# மன்னார் மீனவர்களின் பாஸ் நடைமுறையை நீக்க வேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. ஜனாதிபதியிடம் கோரிக்கை



மன்னார் மாவட்டத்தில் உள்ள மீனவர்கள் கடலுக்குத் தொழிலுக்குச் செல்லும் போது பாதுகாப்பு காரணங்களுக்காகப் பாஸ் பெற்றுச் செல்ல வேண்டும் என்ற நடைமுறையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கடிதம் மூலமாக ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மன்னார் மாவட்டத்தில் பாஸ் பெற்றே மீன்பிடிக்கச் செல்ல வேண்டும் என்ற நடைமுறை காரணமாக அங்குள்ள மீனவர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றார்கள். எனவே, இந்த பாஸ் நடைமுறையை நீக்குவதற்குப் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையிலும் நாட்டின் ஜனாதிபதி என்ற வகையிலும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடலுக்குள் 'இறங்குவதற்குத் தேவையான பாஸ் பெறுவதற்கு மீனவர்கள் சிவில் மற்றும் இராணுவ அதிகாரிகளான பத்துப் பேரிடம் தமது விண்ணப்பத்தில் கையெழுத்து பெற வேண்டியுள்ளது. விண்ணப்பத்தைக் கொண்டு கையெழுத்து பெறுவதற்காக செல்லும் மீனவர்கள் இந்த பத்துப் பேரையும் ஒரே நாளில் அல்லது ஒன்றிரண்டு தினங்களில் சந்திக்க முடியாத நிலைமை நிலவுகின்றது.

சில வேளைகளில் இந்தக் கையெழுத்து திடக்கூடிய அதிகாரிகள் அலுவலகத்தில் இருக்கமாட்டார்கள். அவர்கள் விடுமுறையில் சென்றிருப்பார்கள். அல்லது வேறு அலுவலாக வேறிடங்களுக்குச் சென்றிருப்பார்கள்.

இதனால் விண்ணப்பத்தில் உரிய கையெழுத்துக்களைப் பெறுவதற்காக மீனவர்கள் தமது தொழிலை விட்டு நாள் கணக்கில் அங்கும் அங்கும் அலைந்து திரிய வேண்டியுள்ளது. அவ்வாறு திரிந்தும் ஒரு சில தினங்களில் தமக்குத் தேவையான பாஸை பெற முடியாதவர்களாக இருக்கின்றார்கள்.

அன்றாடம் தொழில் செய்து தமது சீவியத்தை நடத்துகின்ற மீனவர்கள் இவ்வாறு அலைந்து திரிவதன ால் பல்வேறு கஷ்டங்களுக்கு உள்ளாகி வருகின்றார்கள். கடலுக்குச் செல்வதற்குரிய பாஸ் இல்லாத நிலையில் தொழில் செய்ய முடியாத காரணத்தினால் அவர்கள் தமது குடும்பத்தினருடன் பட்டினி கிடக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் இந்த பாஸ் நடைமுறை காரணமாக குறிப்பிட்ட சில இடங்களின் ஊடாக மட்டுமே மீனவர்களினால் கடலுக்குள் செல்ல வேண்டியிருப்பதால் நீண்ட வரிசையில் நீண்ட நேரம் நின்று அனுமதி பெற்று கடலுக்குள் கால் வைக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்களாகி விட்டன. இந்த நிலையில் யுத்தச் சூழ் நிலையில் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து அனைத்தையும் இழந்துள்ள மீனவர்கள் பாஸ் நடைமுறைபோன்ற காரணங்களினால் மேலும் துன்பங்களை அனுபவிக்காமல் இலகுவாகவும் வசதியாகவும் கடலுக்குள் சென்று மீன்பிடிப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். (ஸ்ரீ-2)

# கும்பாபிஷேக தின சங்காபிஷேகம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மாயவனூர் ஸ்ரீரங்க நாதப் பெருமாள் கோயிலில் கும்பாபிஷேக தின சங்காபிஷேகம் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் ஆரம்பமாகி மாலை வரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மதியம் சங்காபிஷேகமும் ஆலயத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட ஸ்ரீதேவி, பூமிதேவி சமேத ஸ்ரீரங்கநாதர் உற்சவ மூர்த்திகளுக்கு சிறப்பு பிரதிஷ்டா அபிஷேகமும் இடம்பெற்று மதியம் அன்னதான வைபமும் இடம்பெறும்.

மாலை பெருமானுக்கு திருக்கல்யாண வைபவம் இடம்பெற்று பூந்தண்டிகையில் சுவாமி வெளிவீதி உலா வந்து அடியவர்களுக்கு திருவருட் காட்சி வழங்குவார்.

எனவே அடியவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஸ்ரீ-86)

# தென்னங்கன்றுகள் விநியோகம்

(அச்சுவேலி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீளக் குடியமர்ந்த 2 ஆயிரத்து 397குடும்பங்களுக்கு என்றிப் திட்ட நிதி அனுசரணையுடன் தலா 5 தென்னங் கன்றுகள் வீதம் குடும்பங்களுக்கு வழங்குவதற்கு காணி நிர்வாகக் கிளையூடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-70)

# பல்கலைக்கழக மாணவர்களுக்கான இரண்டாம் கட்ட தலைமைத்துவ பயிற்சி

## 18 ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கான இரண்டாம் கட்ட தலைமைத்துவப் பயிற்சி திட்டத்தில் பத்தாயிரத்து 224 பேர் பங்கேற்வுள்ளதாக உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த மாணவர்கள் எதிர்வரும் 16 ஆம் திகதி தமக்கான பயிற்சி நிலையங்களுக்கு சமுகமளிக்க வேண்டும் என அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிகள் 18 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன. 28 நிலையங்களில் இந்தப் பயிற்சிகள் நடைபெறவுள்ளதாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் கூறினார். (ஸ்ரீ-2)

# இந்திய கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்த 16 இலங்கை மீனவர்கள் கைது

இந்திய கடற்பரப்புக்குள் அத்துமீறி பிரவேசித்த 16 இலங்கை மீனவர்கள் இந்திய கரையோர காவற்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் பயணித்த 3 படகுகளும் இந்திய அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்தொழில் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மீனவர்கள் திருகோணமலை, தெய்வேந்திரமுனைப் பகுதிகளிலிருந்து கடற்தொழிலுக்காக சென்றவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கான பேச்சுவார்த்தைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கடற்தொழில் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதுவரை இந்தியாவில் 80க்கு மேற்பட்ட இலங்கை மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஸ்ரீ

# சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும்

## ஜயலத் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸாரின் தாக்குதல் காரணமாக சுதந்திர வர்த்தக வலயத்தின் ஊழியர்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு அரசாங்கம் உடனடியாக நஷ்டஈட்டை வழங்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன வலியுறுத்தியுள்ளார்.

கடந்த 30 ஆம் திகதி நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் உள்ள பல தொழிற்சாலைகளுக்கு இலட்சக்கணக்கில் இழப்பு ஏற்பட்டுள்ளது எனவும் ஊழியர்களில் பலர் உடல் உறுப்புக்களை கூட இழந்துள்ளனர் எனவும் ஜயலத் ஜயவர்த்தன கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தொழிற்சாலைகள் மூடப்பட்டாலும் ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பளம் அப்படியே வழங்கப்பட வேண்டும்.

தனியார் துறையினருக்கான ஓய்வூதிய சட்டமூலத்திற்கு எதிராக சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் அமைதியான போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போது உயர் மட்டத்தில் இருந்து கிடைத்த உத்தரவிற்கு அமைய பொலிஸாரும் குண்டர்களும் ஊழியர்கள் மீது கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தியதால் இந்த சம்பவம் பாரதூரமான சம்பவமாக மாறியதாகவும் ஜயலத் ஜயவர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

(ஸ்ரீ-2)

# யாழ். மாவட்டத்தில் 4,84,791 பேர் மட்டுமே உள்ளூராட்சி தேர்தலில் வாக்களிக்கத் தகுதி

## உதவித் தேர்தல் ஆணையாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் புதிய வாக்காளர் இடாப்பின் பிரகாரம் தற்போது 4 இலட்சத்து 84 ஆயிரத்து 791 பேரே உள்ளூராட்சி தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ். கருணாநிதி தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் மொத்தமாக 8 இலட்சத்து 16 ஆயிரத்து 5 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர். இந்த வாக்காளர் பதிவிலிருந்து 3 இலட்சத்து 31 ஆயிரத்து 214 வாக்காளர்களது பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.

இதேவேளை உள்ளூராட்சி சபைக்கான தேர்தல் முடியும் வரை வேட்பு மனுத்தாக்கல் செய்த அரச கூட்டுத்தாபன ஊழியர்கள் எவரும் பணிக்கு திரும்ப அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் தெரிவித்தார்.

இது தவிர 2011 ஆம் ஆண்டிற்கான புதிய வாக்காளர் இடாப்பு கணக்கெடுப்பு தொடர்பாகவும் வாக்களிப்பு நிலையங்கள் அமைவிடம் தொடர்பாகவும் பிரதேச செயலகப் பிரிவுகள் ரீதியாக கலந்துரையாடப்படவும் உள்ளன.

மேலும் நடைபெறவுள்ள ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைக்கான தேர்தலுக்கு 2010 ஆம் ஆண்டிற்கான புதிய வாக்காளர் இடாப்பே பயன்படுத்தப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

# பாதுகாப்பு செயலாளரும் பொலிஸ் மா அதிபரும் பதவி விலக வேண்டும்

## பொன்சேகா தெரிவிப்பு



பாதுகாப்புச் செயலாளரும் பொலிஸ்மா அதிபரும் பதவி விலக வேண்டுமென முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தின் மீது பொலிஸார் நடத்திய தாக்குதல் மிலேச்சத்தனமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெள்ளைக் கொடிவழக்கு விசாரணைகளில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். கடைநிலை பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளாது உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பொலிஸ் மா அதிபரும் பாதுகாப்புச் செயலாளரும் பதவியை இராஜினாமா செய்யவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

# கட்டுநாயக்க பிரதேசத்தின் பாதுகாப்பு அனைத்தும் இராணுவத்திடம் ஒப்படைப்பு

சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல்களின் பின்னர் கட்டுநாயக்க பொலிஸார் அந்த பிரதேசத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு முழு கட்டுநாயக்க பிரதேசத்தின் பாதுகாப்பும் நேற்று முன்தினம் முதல் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இராணுவ அணியொன்று கட்டுநாயக்கபொலிஸ் நிலையத்தில் இருந்து கடமையில் ஈடுபடும் என பொலிஸ் தலைமையகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்டுநாயக்க பொலிஸார் தற்போது சீதுவ பொலிஸாருடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் பொறுப்பதிகாரி உட்பட பொலிஸார் அங்கிருந்து பணிகளை மேற்கொள்ள உள்ளனர்.

அதேவேளை கட்டுநாயக்க பொலிஸ் நிலையத்தில் ஆயுதங்கள் அனைத்தும் நீர்கொழும்பு தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் ஆவணங்கள் உள்ளிட்ட ஏனைய சகல சொத்துக்களும் பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க பிரதேசத்தின் பாதுகாப்பு கடமையை பொறுபேற்றுள்ள இராணுவத்தினர் சுதந்திர வர்த்தக வலயம் அமைந்துள்ள பகுதிகளின் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர். (ஸ்ரீ-2)

# ஊழியர்களை அடக்கி ஒடுக்கி அவர்களுக்கு நிவாரணம் வழங்கும் ஒரே நாடு இலங்கை

## விக்ரமபாகு கருணாரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் அன்றி உலகின் எந்த நாட்டில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது என புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ன கேள்வி எழுப்பியுள்ளார்.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை கண்டித்து நடத்தப்பட்ட போராட்டத்தில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

ஊழியர்களின் கை கால்களை முறித்து அவர்களுக்கு நிவாரணம் வழங்கும் ஒரே நாடு இலங்கை மட்டுமே எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தாக்குதலை நடத்திய சில பொலிஸ் உத்தியோகத்தர்களை சிறையில் அடைத்து அவர்களை பாதுகாக்க அரசாங்கம் முயற்சிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# 2011.06 03 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1539-ஸ்பானிய நாடுகாண் பயணி ஹெர்னாண்டோ டெசோட்டோ புளோரிடாவை ஸ்பெயினுக்காக உரிமை கொண்டாடினான்.

★ 1864-அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டணிப் படைகள் வேர்ஜீனியாவின் ஹனோவர் நகரில் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்புப் படைகளைத் தாக்கினர்.

★ 1940-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் வான்படை பாரிஸ் நகரில் குண்டுகளை வீசின.

★ 1940-இரண்டாம் உலகப் போர்: பிரான்சின் டன்கேர்க் நகரில் இடம்பெற்ற போடரில் ஜேர்மன் படைகள் வெற்றி பெற்ற நட்பு அணி நாடுகள் முழுமையாகப் பின்வாங்கின.

★ 1962-பிரான்சின் போயிங் விமானம் பாரிசில். விபத்துக்குள்ளாகியதில் 130 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1965-நாசாவின் ஜெமினி 4 விண்கலம் ஏவப்பட்டது. எட்வேர்ட் வைட் 21 நிமிடங்கள் விண்ணில் நடந்து சாதனை படைத்தார். இவரே விண்ணில் நடந்த முதலாவது அமெரிக்கர் ஆவார்.

★ 1969-தெற்கு வியட்நாமில் மெல்பேர்ன் என்ற அவுஸ்திரேலியப் போர்க்கப்பல் எவான்ஸ் என்ற அமெரிக்கப் போர்க்கப்பலுடன் மோதி அதை இரண்டாகப் பிளந்தது.

★ 1991-ஜப்பானில் உன்சென் மலை வெடித்ததில் 43 பேர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்கள் அனைவரும் ஆய்வாளர்களும் ஊடகவியலாளர்களும் ஆவர்.

★ 1998-ஜேர்மனியில் கடுகதி தொடரூந்து ஒன்று பாதையை விட்டு விலகியதில் 101 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2006-2001 இல் அகற்றப்பட்ட கண்ணகி சிலையை முதல்வர் மு.கருணாநிதி மீண்டும் திறந்து வைத்தார்.

★ 2006-மொண்டெனேகுரோ நாடு செர்பியா- மொண்டெனேகுரோ கூட்டமைப்பில் இருந்து பிரிந்தது.

★ 2007-கொழும்பில் விசாரணைக்காகக் கைது செய்யப்பட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு தமிழ் பணியாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

★ 2007-தெற்கு சீனாவில் யுனான் பகுதியில் இடம்பெற்ற 6.4 அளவு நிலநடுக்கத்தில் பலர் கொல்லப்பட்டு பலத்த சேதம் ஏற்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1808-ஜெபர்சன் டேவிஸ், அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் அரசுத் தலைவர் (இ.1889)

★ 1931-ராவுல் காஸ்ட்ரோ, கியூபாவின் அரசுத் தலைவர்

★ 1961-லோறன்ஸ் லெஸிக், அமெரிக்கக் கல்வியியலாளர்

★ 1966-வசீம் அக்ரம், பாகிஸ்தான் துடுப்பாட்டக்காரர்

### இறப்புக்கள்

★ 1657-வில்லியம் ஹார்வி, ஆங்கிலேய அறிவியலாளர் (பி. 1578)

★ 1963-பாப்பரசர் 23 ஆம் ஜோன் (பி.1881)

★ 1975-எய்சாக்கு சாட்டோ, ஜப்பானியப் பிரதமர், நோபல் பரிசுபெற்றவர் (பி.1901)

★ 1989-அயதொல்லா கொமெய்னி, ஈரானிய மதத் தலைவர் (பி.1900)

★ 1990-ரோபேர்ட் நாய்சு, அமெரிக்கப் பொறியியலாளர் (பி.1927)

★ 2000-ஜெய்சங்கர், தமிழ் நடிகர்

★ 2001-அந்தனி குயின், ஹொலிவுட் நடிகர் (பி.1915)

★ 2007-ரத்னமாலா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை.



1924-திராவிட முன்னேற்றக் கழகத்தலைவரும் தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சருமான மு.கருணாநிதியின் பிறந்த தினம்.

# கொஞ்சம் அமுதம் கொஞ்சம் விஷம்



ஆன்மீகம் 13

"பண்டிகை நாள் என்றாலே வெறுப்பாக இருக்கிறது. பெண்கள் சமையல் கட்டிலேயே அடைந்துகிடந்து, விதவிதமாக தின்பண்டங்களைச் செய்தே களைத்துப்போகிறோம். இதுவா கொண்டாட்டம்?"

வாழ்க்கை என்பதே ஆனந்தமாகக் கொண்டாடப்பட வேண்டியது. அப்படி அமைத்துக்கொள்ளத் தெரியாதவர்களுக்காகத் தான் வெளியில் பல கொண்டாட்டங்களை இந்தத் தேசத்தில் உருவாக்கினார்கள்.

வயலை உழப்போகிறார்களா? அது ஒரு கொண்டாட்டம். விதை தூவப்போகிறார்களா? இன்னொரு கொண்டாட்டம் களையெடுப்பது ஒரு கொண்டாட்டம். விளைந்ததை அறுவடை செய்வது ஒரு கொண்டாட்டம், உழவு மாடுகளுக்கு மரியாதை செய்வது ஒரு கொண்டாட்டம். யார் வீட்டிலாவது திருமணமா, பல நாள் கொண்டாட்டம் என்றெல்லாம் ஏன் அமைத்தார்கள் ?

கொண்டாட்டம் என்பது சந்தோஷத்தின் வெளிப்பாடு. வாழ்க்கையின் அடிப்படை நீங்கள் கொண்டாட்டங்களை எப்படி அமைத்துக் கொள்கிறீர்கள் என்பதைப் பொறுத்துத்தான் உங்கள் ஆனந்தம் இருக்கிறது.

கொண்டாட்டம் வயிறு முட்ட சாப்பிடுவதில் இல்லை உணர்வில் இருக்கிறது. உங்கள் முதல் கவனம் சந்ஷேமாக இருப்பதில்தான் இருக்க வேண்டும்.

விதவிதமாகச் சமைக்க வேண்டும். பின்பு அதைப் புசிக்க வேண்டும். அப்புறம்தான் கொண்டாட வேண்டும் என்று ஏன் நினைக்கிறீர்கள்?

முதலில் உங்களையே ஒரு கொண்டாட்டமாக மாற்றிக்கொள்ளுங்கள். சமையல் செய்வதை ஏன் வேலையாக நினைக்கறீர்கள்? காய்கள் அரிவதைக் கூட ஒரு கொண்டாட்டமாக மாற்றிக் கொண்டு பண்டிகை நாளை ஆரம்பித்துப் பாருங்கள்.

"பெண்கள் வேலை செய்ய வேண்டும் ஆண்கள் கொண்டாட வேண்டும் என்றுதான் நீங்களும் சொல்கிறீர்களா?"

ஆண், பெண் என்று பிரித்துப் பேசவில்லை. வாழ்க்கையை வேதனையோடு நகர்த்தத் தீர்மானித்திருக்கிறீர்களா, அல்லது கொண்டாட்டமாக மாற்றிக்கொள்ள விருப்பமா என்றுதான் கேட்டேன்.

அன்பும் பிரியமும் விருப்பமும் இல்லாமல் நீங்கள் சமைத்தால், ஒரு விதத்தில் ஆண்களுக்கும் அது தண்டனை தானே?

பெண்களாவது புலம்பித்தள்ளி விடுகிறார்கள். ஆண்கள்...?

ஒருமுறை சங்கரன்பிள்ளை, பெண்கள் கூட்டம் ஒன்றுக்குப் போயிருந்தார்.

"பெண்கள்முட்டாள்களாகக் கருதப்பட்டு இருக்கிறார்கள். அடிமைகளாக நடத்தப்பட்டு இருக்கிறார்கள். வேட்டையாடப்படும் இரைகளாக விரட்டப்பட்டு இருக்கிறார்கள். அவர்க்ள் எந்த விதத்திலாவது வேதனைப்படவில்லை என்று யாராவது சொல்ல முடியுமா?" என்று மைக்கை இறுகப்பற்றியபடி ஒரு கனமான பெண்மணி உணர்ச்சிகரமாகப் பேசிக் கொண்டு இருந்தாள்.

சங்கரன்பிள்ளை எழுந்தார். "என்னால் சொல்ல முடியும். பெண்கள் ஒரு போதும் மௌனமாக வேதனைப்பட்டதில்லை" என்றார்.

உண்மைதானே?

உள்ளுக்குள் நீங்கள் சந்தோஷமாக இல்லாதபோது சுற்றி உள்ளவர்களை மட்டும் எப்படிச் சந்தோஷமாக இருக்க அனுமதிப்பீர்கள்? தூக்கிவைத்த முகத்துடன் நீங்கள் உட்கார்ந்தால் மற்றவர்களின் கொண்டாட்டம் என்னவாகும்? சமைத்த களைப்பும் சாப்பிட்ட அயர்ச்சியும்தான் பண்டிகை நாளில் மிச்சமாகும்.

சந்தோசமான நபராக இருக்கும் வரைதான் நீங்கள் ஆபத்தில்லாதவர். சந்தோஷம் இல்லாத நேரங்களில் பரிதாபமான செயல்களில் ஈடுபடுகிறீர்கள். ஆண்களும் இதைப் புரிந்து கொண்டால், உங்களுக்கு இந்த வேதனை இருக்காது.

## வாழ்க்கையைக் கொண்டாடுங்கள்

ஆண்களைப் பற்றிப் பேசும்போது ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

கடற்கரையில் ஒரு பெண் கூழாங்கல் ஒன்றைக் கண்டெடுத்தாள். சுத்தம் செய்ய அதைத் தேய்த்தாள். எதிரில் ஒரு பூதம் தோன்றியது.

"என்னை விடுவித்ததற்காக உன் விருப்பம் ஒன்றை நிறைவேற்றுகிறேன். என்ன வேண்டும்?" என்று கேட்டது.

"என் நாய்க்கு டி பேசவேண்டும்; பாட வேண்டும்; பரத நாட்டியம் ஆடவேண்டும்!"

பூதம் உதட்டைப்பிதுக்கியது. "அத்தனை சக்தி எனக்கில்லை. வேறு ஏதாவது கேள்!"

"அப்படியானால், அன்பானவனாக நகைச்சுவை உணர்ச்சி மிகுந்தவனாக, வீட்டு வேலைகளில் சந்தோஷமாக உதவி செய்பவனாக, என்னையும் என் குடும்பத்தையும் மதிப்பவனாக என்னிடம் பொய்யே சொல்லாதவனாக ஓர் ஆண்மகனை எனக்குக் கணவனாகக் கண்டு பிடித்துக்கொடு!"

பூதம் பெருமூச்சு விட்டது. "முதல் ஆசை பரவாயில்லை. உன் நாய்க்குட்டி எங்கே?"

இந்தத் தேசத்தில் மட்டுமல்ல... உலகெங்குமே குடும்பப் பொறுப்புக்களைப் பெண்கள் மீது சுமத்துவதை ஆண்கள் பழக்கமாக வைத்திருக்கிறார்கள்.

வீட்டில் ஒரு பெண் வேதனையாக இருந்தால் அந்த வீட்டின் மொத்த சந்தோஷமும் பறிபோகும் என்பதை ஆண்கள் உணர வேண்டும்.

கொண்டாட்டங்களுக்காக அமைக்கப்பட்டவையே பண்டிகைகள் கால ஓட்டத்தில், அடிப்படை நோக்கம் தேய்ந்துபோய் வெறும் சடங்குகள் மட்டுமே நின்று விட்டதால்தான் பண்டிகைகள் பெண்கள் மீது பெரும் பாரமாக அழுத்துகின்றன.

அரசியலோ, ஆன்மீகமோ எந்த அமைப்பாக இருந்தாலும் காலத்துக்கு ஏற்றாற் போல் அவ்வப்போது திருத்தி அமைக்கப்பட வேண்டும். அப்போது தான் அதன் அடிப்படை உயிர்ப்புடன் இருக்கும்.

பண்டிகைகளுக்கும் அந்த அவசியம் வந்துவிட்டது.

வெளியே மிதக்கும் விஷத்தை கவனமாக விலக்கினால்தான், உள்ளே ததும்பும் அமுதத்தை ருசிக்க முடியும்!

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# பழமொழி கூறும் பொருளியலுண்மைகள் 02

சில பழமொழிகள் பல்வேறு மொழிகளைப் பேசுவோர் மத்தியிலும் புளக்கத்தில் இருப்பதையும் நாம் உணரலாம். உதாரணமாக தமிழிலே "பழகப்பழகப் பாலும் புளிக்கும்" என்பதற்கு ஈடாக ஆங்கிலத்தில்"familiarity breeds contempt" என்றும் "பல மரம் கண்ட தச்சன் ஒரு மரமும் வெட்டான்" என்பது போன்று ஆங்கிலத்தில் Jack of all trades is master of none என்றும் ஒரே கருத்துள்ள பழமொழிகள் பல இன மக்களிடையே பல்வேறு மொழிகளில் பேசப்படுவதை நாம் அறிவோம். இதிலிருந்து அறிவதென்னவெனில் மனிதவாழ்வில் உணரப்படும் எத்தனையோ உண்மைகள் ஓர் இனத்துக்கு மட்டும் சொந்தமானவையல்ல. மாறாக அவை உலகத்துக்கே சொந்தமானவை என்பதாகும். பொருளியல் புகட்டும் உண்மைகளும் அவ்வாறானவையே.

**பொருளியல் தத்துவங்கள்**

பொருளியல் ஆராயும் பிரச்சினைகளும் அப்பிரச்சினைகள் தோற்றுவிக்கும் வினாக்களும் மனிதப் பிறவி ஆரம்பமாகிய காலம் தொடக்கமே இருந்து வந்துள்ளன என்பதை ஏற்றுக்கொண்டால் பொருளியலின் தோற்றத்தை அடம்ஸ்மித் இன் 18 ஆம் நூற்றாண்டு வெளிவந்த "தேசங்களின் வளம்" (Wealth of Nations) என்ற நூலுடன் ஆரம்பிப்பது பொருத்தமுடையதன்று எதை, எப்படி, யாருக்காக உற்பத்தி செய்வது என்ற பொருளியலின் அடிப்படை வினாக்கள் மூன்றிற்கும் மனிதப்பிறவி, அதன் தோற்றக்காலத்திலிருந்தே விடைகாண முயன்று வந்துள்ளது அந்த முயற்சியின் விளைவாக பல உண்மைகளை மனித இனம் காலத்துக்குக் காலம் உணர்ந்து வந்தேயிருக்கும் என்பதை நாம் மறுக்கமுடியாது. அந்த உண்மைகள் எழுத்திலே வடிக்கப்படாது இருப்பினும் பேச்சுவழக்கிலே பழமொழிகளாகவும் கவிதைகளாகவும் பல சமூகங்களில் நிலவி வந்திருக்கலாம். இந்த உண்மையை ஜோன் கெனத் கல்பிறைட் (1906-2006) என்ற அமெரிக்கப்பொருளியல் பேராசிரியர் ஒரு சிறு உதாரணத்தைக்கொண்டு தனது "பொருளியல் வரலாறு" (A History of Economics, Hamish Hamilton: London, 1987) என்ற நூலில் விளக்குகிறார். "கலப்பட நாணயம் நல்ல நாணயத்தைத் துரத்திவிடும்" (bad money chases good ) என்ற உண்மை கிறஷாம்விதி என்று பொருளியலிற் போற்றப்படுகின்றது. அதாவது வெள்ளியும் பொன்னும் நாணயங்களாகப் புளக்கத்திலிருந்த காலத்தில் பசும்வெள்ளி, பசும்பொன் நாணயங்களுக்கு மத்தியில் கலப்பட வெள்ளியினாலும் கலப்பட பொன்னினாலும் உருவாக்கப்பட்ட நாணயங்கள் புளக்கத்துக்குவந்து அவை பொருளாதார பரிவர்த்தனையில் ஏற்றுக்கொள்ளப்படுமானால் நல்ல நாணயங்கள் விரைவில் ஓடி ஒளிந்துவிடும் இந்த உண்மையை முதலில் கண்டுபிடித்தவர் இங்கிலாந்தில் முதலாம் எலிசபெத் மகாராணி ஆட்சிக்காலத்தில் வாழ்ந்த தொமஸ் கிறஷாம் என்று பொருளியல் வரலாற்று நூல்கள் கூறுகின்றன. ஆனால் பொன், வெள்ளி நாணயங்கள் இங்கிலாந்தில் மட்டுமல்ல வேறுபல உலக நாடுகளிலும் புளக்கத்திலிருந்து வந்துள்ளன. அவ்வாறாயின் அந்த நாடுகளில் இந்த உண்மை எலிசபெத் மகாராணியின் காலம் வரை உணரப்படவில்லையா? நிகோல் ஒறெஸ்மே (1323-1382) என்ற ஒரு பிரஞ்சுப்பாதிரி கிறஷாமிற்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னரே இவ்வுண்மையை உணர்ந்துள்ளார் என கல்பிறைட் கூறுகின்றார். இந்த உண்மையை மேலும் ஆராய்ந்தால் ஒறெஸ்மே பிறந்த ஐந்து வருடங்களின் பின் மரணித்த இப்னுதைமிய்யா (1268-1328) என்னும் சிரியநாட்டு ஓர் இஸ்லாமிய அறிஞன் இதே உண்மையை உணர்ந்து நாணயங்களின் பெறுமதியைப் பாதுகாப்பதே ஒரு அரசாங்கத்தின் பிரதான கடமையென்றும் பெறுமதியற்ற நாணயங்களை புளங்கவிட்டால் பெறுமதியுள்ள நாணயங்கள் மறைந்துவிடும் என்றும் தனது கலீபா மன்னனுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். இது இன்றைய நிதிக்கொள்கைப் பொருளியலாளர்களும் மத்தியவங்கி ஆளுநர்களும் பேசுவதுபோல் தோன்றவில்லையா? ஆகவே கல்பிறைட் கூறுவது போன்று "யாரும் கண்டு பிடிப்பதற்காக பொருளியல் விதிகள் காத்துக்கிடப்பதில்லை." அவை கூறும் உண்மைகள் எல்லாமக்களாலும் எல்லா இனங்களிலிலும் உணரப்படுபவையே.

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

**கலாநிதி அமீர் அலி**
**மேற்கு அவுஸ்திரேலியா**

(தொடரும்)

# இடம்பெயர்ந்த மக்களின் உரிமைகளை பாதுகாக்கவே மனித உரிமை பாதுகாவலர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர்

## யாழ்.பிராந்திய இணைப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்ந்தோர் முகாம்களிலிருந்து இளைஞர்- யுவதிகளை தெரிவு செய்து அவர்களுக்கு மனிதவுரிமை பாதுகாவலர் பயிற்சியளிக்கப்பட்டு வருவதாக இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட கிளையின் பிராந்திய இணைப்பாளர் ரி. கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழுவின் உள்ளக இடம்பெயர்வுக்கான தேசிய பாதுகாப்புக்கும் நிரந்தர தீர்வுக்குமான செயற்றிட்டத்தின் கீழ் 2010 ஆம் ஆண்டு பயிற்சியளிக்கப்பட்ட மனிதவுரிமை பாதுகாவலர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் பட்டப்படிப்பு கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் மனிதவுரிமை பாதுகாவலர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இரண்டாவது முறையாக இடம் பெறுகிறது.

இதன்மூலம் மனிதவுரிமை பயிற்சி நெறியை முடித்தவர்களுக்கு தமது பணியை மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மனித உரிமை ஆணைக்குழு 1996 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சட்ட ரீதியான ஒரு நிறுவனமாகும்.

இந்நிறுவனமானது இலங்கையில் 10 மாவட்டங்களிலே தனது சேவையை மேற்கொண்டு வருகிறது.

யாழ். மாவட்டத்திலும் 1996 ஆம் ஆண்டு தொடக்கம் தனது சேவையை மேற்கொண்டு வந்தது.

உள்நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பெருமளவான மக்கள் தமது சொந்த பிரதேசங்களிலிருந்து இடம் பெயர்ந்து வேறு பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

அவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் நோக்குடன் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து இந்த செயற்றிட்டத்தை ஆரம்பித்தது.

இதன் மூலம் வடக்கிலே யாழ்ப்பாணம், வவுனியா, கிழக்கிலே திருகோணமலை , மட்டக்களப்பு, கல்முனை போன்ற பகுதிகளிலும் இந்த ஆணைக்குழு தமது சேவைகளை மேற்கொண்டு வருகிறது.

மனித உரிமைகளை மேம்படுத்துவதற்காகவும் பாதுகாப்பதற்காகவும் இந்த திட்டத்தை 2002 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தி வருகிறது. யாழ். மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்தோர் முகாம்களில் வாழ்ந்து வருபவர்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அவர்கள் மத்தியிலுள்ள இளைஞர் யுவதிகளை இந்த பாதுகாவலர் பயிற்சி நெறியில் இணைத்து பயிற்சி அளித்து வருகின்றது.

மனித உரிமைகளை பாதுகாக்க வேண்டும் என தனது மனதில் எண்ணிக் கொள்ளும் ஒவ்வொரு தனி மனிதனும் மனித உரிமை பாதுகாவலனே.

அந்த அடிப்படையிலேயே போரினால் பாதிக்கப்பட்ட சமூகத்தினரில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இந்த பயிற்சியளித்து அவர்களை சமூகத்தில் பணியாற்ற தயார் செய்துள்ளோம்.

இவர்களுக்கு 13துறை சார்ந்த பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் சுகாதாரம், போரின் அனர்த்தத்திலிருந்து மக்களை பாதுகாப்பது தொடர்பான அனைத்து பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இவர்கள் யாழ். மாவட்டத்திலுள்ள 15 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் பணிபுரியவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

## மாதிரி புலமைப்பரிசில் பரீட்சை

(அல்வாய்)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் தரம் 5 மாணவர்களுக்கான மூன்றாவது மாதிரி புலமைப்பரிசில் பரீட்சை நாளை சனிக்கிழமை சகல பாடசாலைகளிலும் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

வினாத்தாள் பொதிகளை அவ்வவ் கோட்டக்கல்வி அலுவலகங்களில் இன்று பெற்றுக் கொள்ளுமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(பூநகரி)

பூநகரி பிரதேச ஒருங்கிணைப்புப் குழுக்கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் ஜெயபுரம் ம.வி மண்டபத்தில் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார் தலைமையில் நடைபெறவுள்ளதாக பூநகரி பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-84)

# பாடசாலை மாணவர்களிடம் ஊக்க மருந்து சோதனை

பாடசாலை மாணவர்கள் தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்துகளை பாவித்துள்ளனரா என அறிவதற்காக விளையாட்டு அமைச்சு இவர்களை சோதனைக்கு உட்படுத்த தீர்மானித்துள்ளது என விளையாட்டு அமைச்சு அறிவித்துள்ளது.

பாடசாலைகளுக்கு சென்று இந்த சோதனையை மேற்கொள்வதற்காக விசேட திடீர் சோதனைக்குழு அமைக்கப்படவுள்ளதாக அமைச்சின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட மருந்துகளால் உள்நாட்டு விளையாட்டுத்துறை வட்டாரங்களில் ஆபத்தான நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளதால் அமைச்சு இந்தத் தீர்மானத்தை எடுக்க வேண்டியிருந்தது என ஊடக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தடைசெய்யப்பட்ட பொருட்களைப் பற்றி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டுவதற்கு விசேட நிகழ்ச்சித் திட்டங்களை அமைச்சு நடத்தவுள்ளது. (ஸ்ரீ-2)

# தனியார்துறை ஓய்வூதியத்திற்கு எதிரான நடவடிக்கைகள் மனித உரிமை மீறலாகும்

## பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

மக்களுக்கு நன்மை கிடைக்கும் எத்தகைய தீர்மானங்களுக்கும் எவரேனும் எதிர்ப்பு தெரிவிப்பாராயின் அது மனித உரிமைகளை மீறும் செயலாகும் என்று பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

இதனால் தனியார் துறையினருக்கான புதிய ஓய்வூதிய முறைக்கெதிராக சிலர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மனித உரிமையை மீறும் செயலாகும் என அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நீதிமன்ற கல்லூரியில் நடைபெற்ற மனித உரிமைகள் பொதுமக்கள் சேவை தொடர்பான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது பிரதமர் இதனை குறிப்பிட்டார்.சில முன்னணி நாடுகளில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. ஆனால்,இலங்கை போன்ற நாடுகளில் மனித உரிமைமீறும் நிலையை கண்டறிவதற்காக அவை முயற்சி செய்கின்றன என்று அவர் தெரிவித்தார்.

மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு அனைவரும் கடமைப்பட்டுள்ளோம்.ஒரு நாடு மற்றொரு நாட்டின் விவகாரங்களை தலையிட்டு சட்ட நடைமுறைக்கு மாறான செயற்பாடுகளில் ஈடுபடுமாயின் அவையே சம்பந்தப்பட்ட நாட்டின் மனித உரிமையை மீறும் செயலாகும். (ஸ்ரீ)

# மேலுமொரு தொகுதி முன்னாள் போராளிகள் நாளை மறுதினம் விடுதலை செய்யப்படவுள்ளனர்

(கொழும்பு)

புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மேலும் ஒரு தொகுதி முன்னாள் போராளிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 900 முன்னாள் விடுதலைப் புலிப் போராளிகள் இவ்வாறு சமூகத்துடன் இணைக்கப்படவுள்ளதாக இளைஞர் விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை குறித்த முன்னாள் போராளிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாகவும் முன்னாள் புலி உறுப்பினர்களை விடுதலை செய்வதனை முன்னிட்டு சில விசேட நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)



வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் சுவாமி விவேகானந்தர் கண்காட்சி அண்மையில் இடம்பெற்றது. இக்கண்காட்சியினை பாடசாலை அதிபர் எஸ்.பத்மநாதன் ஆரம்பித்து வைத்து பார்வையிடுவதையும் அருகில் பாடசாலை மாணவர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# யுவதியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் இருவருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

வவுனியா- மன்னார் வீதியில் யுவதியொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கடந்த 30 ஆம் திகதி இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டு வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது குறித்த இரண்டு இளைஞர்களையும் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இவர்கள் இருவரும் வவுனியா- மன்னார் வீதியில் அமைந்துள்ள மறைவிடம் ஒன்றில் குறித்த 18 வயது யுவதியை முச்சக்கரவண்டியில் பலாத்காரமாக அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளனர் என விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றுள்ளது. குறித்த பெண் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தநிலையில் கைது செய்யப்பட்ட இரண்டு இளைஞர்களும் திங்கட்கிழமை வவுனியா நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது குறித்த இரண்டு பேரையும் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிவான் எம்.பி.முகைதீன் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த இளைஞர்கள் மீது பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டமை மற்றும் யுவதியை நிர்வாணப் புகைப்படம் எடுக்கப்பட்டமை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இருவரும் வவுனியா நெளுக்குளம் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

07) 

இக் குறியீடு வெளிப்படுத்தும் கருத்து யாது?
1) பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை முன்னால்
2) பாதுகாப்பான புகையிரதக் கடவை முன்னால்
3) பாதசாரிகள் கடவை முன்னால்
4) பாதசாரிகள் கடவை




08) மகாவலி கங்கையைக் குறிக்கும் ஆங்கில எழுத்து.
1) A 2) B 3) C 4) D

09) களனி கங்கை கடலில் கலக்குமிடம் குறிக்கும் ஆங்கில எழுத்து
1) A 2) B 3) C 4) D


10) தெறியோட்டை, தடித்த துணிகளை தைப்பதற்கு பயன்படுத்தப்படும் பொருத்தமான தையல் எது?
1) கம்பளித்தையல் 2) சோம்தையல் 3) சங்கிலித்தையல்

11) கடிகாரப் பறவை என அழைக்கப்படுவது.
1) குயில் 2) காகம் 3) சிட்டுக்குருவி 4) மயில்

12) வில்பத்து சரணாலயம் காணப்படும் மாவட்டம்
1) புத்தளம் 2) குருநாகல் 3) அம்பாந்தோட்டை

13) தேசப்படங்களில் மலைகளைக் காட்டுவதற்கு பயன்படுத்தும் நியம நிறம்.
1) பச்சை 2) கபிலம் 3) நீலம் 4) மஞ்சள்

14) நாகணவாய் என அழைக்கப்படும் பறவை எது?
1) புறா 2) மைனா 3) ஆந்தை 4) பருந்து

15) 

அருகில் தரப்பட்ட உருக்கோலத்திற்கு வழங்கும் பெயர் என்ன?
1) சிம்மம் 2) இடையன்
3) சிறுகரடி 4) மிதுனம்

16) 

கண்ணாடி கிளாஸ் ஒன்றை நீரால் நிரப்பி அதன் வாயை காட்போட் அட்டையினால் மூடி பின்னர் காட்போட் அட்டையை கையால் பிடித்துக் கொண்டு கிளாஸை தலைகீழாகப் பிடித்துகையை எடுக்கும் போது காட்போட் அட்டை
1) கீழே விழும் 2) கீழே விழாது
3) உடனே கீழே விழும் 4) மெதுவாக கீழே விழும்


17) தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கச்செல்ல வேண்டிய இடம்
1) ஆட்பதிவு திணைக்களம் 2) கிராமசேவையாளர்
3) குடிவரவு குடியகல்வு திணைக்களம் 4) பிரதேச செயலகம்

18) மீன்கள் நீந்தும் போது, தான் செல்லும் திசையை மாற்றுவதற்கு பயன்படும் செட்டை
1) மார்புச் செட்டை 2) குதச் செட்டை
3) வால் செட்டை 4) இடுப்புச் செட்டை


19) இலங்கையில் ரம்புட்டான் அதிகளவில் உற்பத்தி செய்யப்படும் இடம்
1) கண்டி 2) மல்வானை
3) மாத்தறை 4) யாழ்ப்பாணம்

20) குத்து காலி என அழைக்கப்படுவது.
1) செவ்வுடல் பூங்குயில் 2) மைனா
3) புழுனி 4) கானாங்கோழி

12) கீழே தரப்பட்ட குறியீடுகளுக்கான விளக்கத்தை எழுதுக.



(1)


(2)



(3)


(4)


(5)

1) ..............................................................................
2) ..............................................................................
3) ..............................................................................
4) ..............................................................................
5) ..............................................................................

13) சந்தியொன்றில் பொருத்தப்பட்டுள்ள கிலோமீற்றர் அளவு குறிக்கப்பட்ட காட்சிப் பலகை கீழே தரப்பட்டுள்ளது. இதனை பயன்படுத்தி விடை தருக.




1) கொழும்பில் இருந்து நொச்சியாகமவிற்கு உள்ள தூரம் யாது?

..............................................

2) மஹாவெலவில் இருந்து புத்தளத்திற்கு உள்ள தூரம் யாது?

..............................................

3) பலுகஸ்ஸேகமவில் இருந்து அனுராதபுரத்திற்கு உள்ள தூரம் யாது?

..............................................

14) சரியான விடையை கணித்து எழுதுக.

01) நிசாம் பாடசாலை விட்டதும் மாமியின் வீட்டுக்குச் செல்ல வேண்டும். அவனது வீட்டிலிருந்து பாடசாலை 2km 850m தூரத்தில் உள்ளது. பாடசாலையில் இருந்து மாமியின் வீடு 3km 500m தூரத்தில் உள்ளது. அவன் பயணம் செய்ய வேண்டிய மொத்தத் தூரம் எவ்வளவு?

(........................ km)

15) இடை வெளியில் பொருத்தமான சொல்லை எழுதுக.

தேசிய மரமான (1) .......................... இலங்கைக்கு மட்டுமே உரித்தான மரமாகும். எப்போதும் பசுமையாகக் காணப்படும் மரமாகும். இலைகள் துளிர்க்கும் போது (2) .......................... நிறமாகவும், முதிரும் போது (3) .......................... நிறமாகவும் காணப்படும். இதன் பூக்கள் (4) .......................... நிறமாகவும், (5) .......................... இதழ்களை கொண்டது.

16) அன்று தைப்பொங்கல் தினம், எங்கள் கிராமம் விழாக்கோலம் கொண்டிருந்தது. எங்கள் கிராமத்தில் ஈருருளிப் போட்டி இடம்பெற்றது. அதில் பல வீரர்கள் பங்கு பற்றினர் குறிப்பிட்ட இடத்தில் போட்டி ஆரம்பமாகியது... இக் கட்டுரையை நிறைவு செய்யும் விதத்தில் 6 வசனம் எழுதுக. (ஒவ்வொரு வசனத்திலும் நான்கு சொற்களுக்கு குறையாமலும் எழுவாய் பயனிலை திருத்தமாகவும் இருத்தல் வேண்டும்.)

1) ..............................................................................
2) ..............................................................................
3) ..............................................................................
4) ..............................................................................
5) ..............................................................................
6) ..............................................................................

## மாதிரி வினாத்தாள் - 01இற்குரிய விடைகள்

### பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 01) 1 | 11) 3 | 21) 3 | 31) 1 |
| 02) 2 | 12) 2 | 22) 1 | 32) 2 |
| 03) 1 | 13) 2 | 23) 3 | 33) 3 |
| 04) 3 | 14) 3 | 24) 3 | 34) 2 |
| 05) 3 | 15) 1 | 25) 3 | 35) 35 |
| 06) 2 | 16) 1 | 26) 2 | 36) 474 |
| 07) 2 | 17) 3 | 27) 3 | 37) 9808 |
| 08) 2 | 18) 2 | 28) 2 | 38) கண்டி |
| 09) 2 | 19) 3 | 29) 1 | 39) ஆம்பல் |
| 10) 3 | 20) 2 | 30) 1 | 40) பெருக்கல் (X) |

($40 \times 2^1/_2$ = 100 புள்ளிகள்)

# அணுமின் நிலைய ஆபத்தை ஜப்பான் குறைவாகவே மதிப்பிட்டுள்ளது

## சர்வதேச அணுசக்தி அமைப்பு தெரிவிப்பு

அணுமின் நிலையங்களை சுனாமி தாக்கினால் ஏற்படும் விளைவுகள் குறித்து ஜப்பான் குறைவாகவே மதிப்பிட்டுள்ளது. எதிர்காலத்தில் பாதுகாப்பான அணுமின் உற்பத்திக்கு ஜப்பான் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐ.நா.வின் சர்வதேச அணுசக்தி முகவரகம் (ஐ.ஏ.இ.ஏ) தெரிவித்துள்ளது.

ஜப்பானில் கடந்த மார்ச் 11 ஆம் திகதி நிகழ்ந்த நிலநடுக்கம் மற்றும் சுனாமியில் புகுஷிமா டாய்இச்சி அணுமின் நிலையம் பெரிதும் பாதிக்கப்பட்டது. அங்கிருந்த 4 அணு உலைகளும் ஒன்றன்பின் ஒன்றாக வெடித்தன. இன்றுவரை அவற்றில் இருந்து கதிர்வீச்சு வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. அணு உலைகளைப் பார்வையிட்டு போதிய ஆலோசனைகளை வழங்கும்படி ஐ.ஏ.இ.ஏ.வுக்கு ஜப்பான் கோரிக்கை விடுத்திருந்தது.

இதையடுத்து சமீபத்தில் ஐ.ஏ.இ.ஏ.குழு ஒன்று புகுஷிமா டாய் இச்சி அணுமின் நிலையத்தை நேரில் பார்வையிட்டு ஒருவார காலம் ஆய்வு செய்தது. பிரிட்டனைச்சேர்ந்த அணுசக்திப் பாதுகாப்பு நிபுணர் மிக்கேல் வெய்ட்மேன் தலைமையில் பிரான்ஸ்,ரஷ்யா,சீனா மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த அணுசக்தி நிபுணர்கள் அடங்கிய அந்தக் குழு தன் அறிக்கையின் சுருக்கத்தை மூன்று பக்க அளவில் நேற்று முன்தினம் ஜப்பான் பிரதமர் நவோட்டோகானிடம்அளித்தது.அதில்கூறப்பட்டுள்ளதாவது,

புகுஷிமா அணுமின் நிலையம் கடற்கரையில் உள்ளது. கடலை ஒட்டி கட்டப்பட்ட சுனாமி தடுப்புச் சுவரின் உயரம் 5.7 மீ(19 அடி) .சுனாமியின் போது வந்த அலைகளின் உயரம் 14 மீ (46அடி).தடுப்புச் சுவரின் உயரத்தை விட இரண்டரை மடங்கு உயரத்தில் சுனாமி அலைகள் தாக்கியுள்ளன.இதிலிருந்து அணுமின் நிலையத்தை சுனாமி தாக்கினால் ஏற்படும் விளைவுகள் குறித்து ஜப்பான் அரசு குறைவாகவே மதிப்பிட்டுள்ளது தெரிகிறது.

ஜப்பான் அணுமின் நிலையங்களின் பாதுகாப்பை தற்போது கவனித்து வரும் ஜப்பான் அணுசக்தி ஏஜென்சி தொழிற்றுறை அமைச்சகத்தின் ஓர் அங்கமாகவே செயற்படுகிறது. அதைத் தனி அமைப்பாக்கி அணுமின் நிலையங்களின் பாதுகாப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கச் செய்ய வேண்டும்.

இதுபோன்ற பேரிடர் நேரங்களில் கட்டளைகள் பிறப்பிக்க தனி அதிகார மையங்கள் தேவை. உலக நாடுகளில் நிலநடுக்க பாதிப்புள்ள இடங்களில் அணுமின் நிலையங்களை வடிவமைக்கும் நிபுணர்கள் அவற்றை இயக்கும் நிறுவனங்கள் அனைத்து இயற்கைப்பேரிடர்களையும் அந்த மின் நிலையங்கள் தாங்கும் வகையில் போதுமான பாதுகாப்பு அம்சங்களுடன் உருவாக்க வேண்டும். புகுஷிமா நிலையத்தைச் சுற்றியுள்ள பகுதியில் கதிர்வீச்சை அகற்றுவதற்கு போதிய நடவடிக்கைகள் நீண்டகால அடிப்படையில் எடுக்கவேண்டும். அத்துடன் சுற்றுப்புறங்களில் வசிப்போர் மற்றும் அணுமின் நிலைய பணியாளர்களின் உடல்நலம் தொடர்ந்து பேணிக் காக்கப்படவேண்டும். இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஜப்பான் அரசு ஒப்புதல்**

இந்த அறிக்கையை பிரதமர் நவோட்டோ கான் ஏற்றுக் கொண்டுள்ளார். அவரது சிறப்பு ஆலோசகர் கோஷி ஹொாசோனோ இதுபற்றி கூறுகையில்,ஜப்பான் அணுசக்தி ஏஜென்சியை தனி அமைப்பாக்குவது குறித்த அரசின் அறிவிப்பு அடுத்தவாரம் வெளியாகும் என்றார். ஜப்பானில் உள்ள 54 அணுமின் நிலையங்களில் தற்போது மட்டுமே இயங்குகின்றன. மற்றவை பாதுகாப்பு கருதி பராமரிப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளன. ஐ.ஏ.இ.ஏ.யின் முழு அறிக்கையும் இம்மாத இறுதியில் ஆஸ்திரிய தலைநகர் வியன்னாவில் இடம்பெறவுள்ள மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும்.(ஸ்ரீ-2)



ஐ.நா. வின் சர்வதேச அணுசக்தி பாதுகாப்பு நிபுணர் மிக்கேல் வெய்ட்மேன் (வலது) புகுஷிமா டாய் இச்சி அணுமின் நிலையம் பற்றிய சுருக்க அறிக்கையை பிரதமர் நவோட்டோ கானின் சிறப்பு ஆலோசகர் கோஷி ஹொாசோனோவிடம் (இடது) கையளிப்பதைப்படத்தில் காணலாம்.

# அணுமின் நிலையங்களை அதிகரிக்கிறது சீனா

அணுமின் நிலையங்களை அதிகரிக்கும் சீனாவின் அதிவேக போக்கு ஆபத்தில் தான் முடியும் என அந்நாட்டைச் சேர்ந்த இயற்பியல் பேராசிரியர் ஹீ ஷுவோஷியூ கவலை தெரிவித்துள்ளார்.

அவரது இந்த அறிக்கை சீன அணுசக்தி வட்டாரத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஜப்பான் புகுஷிமா டாய்இச்சி அணுமின் நிலையத்தை சுனாமி தாக்கிய பின் அங்கு ஏற்பட்ட கதிர்வீச்சு அபாயத்திற்குப் பின் உலகளவில் அணுமின் நிலையங்களை புதிதாக அமைக்கும் திட்டங்களை பல நாடுகள் கைவிட்டுள்ளன. எதிர்வரும் 2022 இற்குள் தங்கள் நாட்டிலுள்ள அனைத்து அணுமின் நிலையங்களையும் மூடிவிடப்போவதாக ஜேர்மனி அறிவித்துள்ளது.

இந்நிலையில் தங்கள் நாட்டிலுள்ள 13 அணுமின் நிலையங்களை எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுக்குள் 50 அணுமின் நிலையங்களாக அதிகரிக்கவும் இந்தத் திட்டத்தை 540 இலட்சம் கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றவும் சீனா திட்டமிட்டுள்ளது.

அதற்கான பணிகளையும் முடுக்கி விட்டுள்ளது. தற்போது அணுமின் நிலையங்கள் மூலம் 9ஜிகா வோட் மின்சாரத்தை சீனா பெறுகிறது. தற்போதுள்ள 13 அணுமின் நிலையங்கள் 50ஆக அதிகரிக்கும்போது 70 ஜிகா வோட் மின்சாரம் உற்பத்தியாகும். இது மட்டுமின்றி 2030 இற்குள் அணுமின் நிலையங்களின் உற்பத்தியை 250 ஜிகா வோட்டாக அதிகரிக்கவும் சீனா திட்டமிட்டுள்ளது.

## நிபுணர்கள் எதிர்ப்பு

உலகளவில் உள்ள அணுமின் நிலையங்களின் பாதுகாப்பு குறித்து ஐ.நா.வின் சர்வதேச அணுசக்தி முகவரகம் கவலை தெரிவித்துள்ள நிலையில் சீனா மட்டும் பாதுகாப்பு ஏற்பாடுகளை சரியாகத் திட்டமிடாமல் அணுமின் நிலையக் கட்டுமானங்களை துரித வேகத்தில் செய்து வருவதாக அந்நாட்டின் புகழ்பெற்ற இயற்பியல் பேராசிரியர் ஹீ ஷுவோஷியூ கவலை தெரிவித்துள்ளார்.

**சவுதி புதிய திட்டம்**

புதிய அணுமின் நிலையங்கள் அமைப்பதில் உலக நாடுகள் பின்வாங்கும் நேரத்தில் சவுதி அரேபிய அரசும் 45 இலட்சம் கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 16 அணுமின் நிலையங்களை புதிதாக அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இந்த நிலையங்கள் அனைத்தும் எதிர்வரும் 2030ஆம் ஆண்டுக்குள் கட்டி முடிக்கப்படும்.ஒரு உலைக் கட்டுமானத்துக்கு 31 ஆயிரத்து 500கோடி ரூபாய் செலவாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# ஊடகவியலாளரை நாங்கள் கொலை செய்யவில்லை

## பாகிஸ்தான் உளவுத்துறை மறுப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானைச் சேர்ந்த ஊடகவியலாளர் சலீம் சகாஷத் (வயது 40) என்பவர் திடீரென மாயமானார்.

பின்னர் அவர் கொலை செய் யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. அவரை பாகிஸ்தான் உளவுத்துறை அதிகாரிகள் அழை த்து சென்றதாகவும் பின்னர் அவர் கொலை செய்யப்பட்டு கிடந்ததாகவும் தகவல்கள் வெளியாகின.

இது தொடர்பாக பாகிஸ்தான் உளவுத் துறை அதிகாரிகள் அளித்துள்ள பேட்டியில், சலீம்சகாஷ் கொல்லப்பட்டமைக்கும் எங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை. தேவையில்லாமல் இதை முடிச்சு போடுகிறார்கள்.

அவரை நாங்கள் அழைத்து செல்லவும் இல்லை. அடிப்படை ஆதாரமற்ற தகவல்களை பரப்புகின்றனர் என்று கூறினார்.

(ஸ்ரீ-2)




# நேட்டோ படையின் தாக்குதலில் லிபியாவில் 718 பேர் பலி

லிபியாவில் இதுவரை நேட்டோ படையினர் நடத்திய தாக்குதலில் 718 பேர் பலியானதாக அந்நாட்டு அரசு குற்றம் சாட்டியுள்ளது.லிபியாவில் கடந்த மார்ச் முதல் நேட்டோ விமானப் படைகள் கடாபி இராணுவ மையங்கள், வாகனங்கள் மீது குண்டுகளை வீசித் தாக்கி வருகின்றன.

லிபிய அரசு செய்தித் தொடர்பாளர் மூசா இப்ராஹிம் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில், கடந்த மார்ச் 19 முதல் மே 26 ஆம் திகதி வரையிலான 10 வார காலகட்டத்தில் நேட்டோ தாக்குதலில் 718 பேர் பலியாகியுள்ளனர். 4 ஆயிரத்து 67 பேர் காயம் அடைந்துள்ளனர். அவர்களில் 433 பேர் நிலைமை மோசமாக உள்ளது என்றார்.

மேலும் கடாபி நாட்டை விட்டு வெளியேற நேர்ந்தால் நாட்டுக்கு அதை விட மோசமான நிலை வேறு எதுவும் இருக்காது என்றும் கூறினார். இதற்கிடையில் நேட்டோ பொதுச் செயலர் ஆண்டர்ஸ் ராஸ்முசேன் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில், நேட்டோவின் லிபியா மீதான இராணுவ நடவடிக்கை எதிர்வரும் செப்டம்பர் வரை நீடிக்கப்பட்டுள்ளது என்றார். (ஸ்ரீ-2)

# ஏமனில் இடம்பெற்ற மோதலில் 41 பேர் பலி

(சனா)

ஏமன் தலைநகர் சனாவில் நேற்று முன்தினம் அதிகாலை முதல் ஜனாதிபதி ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்றது. இதில் 41 பேர் பலியாகினர். பலர் படுகாயம் அடைந்தனர். எதிர்ப்பாளர்களான பழங்குடியினர் அலுவலகம், ஆளும் கட்சித் தலைமையகம் உள்ளிட்ட பல்வேறு அரசுக் கட்டடங்களைக் கைப்பற்றினர்.

எதிர்க்கட்சித் தலைவரான ஷேக் சாதிக் அல் அமரின் வீட்டின் மீது நேற்று முன்தினம் இராணுவம் தாக்குதல் நடத்தியது. ஜனாதிபதி மாளிகை வட்டாரத்தைப் பாதுகாக்கும் படைகள் நேற்று முன்தினம் இராணுவத்தின் ஒரு பிரிவின் அலுவலகம் மீது தாக்குதல் நடத்தியது. இராணுவத்தில் இருந்து பிரிந்து எதிர்பாளர்களுடன் சேர்ந்த இராணுவப் பிரிவின் அலுவலகம் என்பதால் இத்தாக்குதல் நடத்தப்பட்டது. (ஸ்ரீ-2)

# பதவி விலகுமாறு ஜப்பான் பிரதமருக்கு கடும் நெருக்கடி

பதவி விலகுமாறு ஜப்பான் பிரதமர் நவோட்டோ கானுக்கு நெருக்கடிகள் அதிகரித்துள்ளன. எனினும் நிலநடுக்கம் மற்றும் சுனாமி பேரிடரில் இருந்து நாட்டை மீட்க எடுத்துவரும் முயற்சிகள் உறுதியான நிலைப்பாட்டை அடைந்தால் மட்டுமே பதவிவிலகுவது குறித்து பரிசீலிப்பேன் என அவர் கூறினார்.

மீட்புப் பணிகளை தொடர்ந்து நிறைவேற்ற தனக்கு பொறுப்பு இருப்பதாகக் கருதுகிறேன் என அவர் தனது கட்சி உறுப்பினர்களிடம் தெரிவித்தார்.நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லா வாக்கெடுப்பு எடுத்துக் கொள்ள இருப்பதையொட்டி அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நவோட்டோ கான் ஒரு வருடத்துக்கு முன்பு தான் பிரதமராகப் பதவியேற்றார். அணு உலைகள் அமைந்துள்ள இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்கு தற்காலிக குடியிருப்புக்கள் கட்டுவதில் தாமதம், அப்புறப்படுத்தும் தகவல் தொடர்பாக வெளிப்படைத் தன்மை இல்லாதது உள்ளிட்ட நிர்வாகத் திறமையின்மை காரணமாக நவோட்டோ கான் பிரதமர் பதவியில் இருந்து விலகுமாறு நெருக்கடிகள் எழுந்துள்ளன.

ஜப்பானின் பெரும் எதிர்க்கட்சியான லிபரல் ஜனநாயகக் கட்சி 2 சிறிய எதிர்க்கட்சிகளுடன் இணைந்து நம்பிக்கையில்லாத் தீர்மான நோட்டீஸ் அளித்துள்ளது. (ஸ்ரீ-2)

# மத்திய அமைச்சர் தயாநிதிமாறன் மீது விரைவில் குற்றப் பத்திரிகை தாக்கல்

(புதுடில்லி)

ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் புதிதாக குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருக்கும் மத்திய ஜவுளித்துறை அமைச்சர் தயாநிதிமாறன் மீது சி.பி.ஜ. விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தயாநிதிமாறன் மீது சி.பி.ஜ விசாரணை கோரி மேல் நீதிமன்றில் பொது நல மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதை பிரபல சட்டத்தரணி பிரசாந்த் பூஷன் தாக்கல் செய்துள்ளார்.

காங்கிரஸ் தலைமையிலான ஐ.மு. கூட்டணி அரசியல் கடந்த 2004-2007 ஆம் ஆண்டு மத்திய தொலைத்தொடர்புத் துறை அமைச்சராக தயாநிதி மாறன் இருந்தார். அந்த காலத்தில் நடந்த ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டின் போது முறைகேட்டில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது.

தயாநிதிமாறன் தொலைத்தொடர்புத் துறை அமைச்சராக இருந்த போது ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு வழங்கப்பட்டது. அப்போது ஏர்செல் கம்பனிக்கு ஸ்பெக்ட்ரம் வழங்குவதில் தயாநிதிமாறன் காலதாமதம் ஏற்படத்தினார். ஆனால், ஏர்செல் கம்பனி மலேசியாவைச் சேர்ந்த மேக்சிஸ் கம்பெனிக்கு கைமாறிய போது ஸ்பெக்ட்ரம் உடனடியாக வழங்கப்பட்டது. இதற்கு சன்மானமாக மேக்சிஸ் தனது சக கம்பனிகள் மூலம் சன் டைரக்ட் கம்பனியில் 599.01 கோடி ரூபாய் முதலீடு செய்ததாக புகார் தெரிவிக்கப்பட்டது. இது குறித்து டெகல்கா ஆங்கில வார இதழ் வெளியிட்ட செய்தியால் பரபரப்பு ஏற்பட்டது. இந்தப் புகார் வெளிவந்ததும் தயாநிதிமாறன் இதை மறுத்தார். இது தொடர்பாக மான நஷ்ட வழக்கு தொடர வக்கீல் நோட்டீஸ் அனுப்பப் போவதாகவும் தெரிவித்தார்.

தனியார் தொலைத்தொடர்பு நிறுவனத்தை நடத்திவந்த சிவா குழும தலைவர் சி.சிவசங்கரன் கடந்த மாதம் மத்தியில் சி.பி.ஐ. க்கு அளித்த புகாரில் தான் நடத்தி வந்த தொலைத்தொடர்பு நிறுவனத்தின் பங்குகளை விற்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டதற்கு தயாநிதிமாறன் தான் காரணம் என குறிப்பிட்டு இருந்ததாக கூறப்படுகிறது.

தனது நிறுவனத்திற்கு ஒதுக்கீடு வழங்க தாமதம் செய்து வந்த தயாநிதிமாறன் வெளிநாட்டு கம்பனிக்கு விற்றதும் அந்த நிறுவனத்திற்கு ஒதுக்கீடு அளித்தார் என குற்றம்சாட்டியுள்ளார்.

சிவசங்கரனின் புகார் குறித்து முழுமையான வாக்குமூலத்தை பெற அடுத்த வாரம் அவரிடம் சி.பி.ஐ. நேரடியாக விசாரிக்க இருக்கிறது. அதன் அடிப்படையில் தயாநிதி மாறன் மீது வழக்கு பதிவு செய்து விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யும் என தெரிகிறது.

இந்நிலையில் தயாநிதிமாறன் மீதான குற்றச்சாட்டு குறித்து சி.பி.ஐ. விசாரிக்கக் கோரி பொதுநல மனு ஒன்று மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதை பிரபல சட்டத்தரணியும் லோக்பால் வரைவு மசோதா கமிட்டியில் இடம்பெற்றுள்ளவருமான பிரசாந்த் பூஷன் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில் அவர் கூறியிருப்பதாவது, மலேசியாவைச் சேர்ந்த மேக்சிஸ் கம்பனிக்கு சாதகமாக தயாநிதிமாறன் செயற்பட்டுள்ளார் என்பதற்கு போதுமான ஆதார ஆவணங்கள் உள்ளன.

இந்நிலையில் இந்த குற்றச்சாட்டுக்களை மறுத்த மத்திய அமைச்சர் தயாநிதிமாறன் இந்த குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் தவறானவை, உண்மையல்ல என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருக்கும் தயாநிதிமாறன் உடனே மத்திய அமைச்சர் பதவியில் இருந்து விலகி தன் மீதான ஊழல் புகாரை சட்ட ரீதியாக எதிர்கொள்ள வேண்டும் என்று முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# 2ஜி விவகாரம்; தயாநிதி மாறனுக்கு தி.மு.க.ஆதரவு

(சென்னை)

2ஜி ஊழல் வழக்கில் மத்திய ஜவுளித்துறை அமைச்சர் தயாநிதிமாறன் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையில் அவருக்கு தி.மு.க. ஆதரவு தெரிவித்துள்ளது.

மத்திய அமைச்சர் பதவியில் இருந்து தயாநிதி மாறன் இராஜினாமா செய்ய வேண்டும் என்று முதல்வர் ஜெயலலிதா கூறியிருப்பதற்கு அக்கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

முதல்வராக ஜெயலலிதா நீதிமன்றத்தில் வழக்கை சந்திக்கும் போது அவர் அந்த பதவியில் இருந்து இராஜினாமா செய்யவில்லை.

தயாநிதிமாறன் மட்டும் ஏன் இராஜினாமா செய்ய வேண்டும்? மக்கள் இதைப் புரிந்து கொள்ள வேண்டும் என தி.மு.க. வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

# பாரதச் செய்திகள்

## தயாநிதிமாறனை பதவி விலகுமாறு

# பா.ஜ.க., கம்யூனிஸ்ட் கட்சிகள் கோரிக்கை

(புதுடில்லி)

2ஜி ஸ்பெக்ரம் ஒதுக்கீட்டின் மூலம் மத்திய அமைச்சர் தயாநிதிமாறன் குடும்பத்திற்கு சொந்தமன சன் குழுமம் பயன் அடைந்துள்ளமை தெரியவந்துள்ளதையடுத்து அவர் மீது சி.பி.ஐ.இல் புகார் செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து பா.ஜ..பொதுச் செயலாளர் ஜகத் பிரகாஷ் கூறுகையில்,

தயாநிதி உடனடியாக அமைச்சர் பதவிலிருந்து விலக வேண்டும். விலகாவிட்டால் பிரதமர் தலையிட்டு அவரை அமைச்சர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்றார்.

இது குறித்து மார்க்சிஸ்ட் பொதுச் செயலாளர் பிரகாஷ் கராத் கூறுகையில்,

தயாநிதி மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து தீவிரமாக விசாரிக்க வேண்டும் என்றார்.

மார்க்சிஸ்ட் பொலிட் பீரோ உறுப்பினர் யெச்சூரி கூறுகையில்,

தயாநிதிமாறன் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து கடந்த 2008 பெப்ரவரியில் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டுசென்றேன். இது குறித்து நான் பிரதமருக்கு எழுதிய கடிதத்தை பாராளுமன்ற கூட்டுக் குழுவுக்கு அனுப்பி விசாரிக்கும்படிகூற உள்ளேன். தயாநிதி உடனடியாக அமைச்சர் பதவியிலிருந்துவிலக வேண்டுமெனகுறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ)

# சாய்பாபாவின் யஜுர் மந்திர் தொடர்பாக நீடிக்கும் இரகசியம்

(ஐதராபாத்)

ஆன்மீக குரு சத்ய சாய்பாபா மறைந்து ஒரு மாதத்துக்கு மேல் ஆகியும் ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில் பிரசாந்தி நிலையத்தில் உள்ள அவரது தனி அறையான யஜுர் மந்திர் தொடர்பான மர்மம் தொடர்ந்து நீடிக்கிறது.

சாய்பாபா கடந்த மார்ச் 28 இல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதில் இருந்து யஜுர் மந்திர் தொடர்ந்து மூடப்பட்டிருந்தது. அதன் சாவிகள் பிரசாந்தி நிலையப் பொறுப்பாளர் சத்யஜித்திடம் இருந்தது. சாய்பாபா கடந்த ஏப்ரல் 24 இல் மறைந்தவுடன் அந்த சாவிகளை அவர் சத்யசாய் அறக்கட்டளையின் செயலர் சக்ரவர்த்தியிடம் ஒப்படைத்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

அப்போது முதல் யஜுர் மந்திருக்கு எப்போதும் இல்லாத பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது. இது பல்வேறு யூகங்களை எழுப்பியுள்ளது. சாய்பாபாவின் அறையில் பக்தர்கள் நன்கொடையாக வழங்கிய தங்க நகைகளும் கணக்கிலடங்கா ரொக்கப் பணமும் உள்ளதாக யூகங்கள் எழுந்துள்ளன.

பாபாவின் நினைவிடம் கட்டுவதற்காக பிரசாந்தி நிலையத்தை 6 வாரங்கள் மூடுவதாக அறக்கட்டளை உறுப்பினர்கள் முன்னதாக அறிவித்திருந்தனர். அவர்கள் மீண்டும் மந்திரை திறப்பது குறித்தும் திறக்கும் போது பொதுமக்களையும் ஊடகங்களையும் அங்கு அனுமதிப்பது குறித்தும் நேற்று முன்தினம் கூடி விவாதித்தனர்.

எனினும் அறக்கட்டளையின் அனைத்து உறுப்பினர்களும் ஆஜராகாததால் மந்திரை திறப்பது குறித்து இதுவரை முடிவு எதுவும் அந்தக் கூட்டத்தில் எடுக்கப்படவில்லை எனத் தகவல்கள் தெரிவித்தன. எனினும் உள்ளூர் தலைவர்கள் யஜுர் மந்திரைத் திறக்குமாறு அறக்கட்டளையை வலியுறுத்தி வருகின்றனர்.

யஜுர் மந்திரின் உள்ளே என்ன இருக்கிறது என்பது யாருக்கும் தெரியாது. அதன் உள்ளே விலைமதிப்பில்லாத பொருட்களும் சாய்பாபாவுக்கு சொந்தமான ஆன்மீகப் பொருட்களும் இருக்கலாம். அவர்கள் இரகசியத்தை தொடர்ந்து காப்பாற்ற முடியாது. சாய்பாபாவின் அறையை முக்கியப் பிரமுகர்கள் மற்றும் ஊடகங்களின் முன்னிலையில் திறக்க வேண்டும் என முன்னாள் அமைச்சர் நாகி ரெட்டி கோரிக்கை விடுத்தார். (ஸ்ரீ-2)

# ஊழலுக்கு எதிராக ராம்தேவ் சாகும் வரை உண்ணாவிரதம்

## அன்னா ஹசாரேயும் இணைவு


(புதுடில்லி)

ஊழல் கறுப்பு பணத்துக்கு எதிராக யோகா குரு ராம்தேவுடன் சேர்ந்து உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அன்னா ஹசாரே அறிவித்துள்ளார்.

ஊழல் புகாரில் சிக்கும் உயர் அதிகாரிகள் அரசியல்வாதிகளை தண்டிக்க வகை செய்யும் லோக்பால் மசோதாவை விரைவில் நிறைவேற்ற வலியுறுத்தியும் அதனை வரையறுக்கும் குழுவில் பொதுமக்கள் பிரதிநிதிகள் இடம் பெற வேண்டும் என்பதை வலியுறுத்தியும் சமூக சேவகர் அன்னா ஹசாரே கடந்த மாதம் 5 ஆம் திகதி டில்லியில் காலவரையற்ற உண்ணாவிரதம் இருந்தார். இந்த போராட்டம் நாடு முழுவதும் ஆதரவு அலைகளை ஏற்படுத்தியதால் அவர் உட்பட 5 சமூக சேவகர்கள், அமைச்சர்கள் அடங்கிய லோக்பால் கூட்டுக்குழுவை மத்திய அரசு அமைத்தது. இக்குழுவினர் லோக்பால் மசோதாவின் அதிகார வரம்புகள் குறித்து ஆலோசித்து வருகின்றனர்.

இந்நிலையில் கறுப்பு பணத்தை தேசிய சொத்தாக அறிவிக்க வேண்டும். ஊழலை கட்டுப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி ஜுன் 4 ஆம்திகதி டில்லியில் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக யோகர் குரு ராம்தேவ் அறிவித்தார்.

அவர் உண்ணாவிரத திட்டத்தை கைவிட மத்திய அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்தது. ஆனால் அதை ஏற்க ராம்தேவ் மறுத்து விட்டார். அவரிடம் மீண்டும் அமைச்சர்கள் பேச்சுவார்த்தை நடத்துகின்றார்கள். இதற்கிடையே ராம்தேவ் முடிவுக்கு ஆதரவு தெரிவித்துள்ள அன்னா ஹசாரே தானும் அவருடன் சேர்ந்து உண்ணாவிரதம் இருக்கப் போவதாக தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)



மும்பையைச் சேர்ந்த அயூப்கான் என்பவர் தன் சொந்த முயற்சியாக 27 ஆயிரம் ரூபாய் செலவழித்து உருவாக்கிய சூரிய சக்தியால் (சோலர் பவர்) இயங்கும் ஸ்கூட்டரை வீதியில் ஓட்டிக் காட்டி பலரையும் வியக்க வைத்தார். ஒருமுறை சார்ஜ் ஆகிவிட்டால் 60 கிலோ மீற்றர் தூரத்திற்கு செல்லும் இந்த வாகத்திற்கு வரவேற்பு நிச்சயம் நிறையவே இருக்கும்.

முதலில் தூசியைக் கிளப்பி விடுகிறோம். பின்னால் பார்க்க முடியவில்லை என்று முறையிடுகிறோம்.
-பிஷப் பார்க்லி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பொருத்தமான நடவடிக்கை எடுப்பது யார்?

டெங்கு காய்ச்சலின் பரம்பல் மீண்டும் தலை தூக்கியுள்ளது. வருடம் முழுவதும் நுளம்புத் தொல்லையிலிருந்து விடுபட முடியாத நிலைக்கு ஆளாகியுள்ள வடபகுதி மக்கள் டெங்கு மற்றும் மலேரியா தாக்கங்களிலிருந்து விடுபடுவது என்பது சாதாரண விடயமன்று.

டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டதும் குய்யோ முறையோ என்று கூப்பாடு போடுவதும் பின்னர் அதன் தாக்கத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததும் அதனை மறந்துவிடுவதுமான பழக்கம் எங்களிடமுண்டு.

நுளம்பு பரவும் இடங்களை இல்லாது ஒழித்தல், குப்பை கூழங்களை அழித்தல் இதில் மாணவர்களை சிரமதானப்பணியில் ஈடுபடுத்தல் எனப் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் அதன் தொடர் தன்மை இடையறுவதனால் மீண்டும் நிலைமை மோசமாகுவதை அவதானிக்க முடிகின்றது.

இவை யாவற்றுக்கும் மேலாக பொதுமக்கள் சிலரின் பொறுப்பற்ற தன்மை காரணமாக நுளம்பு பெருக்கம் உட்பட தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தவே முடியாதெனும் அளவுக்கு நிலைமையுள்ளது.

குறிப்பாக வெற்றுக் காணிகளில் காணப்படும் பற்றைகள் அந்த ஊரின் சுகாதாரத்தையே சீரழித்து விடுகின்றன.

ஆதனங்கள் ஒவ்வொன்றுக்கும் உரிமையாளர்கள் இருக்கும் போது அவர்கள் தமக்குச் சொந்தமான காணியிலுள்ள பற்றைகளை வெட்டி தூய்மைப்படுத்தவும் அங்குள்ள குன்று குழிகளை செப்பனிடவும் அவர்களால் முடியவில்லை எனில், அதற்கான நடவடிக்கை என்ன என்பதை உள்ளூராட்சி சபைகள், பிரதேச செயலகங்கள், சுகாதார திணைக்களங்கள் இன்னமும் தீர்மானிக்கவில்லை.

ஒரு புறத்தில் மாணவர்கள் வெள்ளைச் சீருடை அணிந்துகொண்டு கல்விகற்கின்ற நேரங்களில் பற்றைகளை வெட்டுவதிலும். புல், பூண்டுகளை அழிப்பதிலும் ஈடுபடும்போது,

குறிப்பிட்ட காணிச் சொந்தக்காரர்கள் எந்தவித பொறுப்புமற்றவர்களாக தமது காணிகளை காடுகளாக வைத்திருக்கின்றனர்.

இத்தகைய பொறுப்பற்றவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்காதவரை டெங்கு முதல் கொண்டு தொற்று நோய் எதனையும் கட்டுப்படுத்த முடியாதென்பதே நிஜம். டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்குத் திட்டம் தயாரிப்பவர்கள் வெற்றுக் காணிகளிலுள்ள பற்றைகள் மற்றும் அங்கு கைவிடப்பட்ட கிணறுகள், மலகூட குழிகள் என்பன தொடர்பில் சட்டரீதியானநடவடிக்கைகள் எடுக்கமுன் வரவேண்டும்.

இத்தகைய நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நீதிமன்றில் சட்டநடவடிக்கை எடுப்பதாகவோ அல்லது உரிய காணிகளை சுவீகரித்து நிலமற்ற நம்மவர்களுக்கு அதனை வழங்குவதாகவோ இருக்கலாம்.

இதைவிடுத்து தொடர்ந்தும் மாணவர்களைக் கொண்டு சதா சிரமதானம் செய்விப்பது அவ்வளவு ஆரோக்கியமானதல்ல.

எனவே டெங்கு ஒழிப்பின் முதற்கட்டமாக அந்தந்த உள்ளூராட்சி சபைகள் தமது எல்லைக்குள் உள்ள துப்புரவு செய்யப்படாத காணிகளின் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல் கடிதங்களை அனுப்ப வேண்டும். இரண்டாம் கட்டமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதனைச் செய்யும்போது எங்கள் பிரதேசத் தின் தூய்மை உன்னதமாக அமைவதுடன் தொற்று நோய்களின் பரம்பலும் கட்டுப்படுத்தப்படும் என்பது சர்வநிச்சயம்.

# ஊடகவியலாளர்களுக்கு ஆபத்தான நாடாக இலங்கை

## ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் அமைப்பு தெரிவிப்பு

ஊடகவியலாளர்களுக்கு மிகவும் ஆபத்தான நாடுகளில் ஒன்றாக இலங்கை உள்ளதாக ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த பத்து வருடகாலத்தில் 13 நாடுகளில் 251க்கும் அதிகமான ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் அவர்களின் மரணம் குறித்தும் எவரையும் நீதியின் முன்நிறுத்தப்படவில்லையெனவும் நியூயோர்க்கை தளமாகக் கொண்ட அந்த அமைப்பு கூறியுள்ளது.

நாடுகளின் சனத்தொகையுடன் ஒப்பிடும் போது கொல்லப்பட்ட ஊடக வியலாளர்களின் சதவீதம் அதிகமாகவுள்ள நாடுகளின் வரிசையில் இலங்கை நான்காவது இடத்தில் உள்ளது.

பட்டியலில் முதலிடத்திலுள்ள ஈராக்கில் 92 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். இலங்கையில் 9 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

பிரச்சினைக்குரியவிடயங்கள்குறித்து ஏனையவர்கள் செய்தி வெளியிடுவதைத் தடுக்கும் நோக்குடன் ஊடகவியலாளர்கள் கொல்லப்படுவதாக ஊடக வியலாளர்களைப் பாதுகாப்பதற்கான அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ஜோல் சைமன் தெரிவித்துள்ளார்.

சுய தணிக்கைக்கு அது காரணமாக அமைவதாகவும் அவர்கூறினார்.

சண்டே லீடர் ஏட்டின்ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலையாளிகளை இலங்கை அரசு இது வரை கைது செய்யவில்லையெனக் குற்றம் சாட்டும் வீடியோ அறிக்கை ஒன்றையும் ஊடக வியலாளர்களைப் பாதுகாப்பதற்கான அமைப்பு வெளியிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் அருள்மிகு ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோவில் தேர்த்திருவிழா நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். (ஸ்ரீ-2)

## உயிர்பல்வகைமை கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A ஆனது **Alliance Francaise de Jaffna** என்ற அமைப்புடன் இணைந்து க.பொ. த (உயர்தர)வகுப்பு மாணவர்களிற்கு 'உயிர்ப்பல்வகைமை' கண்காட்சி ஒன்றை நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 5.00 மணி வரையாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடத்தப்படவுள்ளது. (ஸ்ரீ)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### கர்ப்பூர ஆரத்தியின் தத்துவம்

இறைவனுக்கு முன்பு கர்ப்பூர ஆரத்தி எடுக்கப்படுகிறதே, அது ஏன் தெரியுமா? ஆத்மா பரமாத்மாவோடு கலகலப்பதைக் குறிக்கிறது. கர்ப்பூரம் வெண் மையானது. அது சுத்த சத்துவ குணமுள்ள ஆத்மாவைக் குறிக்கும். கர்ப் பூரத்தை ஏற்றியவுடன் தீபம் போல் எரியும். ஞானாக்கினியால் மும்மலங்கள் நீங்கப் பெற்ற ஆன்மாவானது சிவகரணம் பெற்று நிற்பதைக் காட்டும். கர்ப்பூரம் ஒன்றுமில்லாமல் கரைந்து போவதுபோல் ஆன்மாவானது சரீரங்களெல்லாம் நீங்க இறைவனோடு ஒன்றுபடும். இதைக் காட்டுவதே கர்ப்பூர தீபாரா தனையின் தத்துவமாகும்.

## இலவச மூக்குக்கண்ணாடி விநியோகம்

(அக்கராஜன்)

வவுனியா வைத்தியசாலையினால் கிளிநொச்சி அக்கராயன் பற்றைச் சேர்ந்த 150 இற்கு மேற்பட்ட மக்களுக்கு அக்கராயன் வைத்தியசாலையில் வைத்து கண்பரிசோதனை செய்யப்பட்டு நேற்றுக் காலை இலவசமாக மூக்குக்கண்ணாடி வழங்கப்பட்டது. (ஸ்ரீ)

## வெள்ளி நற்சிந்தனை

### செவ்வியல் தமிழில் சீர்மியம்

௨௨

நாம் வாழ்க்கையில் அனுபவிக்கும் இன்ப துன்பங்களுக்கெல்லாம் நாம் செய்யும் வினையே காரணம் என்று கருதப்படுகிறது. வினை என்பது மும்மலங்களில் ஒன்றான கன்ம மலம் எனப்படுகிறது. இவ்வினையை மூன்றாக விளக்கியுள்ளனர்.

பிராரத்தம், ஆகாமியம், சஞ்சிதம் என அவை வழங்கப்படுகின்றன. பிராரத்தம் என்பது நாம் எடுத்த பிறவியல் அனுபவிக்கும் வினை. ஆகாமியம் என்பது நாம் எடுத்த பிறவியில் ஈட்டு வினையாகும். சஞ்சிதம் என்பது எமது முற்பிறவிகளில் ஈட்டிய வினையில் எஞ்சிய அனுபவிக்கப்படாத வினை. எனவே வினையே எமது பிறவிக்கு ஏதுவாக உள்ளது.

இத்தகைய வினையிலே கட்டுப்பட்டுக்கிடக்கும் எம்மை இறைவழிபாடே காப்பாற்றும். துன்பங்களிலிருந்து எம்மை விடுவிக்க இறை நம்பிக்கையே துணை செய்யும். வினையைத் தீர்க்கும் முனைவன் இறைவனே என மணிவாசகர் கூறுகிறார். அவருடைய வாழ்வில் குரு வடிவாய் எழுந்தருளி வந்து இறைவனே வலிய வந்து ஆட்கொண்ட அனுபவம் மறக்க முடியாதது. வினையிலே அழுந்திக் கிடந்த அவரையும் இறைவன் நேரிலே வந்து ''நான் உன்னுடைய வினையைத் தீர்ப்பேன்'' என்று கூறி ஆட்கொண்டான். தன்னுடைய உண்மையான தன்மையை எடுத்துரைத்த இறைவன் திருவருளைப் பெற நான் என்ன செய்தேன் என மணிவாசகர் அங்கலாய்க்கின்றார்.

எம்மைத் துன்பத்திலிருந்து மீட்டு எடுத்த ஒருவரை நாம் நன்றி பாராட்டி வாழ்த்திநிற்போம். இது உலக மக்களின் குணவியல்பு. ஆனால் மணிவாசகர் தன்னை இறைவன் வலிய வந்து வினை கெட ஆட்கொண்டதற்குக் கைமாறாக எதுவும் செய்யவில்லையே என வருந்துகிறார். தான் ஓர் இரும்பினாற் செய்யப்பட்ட பாவையைப் போலச் செயலற்றிருந்ததைக் குறிப்பிடுகிறார். தான் செய்ய மறந்தவற்றை வரிசைப்படுத்திக் கூறுகிறார். நான் இறைவன் புகழை நாவினாற் பாடவில்லை. இறைவன் முன்னிலையில் ஆனந்தமாக நின்று கூத்தாடவில்லை.

மேலும் என் உணர்வைப் புலப்படுத்த அலறவும் இல்லை. உணர்ச்சிப் பெருக்கில் நா உலர்ந்து உரை தடுமாறி நிற்கவும் இல்லை. உடல் வாட்டம் அடைந்து ஆவி சோரவுமில்லை. கடவுளே என்னுடைய இத்தகைய நிலை எத்தகைய முடிவை எனக்குத் தருமோ என்னால் அறியவும் முடியவில்லையே! மணிவாசகரின் கூற்றுகள் தன்னுடைய செயற்பாடற்ற நிலையைச் சிந்தித்து அவலப்படுவதை நன்கு உணர்த்தி நிற்கின்றன. வினையைத் தீர்ப்பவன்முனைவன் என்பதை நன்கு உணர்ந்திருந்தும் கைமாறு செய்யாத கடையவனாகத் தான் வாழ்வதை அவர் நன்கு உணர்ந்து கொண்டார். இத்தகைய நிலைக்கு நாமும் ஆளாகக்கூடாதென வழி காட்டுகிறார்.

உலக வாழ்க்கையில் மனித உருவில் எம்மை வழி நடத்த வந்தவர்களைப்பற்றி நாம் எண்ணிப் பார்ப்பதில்லை. எமது மனப் போக்கிலே வாழ்வு நடத்துகிறோம். மேலும் ஆகாமிய வினைகளை ஈட்டிக் கொண்டிருக்கிறோம். நாம் மனம் போனபடி நடப்பதைத் தடுக்க மணிவாசகர் கூற்றுகளை மனங்கொள்வது சாலச் சிறந்தது.

*"வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று*
*போது நான் வினைதேட னென் பாய் போல*
*இணையனா னென்றுன்னை யறிவித் தென்னை*
*ஆட்கொண்டெம் பிராணனாய்க் கிரும் பின் பாவை*
*அனையநான் பாடேன்நின் றாடேன் அந்தோ*
*அலறிடேன் உலறிடேன் ஆவி சோரேன்*
*முனைவனே முறையோநான் ஆன வாறு*
*முடிவறியேன் முதலந்த மாயினானே".*

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்



# புன்னாலைக்கட்டுவன் வடக்கு
# அருள்தரு பூரண புஸ்கலை சமேத ஹரிஹரபுத்ர
# (ஐயனார்) தேவஸ்தான
# நூதன பிரதிஷ்டா அஷ்டபந்தன
# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் - 03.06.2011





## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



பேரன்புடையவர்களுக்கு:-

யாழ்ப்பாணம் புன்னாலைக் கட்டுவனில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் ஹரிஹர ஐயனாருக்கு இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். பல நிறைவான ஆலயங்களையும் நிறைவான கல்வியாளர்களையும் கற்ற வழிநின்று நடப்பவர்களையும் வித்துவான், கணேஸ் ஐயா போன்ற கல்விப் பெருந்தகைகளையும் கொண்ட இப்பிரதேசத்தின் வேண்டுவார் வேண்டுவதை ஈர்க்கின்ற கடவுளாக ஹரிஹர புத்திர ஐயனார் எழுந்தருளியுள்ளார். பழமையும் பெருமையும் வாய்ந்த இவ் ஆலயத்தில் நடைபெறும் கும்பாபிஷேகம் ஆலயத்துக்கும் ஊருக்கும் மக்களுக்கும் பெருமையை தருவதாகும். மனித பிறவியை மாண்புற செய்வது ஆலயவழிபாடும், ஆலயத்தில் நடைபெறும் விழாக்களும் ஆகும். இதனை வழிபடுவதன் மூலம் இறையின் பெரும் பயனை அனுபவிக்கலாம். இதனை உணர்த்தும் வகையில் எங்கெல்லாம் மனிதன் வாழ்கின்றானோ அங்கெல்லாம் ஆலயம் அமைத்து வழிபாடு செய்யும் பண்பை கொண்டுள்ளனர். இன்று நடைபெறும் கும்பாபிஷேகத்தை தரித்து மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக. ஆலயத்திற்கும், குருமார்களுக்கும், ஆலய பரிபாலன சபையினருக்கும் மக்களுக்கும் இறைவனுடைய ஆசி கிடைப்பதாக.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

## ஆலய வரலாறு

சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா

புராண இதிகாசங்களில் இருந்து தேவர்கள் பாற்கடலை கடைந்த கதையை நாமெல்லாம் அறிவோம். அப்படிக்கடைந்து பெற்ற அமுதினை தேவர்களிடமிருந்து அசுரர்கள் பறித்துச் சென்றனர். தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கிய திருமால் மோகினி வேடம்பூண்டு அசுரர்களை மயக்கி, ஏமாற்றி அமுதினை வாங்கி தேவர்கள் அனைவருக்கும் பறிமாறினார். பின்னர் இந்த மோகினி உருகொண்ட திருமாலுக்கும் சிவனுக்கும் பிறந்த திருக்குழந்தைக்கு தர்மசாஸ்தா என பிரம்மன் பெயர் சூட்டினார். இக்குழந்தைதான் இக் கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாய் அள்ளிக்கொடுக்கும் அரிகரனாய் அடியவரை காக்கும் ஐயனாராய் பிரகாசிக்கின்றார். தர்மசாஸ்தாவின் தோற்றம் சைவ, வைஷ்ணவ சமயங்களின் ஐக்கியத்திற்கு எடுத்துக்காட்டாக திகழ்கின்றது. இலங்கையின் வடபால் யாழ்ப்பாண நகரிலே புன்னை நகர் கிராமத்திலே ஒல்லாந்தர் காலத்திற்கு முன்பிருந்தே வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயமாக ஐயனார் ஆலயம் ஆன்றோர்களால் வழிபட்டு வரப்பட்டது. கர்ணபரம்பரையாக பல கதைகள் உள்ளன. புராதன காலத்திலேயே தேரோடிய கோவிலாக சிற்ப வேலைப்பாடுகள் உடைய திருத்தலமாக விளங்கியது மட்டுமல்லாது பொன்னால் ஆலயம் கட்டப்பட்டதனால்தான் இவ் ஊருக்கு பொன்னாலைக்கட்டுவன் என்ற பெயர் வந்ததாகவும் காலப்போக்கில் இது மருவி புன்னாலைக்கட்டுவன் ஆகியதென்றும் கூறுவர். ஒல்லாந்தர் காலத்தில் இடிக்கப்பட்ட இக்கோவிலின் எச்சங்கள் 1964, 1965ஆம் ஆண்டு களில் இக்கிராமத்து இளைஞர்களால் வீதி புனரமைப்புச் செய்யப்பட்டபோது நிலத்தடி சுடுமண் பாவைகள் பலகண்டெடுக்கப்பட்டு யாழ்ப்பாணம் நூதனசாலைக்கு ஒப்படைக்கப்பட்டன. இத்தகைய பழம்பெருமைகொண்ட ஐயனாரின் அற்புதங்கள் பலபல. இக்கோயிலில் நடுநிசியில் பல தேவகணங்கள் பூசை செய்வதை ஊர்வசிகள் பலரும்கண்டு மெய்யுருகி நின்றுள்ளனர். பல அடியார்களின் ஆதரவோடு புனரமைப்பு செய்யப்பட்டு ஐயனாருக்கு இன்று குடமுழுக்கு/மகாகும்பாபிஷேகம் செய்வதற்கு திருவருள்பாலித்துள்ளது. இவ் அற்புத திருத்தலத்தில் பூரண புஸ்கலை சமேதரராக வீற்றிருக்கும் ஹரிஹர புத்திரரை, ஐயனாரை, ஐயப்பனை வழிபட்டு இஷ்டசித்திகளையும் சகல ஐஸ்வர்யங்களையும் பெற்று துன்பதுயரங்களிலிருந்தும் விடுபட்டு மெய்யடியார்கள் இப்பூவுலகவாழ்வில் சந்தோசமாகவும் தன்னிறைவாகவும், நிம்மதியாகவும் நிறைவோடும் வாழ்வார்களாக.

-சுபம்

## ஆலய பிரதம குருவின் ஆசியுரை



'சுவாமியே சரணம் ஐயப்பா'

சைவமும், தமிழும், கலை கலாசாரமும் பேணிக்காத்து வருகின்ற புன்னை நகர் பதியில் அமர்ந்து வேண்டுவார் வேண்டுவதை ஈர்ந்தருளுகின்ற சிறிபூரணை புஷ்கலை சமேத ஹரிஹர புத்திரருக்கு வைகாசி மாதம் 20ஆம் நாள் மிருகசீரிட நட்சத்திரத்தில் கும்பாபிஷேக பெரும்சாந்தி திற அமைந்து சகல விக்கினங்களையும் நிவர்த்திசெய்து அடியார்கள் மனம் நிறைய அருள்பாலிக்கவும் ஆலய பொறுப்புரிமையாளர் சபையினருக்கும் புன்னை நகர் இந்து மதப்பற்றையும் தர்ம சேவைகளையும் பொதுச் சேவைகளையும் மிகவும் சிறப்பாக நடத்தி வருகின்ற இந்து இளைஞர் மன்றத்தினருக்கும் உபயகாரர் மற்றும் அடியார்கள் எல்லோருக்கும் ஐயப்பனின் அருள்கிடைக்கப்பெற்று பேரானந்தம் அடைந்து பெருவாழ்வு வாழ்வீர்களாக!!! கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற எனது ஆசி கூறி மனமகிழ்ந்து வாழ்த்துகின்றேன்.

'சர்வஜனா சுக்னோ பவந்து'

பிரம்மஸ்ரீ ந.சபாரத்தினக்குருக்கள்
யாழ்/புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஸ்ரீ துர்க்கா
தேவஸ்தான பிரதமகுரு, தர்மகர்த்தா, ஏழாலை
அத்தியடி முருகன் கோயில் மகோற்சவகுரு

கும்பாபிஷேக் குரு
'வேதமாகுகிரியாஜோதி'
'ஆகமகிரியாதிலகம்
சிவாச்சார்யரத்னா'

சாமியே சரணம் ஐயப்பா

## நம்பி வழிபடுவோருக்கு வேண்டியதைக் கொடுக்கும் எங்கள் ஐயனார்



ஈழத்தின் வடபால் யாழ்ப்பாணத்தில் புன்னாலைக்கட்டுவன் வடக்கு கிராமத்திலே அருளாட்சி புரிகின்ற பூரண புஸ்கலை சமேத ஹரிஹர புத்திரர் (ஐயனார்) ஆலயம் ஒல்லாந்தர் காலத்திற்கு முன்பிருந்தே வரலாற்று சிறப்பு மிக்க ஆலயமாக விளங்கியுள்ளது. இவ்வாலயம் பொன்னால் கட்டப்பட்டதால் இவ்வூரை பொன்னாலைக்கட்டுவன் என்ற பெயர் இக்கிராமத்திற்கு வந்ததாகவும் பின்னர் அது மருவி புன்னாலைக்கட்டுவன் ஆகியது என்றும் கூறுவர். ஒல்லாந்தர் வருகையின்பின் முற்று முழுதாக அழிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. நீண்டகால வரலாற்றுச் சான்றாக இவ்வாலயச் சுற்றாடலிலே நிலத்தின் கீழ் இருந்து பல நூற்றாண்டிற்கு முன் உருவாக்கப்பட்ட மண்ணினால் செய்யப்பட்ட பொம்மைகளின் சிதைந்த பல பாகங்கள் கண்டெடுக்கப்பட்டன. இவைகளில் சில யாழ்ப்பாண நூதனசாலைக்கு ஒப்படைக்கப்பட்டது. இதன் பின் இக்கிராம அடியவர்களினால் சிறிய மடாலயமாக அழிக்கப்பட்ட ஆலயத்திற்கு அருகில் அமைக்கப் பெற்று வழிபட்டு வருகின்றனர். ஐயனார் அடியவர்களின் பெருமுயற்சியினால் ஆரம்பத்தில் இருந்த அதேயிடத்தில் 1975ஆம் ஆண்டிற்கு பிற்பட்ட காலத்தில் முழுமையான ஆலயமாக கட்டப்பட்டு கும்பாபிசேகம் செய்வதற்கான ஆயத்த நிலையிலிருந்த வேளையில் 1987ஆம் ஆண்டு இந்திய அமைதிப்படை வருகையின் பின் ஏற்பட்ட யுத்தத்தினால் முழுமையாக தரைமட்டமாக்கப்பட்டது. 2002ஆம் ஆண்டு சமாதான சூழ்நிலையை பயன்படுத்தி மீண்டும் ஆலயத்தை புதிதாக அமைப்பதற்கு எம்மால் பரிபாலன சபை அமைக்கப்பெற்று அதே இடத்தில் 2004 ஆம் ஆண்டு வைகாசி திங்கள் ஐயனாரின் ஆசியுடன் அடிக்கல் நாட்டப்பெற்று இந்து கலாசார அமைச்சின் நிதியுதவியுடனும் எமது கிராம, அயல் கிராம, புலம்பெயர்ந்தவர்களின் நிதியுதவியுடனும் இவ்வாலயம் மீண்டும் புதுப்பொலிவு பெற்றது.

இ.அரிகரன்-தலைவர் (பரிபாலன சபை சார்பாக)

அசல் 22 கரட் நவீன காலத்திற்கேற்ப புதிய டிசைன்களில் தங்க நகைகளை செய்து பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்
TKN
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்
தொ.பே.இல: 222 9508
தேவி கருமார் நகை மாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
இல.171, 173, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்

சிறிராம் ஹாட்வெயார்
பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி,
கோண்டாவில்.
T.P:- 0779898541

விக்னேஸ்வரா
பெயின்ட்ஸ் & எலக்ரிக்கல்ஸ்
170, பலாலி வீதி,
கோண்டாவில்

வீ.எம்.கே.பிரதர்ஸ்
பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி,
கோண்டாவில்.

லிங்கம் சில்க் ஹவுஸ்
18, மொடேர்ன் மார்க்கற்,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

கஜமுகன் ஹாட்வெயார்
இல. 147, 149,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கிளாசிக் ஜீவல்ஸ்
தங்க நகை தயாரிப்பாளர்
ராஜா தியேட்டர் கட்டிடம்,
205/07, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 4473, 0776081701

சரவணா புடைவையகம்
SARAVANA TEX
வாடிக்கையாளர் தொடர்புகளுக்கு: 021 4650255
கிளை - I 526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே., தொ.நகல்: 021 222 1723
கிளை - II 770, 772, கே.கே.எஸ்.வீதி, நாச்சிமார் கோவிலடி. யாழ்ப்பாணம். தொ.பே., தொ.நகல்: 021 222 0421
Email: nallur.saravana@gmail.com

இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்
இராஜபுரம்
பெண்களுக்கான சாறி, சல்வார்,
ஆண்களுக்கான சேட், ரீசேட்,
ரெடிமேட் மற்றும் சிறுவர்களுக்
கான சகல ஆடைவகைகள்
பட்டுச் சேலைகளின் சோலை வனம்
RAJASWARIE TEXTILES
இல. 105, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. : 021 222 6953

கந்தவேலன் ரேடர்ஸ்
மல்ரிலக் வர்ணவங்கி
வடமாகாண ஏக
விநியோகஸ்தர்
110, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 2822 Fax :- 021 222 4496



ஐ.பி.எல். தொடரை முடித்து கொண்டு சொந்த ஊரான ராஞ்சி திரும்பிய அணித் தலைவர் தோனிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

# இலங்கையின் தோல்வியால் அதிர்ச்சி; ஆனாலும் என்னால் உதவ முடியாது

## முரளிதரன் தெரிவிப்பு

இங்கிலாந்துடனான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி எதிர்பாராத படுதோல்வியடைந்தமைகுறித்து இலங்கை அணியின் முன்னாள் வீரர் முத்தையா முரளிதரன் அதிர்ச்சித் தெரிவித்துள்ளார்.

எனினும் மோசமான நிலையிலுள்ள இலங்கை அணியை தோல்வியிலிருந்து மீட்பதற்காகத் தான் சர்வதேச போட்டிகளுக்கு மீண்டும் திரும்பும் நோக்கம் இல்லை என அவர் கூறியுள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் 800 விக்கெட்டுக்களையும் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் 519 விக்கெட்டுக்கையும் வீழ்த்தி உலக சாதனையாளராக விளங்கும் முத்தையா முரளிதரன் இங்கிலாந்தின் பிராந்திய போட்டிகளில் குளொசெஸ்டஷயர் அணிக்காக விளையாடவுள்ளார்.

இப் போட்டிகளுக்காக இந்தியாவிலிருந்து கடந்த திங்கட்கிழமை இங்கிலாந்து புறப்பட்டார் முரளிதரன். விமானம் ஏறிய வேளையில் முதல் டெஸ்ட் போட்டி சமநிலையில் முடியும் என்றே முரளி நம்பியிருந்தார்.

ஆனால் 11 மணித்தியாலங்களின் பின் அவர் லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் வந்திறங்கிய போது இலங்கை அணி தோல்வியடைந்து விட்டது என அறிந்து அவர் அதிர்ச்சியடைந்தாராம்.

இது குறித்து முரளி கூறுகையில்,

நான் இந்தியாவிலிருந்து விமானம் ஏறிய போது ஆட்டம் ஆரம்பிக்கவும் இல்லை. பெருமளவுநேரம் மழையினால் இழக்கப்பட்டிருந்தது. இப் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிபடைபதைத்தவிர வேறு முடிபு எதை யும் நான் எதிர்பார்க்கவில்லை.

அன்றுமாலை நான் விமான நிலையத்திலிருந்து இறங்கியபின் இலங்கை அணி 82 ஓட்டங்களுடன் சுருண்டுவிட்டது எனக் கேள்விபட்டு அதிர்ச்சியடைந்தேன் என்றார்.

ஆனால் மீண்டும் சர்வதேச போட்டி களுக்கு திரும்புவதற்கு நர்ன் எண்ணவில்லை யெனவும் முரளிதரன் கூறியுள்ளார்.

தற்போது நான் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன் நான் அவர்களுக்கு உதவ முடியாது ஏன் எனில் நான் அங்கு இல்லை.

அவர்கள் புதிய வீரர்களுக்கூடாக மற்றொரு வழியை கண்டறியவேண்டும். பயிற்றுநர், அணித்தலைவர்கள் அனைவரும் இருக்கிறார்கள் எனவே அவர்களே தம்மைத்தாமே கையாள வேண்டும்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் இப்படி நடப்பதுண்டு. சில வருடங்களுக்கு முன் இங்கிலாந்து அணி மேற்கிந்தியத்தீவுகளில் 46 ஓட்டங்களுடன் சுருண்டமை நினைவிலுள்ளது. எனவே இதை மறந்துவிட்டு லோர்ட்டஸில் நடைபெறவுள்ள இரண்டாவது டெஸ்ட் நோக்கி செல்லவேண்டும் என அவர் கூறினார்.

# அப்ரிடி வேண்டுகோள்

(கராச்சி)

இங்கிலாந்தின் உள்ளூர் இருபது-20 போட்டியில் பங்கேற்ற அனுமதி தர வேண்டும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு (பி.சி.பி) அப்ரிடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிரிக்கெட் சபையின் விதிகளை மீறியதை யில் பங்கேற்ற அனுமதி தரவேண்டும் என பி.சி.சி.யிடம் அப்ரிடி வேண்டுகோள் விடுத்துள்ளார். இது குறித்து பி.சி.பி. நிர்வாகி ஒருவர் கூறுகையில்,



அணித்தலைவர் பதவியிலிருந்து நீக்கியதனால் ஏற்பட்ட அதிருப்தி காரணமாக சர்வதேசக் கிரிக்கெட்டிலிருந்து அப்ரிடி ஓய்வு பெறுவதாக அறிவித்தார். தவிர பி.சி.பி. நிர்வாகிகள் குறித்து பரபரப்பான கருத்துக்களை வெளியிட்டார். இதனால் வீரர்கள் ஒப்பந்தப் பட்டியலில் இருந்து அப்ரடியை பி.சி.பி நீக்கியது. தவிர இவருக்கு வழங்கப்பட்ட அனைத்து தடையில்லா சான்றிதழ்களையும் திரும்பப் பெற்றது.

இதனால் அப்ரடி இங்கிலாந்து, இலங்கை என எந்த நாட்டிலும் உள்ளூர் இருபது - 20 போட்டிகளில் பங்கேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் இங்கிலாந்து ஹாம்ஷையர் அணிக்காக இருபது - 20 போட்டி

ஒப்புக்கொண்டுள்ள அப்ரிடி தனக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கையை சந்திக்க தயாராக உள்ளதாக பதில் அனுப்பியுள்ளார். தவிர இங்கிலாந்து இருபது - 20 போட்டியில் பங்கேற்ற அனுமதி கடிதம் வழங்க வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார் என்றார்.

### யூனிஸ் மறுப்பு

இதனிடையே அப்ரிடியின் கருத்துக்கள் குறித்து பயிற்சியாளர் வகார் யூனிஸ் கூறுகையில், அப்ரிடி என்ன கூறினார்என்று மீடியா மூலம்தான் தெரியும். பி.சி.பி. தலைவரை நேரில் சந்தித்த பின்தான் என்ன பிரச்சினை என்று தெரியவரும். இந் நிலையில் இது தொடர்பாக எந்தக் கருத்தும் கூறுவது சரியாக இருக்காது என்றார்.

# பிரஞ்சு பகிரங்க இறுதிப்போட்டிக்கு சானியா-வெஸ்னியா ஜோடி தகுதி

(பரிஸ்)

பிரஞ்சு பகிரங்க ரெனிஸ் தொடரின் மகளிர் இரட்டையர் இறுதிப்போட்டிக்கு இந்தியாவின் சானியா மிர்ஸா-ரஷ்யாவின் எலினா வெஸ்னியா ஜோடி தெரிவாகியுள்ளது.


பரிஸில் நேற்று நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் தரவரிசையில் நான்காம் இடத்தைப் பெற்றிருக்கும் அமெரிக்காவைச் சேர்ந்த லீஸெல் ஹூபர் மற்றும் விஸா ரோ மண்ட் ஜோடியை 6:3, 2:6, 6:4 என்ற விகிதத்தில் சானியா-வெஸ்னியா ஜோடி வென்றது.

சானியா-வெஸ்னியா ஜோடி இத்தொடரின் தரவரிசையில் 7ஆவது இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர்கள் இறுதிப் போட்டியில் தரவரிசைக்குட்படாத செக்குடியரசு ஜோடியான அன்ட்ரியா ஹலாவக்கோவா மற்றம் லூசி ஹலாடெக்வா ஜோடியை எதிர்த்து மோதவுள்ளனர்.

சானியாவும் வெஸ்னியாவும்கடந்த பெப்ரவரி முதல் ஜோடி சேர்ந்து விளையாடுகிறார்கள்.

24 வயதான சானியா மிர்ஸா கிராண்ட்ஸ்லாம் இறுதிப்போட்டி ஒன்றுக்கு தெரிவாகியமை இதுவே முதல்தடவை. 24 வயதான வெஸ்னியா 2009ஆம் ஆண்டு முதல் பிரஞ்சு மற்றும் அமெரிக்க பகிரங்கத் தொடர்களில் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகினார்.







இங்கிலாந்து - இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் இன்று லோட்சில் ஆரம்பமாகவுள்ளது. இதில் இலங்கை அணி வீரர்களின் படமும் இங்கிலாந்து அணியினர் பயிற்சியில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம்.

**NIRU TUITION CENTRE**
KONDAVIL
**Physics** திரு.செல்வன்
A/L 2011- Electronics
A/L 2013- Mechanics
(3898)


## பதில் பொலிஸ்...

இவர் இலங்கையின் 33-வது பொலிஸ்மா அதிபர் என்ற தகுதியை அடைகின்றார்.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர்கள் மீது பொலிஸார் நடத்திய தாக்குதலுக்கு பொறுப்பேற்றே மகிந்த பாலசூரிய தனது பதவியிலிருந்து நேற்று முன்தினம் விலகியிருந்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அழுத்தத்தின் பேரிலேயே பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய தனது பதவியை இராஜினாமாச் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-1)


## காணி விற்பனைக்கு

கொடிகாமம் கச்சாய் வீதியில் (திருநாவுக்கரசு வித்தியாலயத்திற்கு அருகில்) 5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0779402832

(5079) நேரம் 8.00A.M- 6.00P.M

யாழ் நகரில் இப்போது...

**DJ THASH & KARAOKE MUSIC GROUP**

உங்கள் அனைத்து வகையான மங்கல நிகழ்வுகளுக்கும் Digitel Sound மூலம் DJ செய்வதற்கும் KARAOKE CD'S மூலம் இசை நிகழ்ச்சி செய்வதற்கும் வல்லவர்கள்.



நாடுங்கள்

தொடர்புகளுக்கு:-



மல்லாகம், யாழ்ப்பாணம்.
சு.சுஜிதர்:- 0779596650
0786057534
சு.சுஜிராஜ்:- 0757361716
(5062)


## மனித உரிமைகளைப்...

இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவும், மனிதவுரிமைகள் பொதுஸ்தாபனமும் இணைந்து மனிதஉரிமைகளும், பொது சேவைகளும் என்ற தொனிப்பொருளில் ஒரு நாள் கருத்தரங்கு ஒன்றை கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடத்தியது.

இக் கருத்தரங்கில் பங்குபற்றியவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பிரதமர் டி.எம்.ஜயரட்ன தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இன்று மனிதவுரிமைகள் தொடர்பாக முழு உலகிலும் பேசப்படுகின்றது. இதற்கு மனிதன் வளர்ச்சியடைந்திருப்பதே காரணம். ஆனால் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் இப்படியான நிலைமை இருக்கவில்லை.

மனிதன் இன்று விஞ்ஞான ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும், சமூக ரீதியாகவும் வளர்ச்சியடைந்துள்ளான். மனிதர்கள் மத்தியில் பௌதிக ரீதியாக ஏற்பட்டிருக்கும் வளர்ச்சி ஆன்மீகத்திலும் ஏற்பட வேண்டும். மனிதன் ஆன்மீக ரீதியாகவும் வளர்ச்சியடைய வேண்டும் என எல்லா மதங்களும் வலியுறுத்துகின்றன. மனிதன் பௌதிக ரீதியாகவளர்ச்சியடைந்திருப்பதுபோன்று ஆன்மீக ரீதியாகவும் மேம்பாடு அடையாதிருப்பதால்தான் மனிதவுரிமைகள் மீறப்படுகின்றன. ஒவ்வொரு மனிதனும் தத்தம் சமய கலாசார விழுமியங்களின் அடிப்படையில் மேம்பாடு அடைவானாயின் மனிதவுரிமை மீறல் என்ற பேச்சுக்கே இடமிராது.

ஆப்கானிஸ்தானில் குண்டுகளை வீசி 12 அப்பாவிக் குழந்தைகளை மேற்கு நாட்டுப் படைகள் படுகொலை செய்துள்ளன. இதேநாடுகள் லிபியா மீது குண்டுகளை வீசி அந்நாட்டை அழித்து வருகின்றன. இவ்வாறு மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டுவரும் மேற்குலக நாடுகளில் சில மனிதவுரிமைகளைப் பாதுகாப்பதற்காக பல விதமான நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கும்எம்மை மனிதவுரிமை மீறலில் ஈடுபட்டதாகக் காட்ட முயற்சி செய்கிறார்கள்.

மூன்றாம் மண்டல நாடுகளில்மனிதவுரிமை மீறல்கள் இடம் பெறுவதாகக் கூறுகின்றனர். எமது நாட்டுக்குப் பெரும் தலையிடியாக சுமார் 3 தசாப்தங்கள் நீடித்த பயங்கரவாதத்தை எமது சட்டங்களின் அடிப்படையில் முழுமையாகக் கட்டுப்படுத்தியுள்ளோம். சர்வதேச சட்டங்களுக்கு அமைவாகவே மனிதாபிமான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இன்று நாட்டில் அச்சம், பீதியற்ற அமைதியானசூழல் நிலவுகின்றது என அவர் தனதுரையில் தெரிவித்துள்ளார். (ச-5)

## இராணுவத்திற்கு அனு...

விளக்க நடவடிக்கை எடுப்போம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இராணுவத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட யுத்த வெற்றியின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் சர்வதேச கருத்தரங்கு கொழும்பு கலதாரி ஹோட்டலில் கடந்த 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டு நேற்று முடிபடைந்தது.

41 நாடுகளைச் சேர்ந்த (இலங்கை உட்பட) 80 பிரதிநிதிகள் மற்றும் உள்ளூர் பாதுகாப்பு தரப்பு உயர் அதிகாரிகள், அரசஉயர் மட்ட அதிகாரிகள், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் என சுமார் 300 பேர் இந்தக்கருத்தரங்கில்கலந்துகொண்டனர்.

கருத்தரங்குகள் இனிதே நடைபெற்று முடிந்ததை அடுத்து இராணுவத் தளபதியினால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்று கருத்தரங்கு மாநாட்டு மண்டபத்திலேயே நடத்தப்பட்டது. இதன்போது மேற்படி மூன்று நாள் கருத்தரங்கு திருப்திகரமாக நடைபெற்றதாக குறிப்பிட்ட இராணுவத் தளபதி தொடர்ந்து கூறுகையில்,

யுத்தத்தின்போது பெறப்பட்ட அனுபவங்கள் தொடர்பிலும் இலங்கையின் எதிர்காலம் குறித்த விடயங்களையும் சர்வதேசத்துடன் பகிர்ந்து கொண்டதில் எமது இராணுவம் பெருமையடைகிறது. உலகில் எந்தவொரு இராணுவத்தினருக்கும் கிடைக்காத ஒரு சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்துள்ளது என்று அவர் மேலும் கூறினார். (ச-5)

## அரசியல் தீர்வு கிடை...

கிரசுடன் தொடர்ச்சியாகப்பேச்சு வார்த்தைகளையும் கலந்துரையாடல்களையும் மேற்கொண்டு வருகின்றோம். அரசாங்கத்திடம் இருந்து தீர்வைப் பெறும்போது அதில்முஸ்லிம்களும் பங்காளியாக இருப்பார்கள்.

எதிர்வரும் ஜுன் மாதம் 23ஆம் திகதி இடம்பெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 26 இடங்களில் இரண்டு அம்பாறை மாவட்டத்திலும், 24 இடங்கள் யாழ்ப்பாணத்திலும் இடம்பெறவுள்ளன. இந்த 26 தேர்தல் தொகுதியையும் எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே கைப்பற்றும்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது மாற்றுக் கட்சிகளை சென்ற முறை ஆதரித்த தமிழ் மக்கள் இந்தமுறை உண்மையினை உணர்ந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை ஆதரிப்பார்கள் என்பது அசைக்கமுடியாத நம்பிக்கையாகும் என்றார். (ச-5)

## தனித் தமிழீழம் அமை...

பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமிழீழம் சுதந்திர தேசமாவதற்கு அனைத்துநாடுகளின் பார்வையாளர்களின் கண்காணிப்பில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனவும் அவர் தனதுரையில் வலியுறுத்தியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்றக் கட்டிடத்தில் நடந்த இக் கருத்தரங்கில் வைகோ உரையாற்றியபோதே மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஐரோப்பாவின் வசந்த காலத்தை இப்போது அனுபவிக்கிறீர்கள். அது போல, ஈழத்தமிழ் மக்களுக்கும் வசந்தம் விடியட்டும். உலகின் ஜனநாயக நாடுகள் அதற்கு வழி காட்டட்டும். உலக நாடுகள் ஈழத்தமிழரின் கண்ணீரை பல ஆண்டுகள் கண்டு கொள்ளவில்லை. ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றியமைக்காக இச் சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

1995ஆம் ஆண்டு செர்பிய முஸ்லிம்கள் 8ஆயிரம் பேரை படுகொலை செய்தமைக்காக பொஸ்னியாவின் படைத்தளபதி ராட்ரிகோ மிலாடிக்கை கடந்த வாரம் கைது செய்தமை போன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஏன் கைது செய்ய முடியாது? அவரது சகோதரர்களையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் யாராவது ஒரு சிங்களப் பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்ததாக இலங்கைச் சட்டம் கூடச் சொன்னது இல்லையே? அப்படி அவர்கள் நடந்துகொண்டதாக எவராவது நிரூபித்தால் நான் தமிழீழத்தை ஆதரித்துப் பேசுவதை விட்டுவிடுகிறேன்.

தமிழ் ஈழம் சுதந்திர தேசமாவதற்கு வாக்கெடுப்பு நடத்தவேண்டும். அனைத்து நாடுகளின் பார்வையாளர்களின் கண்காணிப்பில் இவ் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். வெளிநாடுகளில் உள்ள ஈழத் தமிழர்களும் அந்தந்த நாடுகளிலேயே இவ்வாக்கெடுப்பில் பங்கேற்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றார். (ச-5)


புதிய முகவரியில் புதுப்பொலிவுடன் நாம்...

**CB Computer Academy**

*for Computer Education, Education through Computer & Computer Services*

கணனிக் கல்விக்கும், கணனியூடான கல்விக்கும், கணனிச் சேவைகளுக்கும்



A Training Centre Registered with Tertiary and Vocational Education Commission under P25/0031
மூன்றாம் நிலைக் கல்வி தொழிற்பயிற்சி ஆணைக்குழுவுடன் P25/0031 இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனம்
No. 325, K.K.S Road, Thavady Junction, Kokuvil * TP: 0213217903 * Email: cbcomputeracademy@yahoo.com

**STUDY IN UK**

யாழ். மாணவர்களின் நம்பிக்கையை வென்ற நாம் உங்களின் தகைமைக்கேற்ற விசாக்களை U.K இல் பெற்றுத்தர தயாராக இருக்கின்றோம்.

- ✦IELTS தேவையில்லை.
- ✦O/L தகைமை போதுமானது.
- ✦ஒரு வாரத்தினுள் ஆவணங்கள் VFS இல் கையளிக்கப்படும்.
- ✦மொத்தச் செலவு 8லட்சம் மட்டுமே (Sponsor, college fee, p.fee)

நாம் குறிப்பிடும் காலப்பகுதியினுள் நீங்கள் U.K செல்லாவிட்டால் உங்கள் சகல பணத்தினையும் மீளப் பெறலாம்.

கடந்த மாதங்களில் எம் மூலமாக விசா பெற்றுச் சென்றோரில் சிலர்




+யாழில் உள்ளவரால் யாழ்.மாணவர்களுக்காக செய்யப்படும் அரிய சேவையினை தவறவிடாதீர்கள்.

"முயற்சி திருவினையாக்கும்"

தொடர்புகளுக்கு :-
Sana : 0776277767 (5085)
GLOBAL VISION (PVT) Ltd
247, Palaly Road, Kantharmadam.

## பொருளியல் கருத்தரங்கு

A/L 2011

யாழ் நகர் DMI ⇦ S.S.சிறி ⇨ வடமராட்சியில் CRYSTAL (நெல்லியடி)

- 10.06.2011 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
- 12 தேர்ச்சிகளுக்கும் 12 வெளியீடுகள் வழங்கப்படும்.
- பல்தேர்வு, கட்டுரை, கட்டமைப்பு ரீதியான எதிர்பார்க்கை குறிப்புக்கள் வழங்கப்படும்.

(C-3349)


இப்பத்திரிகை வலம்புரி அன். கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.06.2011 இல் அச்சிட்டு வெளியிடப்ப